# பகுதி – 5

# 1.1 ஐக்கிய முன்னணி ஆட்சி
# (UNITED FRONT GOVERNMENT 1996-1998)

## *1. வாஜ்பாய் அரசு, 1996*

### *11-வது பொதுத் தேர்தல்*

*நரசிம்மராவ் பதவிக்காலம் முடிவடையும் நிலையில் 1996 ஏப்ரல், மே மாதங்களில் நான்கு கட்டங்களாக பாராளுமன்றத் தேர்தல் நடந்தது. இதில் காங்கிரஸ், பாரதீய ஜனதா, தேசிய முன்னணி ஆகியவற்றுக்கு இடையே மும்முனைப்போட்டி நடந்தது. இந்த தேர்தலின் போது காங்கிரசும் பிற தேசியக் கட்சிகளும் மக்களிடையே மதிப்பிழந்திருந்தன. 1996, மே.8ல் ஓட்டு எண்ணிக்கை நடைபெற்றது.*

*இதில் காங்கிரஸ் 136 இடங்களிலும், பாரதீய ஜனதா கூட்டணி 186 இடங்களிலும், தேசிய முன்னணிக் கூட்டணி 111 இடங்களிலும் வெற்றி பெற்றன. புதிய ஆட்சியை அமைக்க மாட்டோம் என்று காங்கிரஸ் அறிவித்தது. இதனால் தேர்தலில் அதிக இடங்களைப் பெற்ற பாரதீய ஜனதாவும், 3-வது அணியாக விளங்கிய தேசிய முன்னணியும் ஆட்சியமைக்கும் முயற்சியில் இறங்கினார்கள்.*

*பாரதீய ஜனதாவின் பாராளுமன்றத் கட்சித்தலைவராக வாஜ்பாய் தேர்ந் தெடுக்கப்பட்டார். 3-வது அணியின் பாராளுமன்றக் கட்சித் தலைவராக முன்னாள் கர்நாடக முதலமைச்சர் தேவகௌடா தேர்ந்தெடுக்கப்பட்டார். தேவ கௌடாவுக்கு காங்கிரசும் ஆதரவு அளித்தது.*

### 1.2 வாஜ்பாய் பதவி ஏற்பும், ராஜினாமாவும்

*ஆனால் எந்தக் கட்சிக்கும் மெஜாரிட்டி கிடைக்காத காரணத்தால் தனிப் பெரும் கட்சியாக விளங்கிய பாரதீய ஜனதா கட்சியை மந்திரி சபை அமைக்க குடியரசுத்தலைவர் சங்கர் தயாள் சர்மா அழைத்தார். இதனைத் தொடர்ந்து 1996, மே 16-ல் 11-வது பிரதமராக வாஜ்பாய் பதவியேற்றார். அப்போது அவருக்கு வயது 70.*

*வாஜ்பாயுடன் சிக்கந்தர் பகத், ராம் ஜேத்மலானி, முரளி மனோகர் ஜோஷி, சுஷ்மா சுவராஜ் போன்ற 10 மந்திரிகளும் பதவி ஏற்றார்கள். மே 31-ல்*

பாராளுமன்றத்தில் மெஜாரிட்டியை நிரூபிக்கவேண்டும் என்று வாஜ்பாய்க்கு குடியரசுத்தலைவர் கட்டளையிட்டு இருந்தார்.

ஆனால் வாஜ்பாய் மே 27-ம் தேதியே பாராளுமன்றத்தைக் கூட்டினார். இதில் நம்பிக்கை கோரும் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. விவாதம் நடந்தது. இறுதியில் விவாதத்துக்குப் பதிலளித்து வாஜ்பாய் 90 நிமிடங்கள் பேசினார். அவர் தனது பேச்சின் கடைசியில் எனது அரசுக்கு மெஜாரிட்டி இல்லாததால் பிரதமர் பதவியை ராஜினாமா செய்கிறேன் என்று அறிவித்தார்.

இதனால் பாராளுமன்றத்தில் ஓட்டெடுப்பு நடைபெறவில்லை. குடியரசுத் தலைவரைச் சந்தித்து வாஜ்பாய் ராஜினாமாக் கடிதத்தைத் மே 28-ல் கொடுத்தார். பதவி ஏற்ற 13 நாட்களில் வாஜ்பாய் ஆட்சி அற்ப ஆயுளில் கவிழ்ந்தது.

## 1.3 தேவகவுடா (1996 - 1997)

### ஐக்கிய முன்னணி அமைக்கப்படுதல்

வாஜ்பாய் பதவி விலகிய பிறகு எந்த ஒரு அரசியல் கட்சியும் ஆட்சி அமைக்கும் நிலையிலோ, அல்லது மற்றொரு மக்களவைத் தேர்தலைச் சந்திக்கவோ தயாராக இல்லை. எனவே சூழ்நிலை காரணமாக காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தவிர பாரதீய ஜனதா கட்சியை எதிர்க்கும் 13 கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டணியை அமைத்தன. அதற்கு ஐக்கிய முன்னணி என்று பெயரிடப்பட்டது.

ஐக்கிய முன்னணியின் தலைவராக தேவகவுடா தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே புதிய மந்திரி சபை அமைக்குமாறு தேவகவுடாவுக்கு குடியரசுத் தலைவர் அழைப்பு அனுப்பினார். தேவகவுடாவுக்கு காங்கிரசும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் வெளியிலிருந்து ஆதரவு தர சம்மதித்தன.

### பிரதமராக தேவகவுடா பதவியேற்றல்

1996, ஜுன் 1-ல் குடியரசுத்தலைவர் சங்கர் தயாள் சர்மா பிரதமராக தேவ கவுடாவுக்கு பதவிப் பிரமணம் செய்து வைத்தார். அவர் தலைமையில் 21 பேர் கொண்ட மந்திரி சபையும் பதவியேற்றது. ஜுன் 12-ம் தேதிக்குள் மெஜாரிட்டியை நிரூபிக்க வேண்டும் என்று தேவகவுடாவுக்கு குடியரசுத் தலைவர் கட்டளை பிறப்பித்தார்.

தேவ கவுடா மெஜாரிட்டியை நிரூபிப்பதற்காக பாராளுமன்றம் ஜுன் 11-ம் தேதி கூடியது. இருநாட்கள் விவாதம் நடந்தது. 12-ம் தேதி மாலை 6 மணிக்கு குரல் ஓட்டெடுப்பு நடந்தது. பாரதீய ஜனதா எம்பிக்கள் மட்டுமே எதிர்ப்புக் குரல் கொடுத்தனர். குரல் ஓட்டெடுப்பில் நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேறிய தாக சபாநாயகர் அறிவித்தார். இதன் பிறகு ஜுன் 28-ல் தேவகவுடா தனது

மந்திரி சபையை விரிவுபடுத்தினார். இதனால் மேலும் 14 பேர் இணைந்து மந்திரி சபையில் மந்திரிகளின் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்தது.

## பிரதமர் எச்.டி. தேவ கவுடாவின் நிர்வாகம்

### 1. குறைந்தபட்ச பொதுத்திட்டம்

பதவி ஏற்ற பிறகு தேவகவுடா 1996, ஜுன் 5-ம் தேதி 25 பக்கம் கொண்ட குறைந்தபட்ச பொதுத்திட்டம் ஒன்றை வெளியிட்டார். இதில் கூட்டணி அரசாங்கத்தின் கொள்கைகளும், செயல் திட்டங்களும் அடங்கியிருந்தன. புதிய அரசில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகள் நேர்மையோடும், பொறுப்போடும், வெளிப்படையாகவும் செயல்பட வேண்டும். கூட்டாட்சி, அதிகாரப் பரவல், சமத்துவம், சமூக நீதி, மனித உரிமை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். இவைகளே அரசின் வழிகாட்டும் நெறிகளாக இருக்கும் என்று செயல் திட்டத்தில் கூறப்பட்டிருந்தது.

### 2. முரண்பாடு ஆரம்பம்

மத்தியில் ஆட்சியமைக்க ஜனதா தளம் கட்சி காங்கிரசின் ஆதரவைப் பெற்றதற்கு ஜனதா தளத் தலைவர்களில் ஒருவரான ராமகிருஷ்ண ஹெக்டே எதிர்ப்புத் தெரிவித்தார். மேலும் தேவகவுடாவை பிரதமராகத் தேர்ந்தெடுத்ததையும் விமர்சனம் செய்தார். இதைத் தொடர்ந்து ஹெக்டே கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். பதவி ஏற்பு விழா முடிந்து ஒரு சில வாரத்துக்குள்ளாகவே தலைவர்களிடையே கருத்து வேறுபாடுகள் உருவாகத் தொடங்கின. பதவியை காப்பாற்றிக் கொள்வதற்கு யாரிடமும் சமரசம் செய்து கொள்ள மாட்டேன் என்றார் தேவகவுடா.

### 3. மாநிலப் பிரச்சனைகளுக்கான தீர்வு

தேவகவுடா ஆட்சிக்காலத்திலும் காவிரி நதி நீர்ப்பங்கிட்டுப் பிரச்சனை தலைதூக்கியது. முன்பு கர்நாடக முதல்வராக இருந்த போது காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை ஏற்க மறுத்தவர் தேவ கௌடா. ஆனால் இப்போது அதே பிரச்சனையை நடுவராக இருந்து தீர்த்து வைக்க வேண்டிய நிலைக்கு ஆளானார் தேவகௌடா. உயர்மட்ட பேச்சு வார்த்தைகளின் விளைவாக தமிழ்நாட்டிற்கு 5 டி.எம்.சி. தண்ணீர் விட கர்நாடக அரசு சம்மதித்தது. இதே போல் கர்நாடக அரசு ஆல்மாட்டி அணையின் உயரத்தை கூட்டுவது பற்றிய முடிவை ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு கடுமையாக எதிர்த்தார். இந்த முடிவு பச்சாவத் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு எதிரானது என்றார் நாயுடு. ஆனால் இது பற்றிய எந்த முடிவும் தேவகவுடாவால் எடுக்க முடியவில்லை.

### 4. பிற நிர்வாக நடவடிக்கைகள்

தேவகவுடா ஆட்சிக்காலத்தில் திட்டக் கமிஷன் மறுசீரமைக்கப்பட்டது.

இதற்கு முக்கியக் காரணம் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் பொருளாதார வடிவம் கொடுக்க வேண்டும் என்பதேயாகும். எனவே முன்னாள் நிதி அமைச்சர் மதுதண்டவதே திட்டக் கமிஷன் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் வேலை வாய்ப்பு அதிகரிப்பு, வறுமை ஒழிப்பு, பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை ஒழித்தல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் திட்டங்கள் தீட்டப்படும் என்றார்.

b. அடுத்து தேவகவுடா அரசு பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து அரசாங்க மூலதனப் பங்குகளை விலக்கிக் கொள்வது பற்றி முடிவெடுத்தது. இதற்குக் காரணம் அரசுப் பங்குகளில் மூலதனத்திற்கு ஏற்ப வருமானம் கிடைக்காததே யாகும். இதற்காக முன்னாள் திட்டக்கமிஷன் உறுப்பினர் ஜி.வி. ராமகிருஷ்ணன் தலைமையில் பொது மூலதன விலக்கல் கமிஷன் அமைக்கப்பட்டது. இந்தக் கமிஷன் அடுத்த ஐந்திலிருந்து பத்தாண்டு காலத்திற்கு பொது நிறுவனங்களிலிருந்து படிப்படியாக அரசாங்க பங்கு மூலதனத்தைப் விலக்கிக் கொள்வதற்கான நீண்டகாலத் திட்டத்தைத் தயாரித்துத் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

c. தேவகவுடா ஆட்சிக்காலத்தில் இந்தியாவைத் தொழில் நுட்ப வளர்ச்சிக்குத் திருப்புவதற்காக 2000 ஆண்டுக்களுக்கான தொழில்நுட்ப தொலை நோக்குத் திட்டம் ஒன்று வெளியிடப்பட்டது. இந்தத் திட்டத்தைத் தயாரித்தவர் விஞ்ஞானி அப்துல்கலாம் ஆவார். இந்தத் திட்டத்தின்படி பொது சுகாதாரம், விவசாயம், செய்திப் போக்குவரத்து, மின்சாரம், பொறியியல் போன்ற துறைகளில் செய்யக்கூடிய மாற்றங்கள் பற்றி இந்த திட்டத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது.

d. 1996, ஆகஸ்ட் 15-ல் தனது முதல் சுதந்திரத்தின உரையில் உத்திரகாண்ட் என்ற புதிய மாநிலம் அமைக்கப்படும் என்று அறிவித்தார். உத்திர பிரதேசத்திலுள்ள 8 மலை மாவட்டங்களைக் கொண்டு இந்த மாநிலம் அமைக்கப்பட்டது. இது 51 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவையும் 60 லட்சம் மக்களையும் கொண்டிருக்கும். தேவகவுடாவின் இந்த அறிவிப்பு ஒரு தேர்தல் தந்திரம் என்று எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்தன.

e. 1995, ஜூன் 2-ம் தேதி செல்வி மாயாவதி லக்னோ விருந்தினர் விடுதிக்கு வந்த போது தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அமைக்கப்பட்ட ரமேஷ் சந்திரா கமிட்டி தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. அதில் இச்சம்பவத்தில் முலயாம்சிங் யாதவ், பெனிபிரசாத் வர்மா ஆகிய மத்திய மந்திரிகள் தொடர் புடையவர்கள் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் அந்த அமைச்சர்கள் மீது தேவகௌடா எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அரசியல் குற்றமயமாகி வருவதாக கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

f. 1996, செப். 19-ல் சுரேஷ் மேத்தா தலைமையிலான பாரதிய ஜனதா அரசு கலைக்கப்பட்டு குடியரசுத்தலைவர் ஆட்சியின் கீழ் வைக்கப்பட்டது. அதே போல் அக்டோபர் 17-ல் உத்திரப்பிரதேசத்தில் காணப்பட்ட அரசியல் குழப்ப நிலையை பயன்படுத்த குடியரசுத்தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப் பட்டது. இந்த 2 மாநிலங்களிலும் சட்டப்பேரவைகள் கலைக்கப்பட வில்லை. இதனால் மத்திய மாநில உறவுகள் பற்றி விவாதிக்கப்பட்டது. அரசியல் சட்டத்தின் 356-வது விதியை நீக்குவது பற்றியும் விவாதங்கள் நடைபெற்றன.

### தேவ கவுடாவின் வீழ்ச்சி

தேவகவுடாவுக்கு வெளியிலிருந்து ஆதரவளித்து வந்த காங்கிரஸ் தனது ஆதரவை 1997, மார்ச் 30-ல் விலக்கிக் கொண்டது. இதனால் லோக்சபாவில் தேவகவுடா நம்பிக்கை வாக்கைப் பெற வேண்டியதாயிற்று. இதைத் தொடர்ந்து தேவகவுடா மந்திரி சபை மீது நம்பிக்கை கோரும் தீர்மானம் மீது 1997, ஏப். 11ல் பாராளுமன்றத்தில் ஓட்டெடுப்பு நடந்தது.

மொத்தம் 456 பேர் சபைக்கு வந்திருந்தனர். தேவகவுடாவுக்கு ஆதரவாக 158 ஓட்டுகளும் எதிராக 292 ஓட்டுகளும் விழுந்தன. 6 எம்.பிக்கள் ஓட்டெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இதனால் பதவியேற்ற 10 மாதம் பத்து நாட்களில் தேவகவுடா மந்திரிசபை கவிழ்ந்தது. உடனே தேவகவுடா மந்திரி சபைக்கூட்டத்தைக் கூட்டி அவசர ஆலோசனை நடத்தினார். மந்திரி சபை ராஜினாமா செய்வது என்றும், ஆனால் பாராளுமன்றத்தைக் கலைக்க சிபாரிசு செய்வதில்லையென்றும் முடிவு செய்யப்பட்டது. குடியரசுத் தலைவரைச் சந்தித்து தனது ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்தார். தேவகவுடா

இச்சமயத்தில் தேவகவுடாவிற்குப் பதிலாக வேறு ஒருவரை பிரதமராகக் தேர்ந்தெடுத்தால் ஆதரவு தரத்தயார் என்று காங்கிரஸ் அறிவித்தது.

## 1.4 இந்திரா குமார் குஜ்ரால் (1997 - 1998)

தேவகவுடா பதவி விலகிய பிறகு எந்தப் பிரச்சனைக்கும் ஆளாகாக ஐ.கே. குஜ்ராலை பிரதமராகத் தேர்ந்தெடுப்பது என்று ஐக்கிய முன்னணி உயர் மட்டக்குழு முடிவு செய்தது. அதன்படி 1999, ஏப்ரல் 21-ல் 78 வயதான குஜ்ரால் பதவி ஏற்றார். குஜ்ரால் மந்திரி சபையில் திமுகவைச் சார்ந்த முரசொலி மாறன், டி.ஆர். பாலு, டி.ஜி. வெங்கட்ராமன், என்.வி.என். சோமு ஆகிய நால்வரும் இடம் பெற்றனர் மந்திரி சபையில் சேர்வதற்கு தமிழ் மாநில காங்கிரஸ் முதலில் மறுத்த போதிலும் பின்னர் அக்கட்சியைச் சார்ந்த சிதம்பரம், அருணாசலம், எஸ்.ஆர். பாலசுப்ரமணியம், தனுஷ்கோடி ஆதித்தன் ஆகியோர் மந்திரிகள் ஆனார்கள். ஏப்ரல் 22-ல் குஜ்ரால் பாராளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கு பெற்று வெற்றி பெற்றார்.

பொதுவாக அமைச்சரவை அமைப்பது பிரதமரின் தனிச் சிறப்புரிமை யாகும். ஆனால் குஜ்ரால் அவ்வாறு சுதந்திரமாக செயல்பட முடியாமல் போய்விட்டது. அமைச்சரவை அமைப்பதிலேயே ஐக்கிய முன்னணித் தலைவர்களிடம் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. எனவே ஊழல் புகார்களில் சம்பந்தப்பட்ட பலர் அமைச்சர்கள் ஆனார்கள். அவர்களை குஜ்ராலால் நீக்க முடியவில்லை. எனவே மந்திரிகளை நியமிப்பதிலும், விலக்குவதிலும் உள்ள தனி உரிமையை இழந்த நிலையிலேயே காணப்பட்டார் குஜ்ரால்.

அடுத்து ஐ.கே. குஜ்ரால் பிரதமராகப் பொறுப்பேற்றவுடன் தனது நீண்டகால நண்பரும், ஆலோசகருமான பவானி சென்குப்தா என்பவரை வெளி உறவுக் கொள்கைக்குழு உறுப்பினராக நியமித்தார். ஆனால் இவரது பின்னணியை எதிர்க்கட்சிகள் விமர்ச்சித்தது. சென்குப்தா ஒரு அமெரிக்க சி.ஐ.ஏ. ஏஜெண்ட் என்று கூறப்பட்டார். கடுமையான எதிர்ப்பு ஏற்படவே சென்குப்தா ராஜினாமா செய்தார். இதுவும் குஜ்ரால் தனக்கு ஏற்படும் பிரச்சனைகளை சமாளிக்க முடியாத ஒரு இயலாத மனிதராகவே சித்தரித்தது.

அடுத்து ஊழலை ஒழிப்பதிலும் ஐ.கே. குஜ்ராலின் இயலாமை வெளிப்பட்டது. பீகாரில் நடைபெற்ற கால்நடைத் தீவன ஊழலில் சம்பந்தப் பட்ட மத்திய இணை அமைச்சர் சந்திரதேவ பிரசாத் வர்மாவுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய சி.பி.ஐ குடியரசுத்தலைவரிடம் அனுமதி பெற்றது. உடனே சம்பந்தப்பட்ட மந்திரி பதவி விலக வேண்டும் என்றார் குஜ்ரால். ஆனால் சந்திரதேவ பிரசாத் வர்மா பதவி விலக மறுத்துவிட்டார். மேலும் இதே ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட லல்லு பிரசாத்யாதவ் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. இது குஜ்ரால் ஒரு செயல்பட முடியாத பிரதமர் என்பதையே வெளிப்படுத்தியது.

இதைவிட ஒருபடி மேலே போய், பீகார் கால் நடைத் தீவன ஊழலில் சம்பந்தப்பட்ட லல்லு பிரசாத் யாதவ் உட்பட 58 பேர் மீது நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறிய மத்திய புலனாய்வுத்துறைத் தலைவர் ஜோகிந்தர்சிங் மாற்றப்பட்டு அவருக்குப் பதில் ஆர்.சி.சர்மா என்பவர் நியமிக்கப்பட்டார். இது பிரதமரின் நம்பகத்தன்மையையும், நடுநிலையையும் கடுமையாகப் பாதிப்பதாக அமைந்தது. அரசாங்கம் புலனாய்வுப் பணிகளில் குறுக்கிடுவதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

1997, ஆகஸ்ட் 15-ல் ஐ.கே. குஜ்ரால் செங்கோட்டையில் கொடியேற்றி வைத்து உரையாற்றினார். நாட்டில் ஊழலை ஒழிக்கப் போவதாக சூளுரைத்தார். ஆனால் நடைமுறையில் ஊழலுக்கெதிரான எந்த நடவடிக்கை களையும் அவரால் மேற்கொள்ள முடியவில்லை. கூட்டணி அரசில் பிரதமர் சுதந்திரமாகவும் திறமையாகவும் செயல்பட முடியாது என்பது நிரூபண மானது.

## ஐ.கே. குஜ்ராலின் வீழ்ச்சி

குஜ்ரால் தலைமையிலான அரசாங்கம் எதுவும் சாதிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் செயல்படாத ஒரு அரசாகவே இருந்தது. ஐக்கிய முன்னணித் தலைவர்களிடையே காணப்பட்ட கருத்து வேறுபாடுகள், மந்திரி களின் ஊழல்கள், பிரதமரின் திறமையின்மை மற்றும் இயலாமை ஆகிய காரணங்களால் ஐக்கிய முன்னணி அரசு வீழ்ச்சியை நோக்கிச் சென்றது.

காங்கிரஸ் ஆதரவுடன் 1997 ஏப்ரலில் பதவிக்கு வந்த குஜ்ரால் தலைமையிலான அரசு ஏழு மாத காலமே ஆட்சியில் நீடிக்க முடிந்தது. அவர் ஆட்சி கவிழக் காரணம் ஜெயின் கமிஷன் அறிக்கையே ஆகும்.

ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதின் பின்னணியை ஆராய்வதற்காக அமைக்கப்பட்டது ஜெயின் கமிஷன். இக் கமிஷனின் இடைக்கால அறிக்கை மத்திய அரசிடம் கொடுக்கப்பட்டது. அந்த அறிக்கை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று மத்திய அரசு அறிவித்தது. இதற்கிடையில் அந்த அறிக்கையின் சில பகுதிகள் பிரபல ஒரு ஆங்கில இதழில் பிரசுரமாகி விட்டது. திமுக மீது ஜெயின் கமிஷன் சில குற்றச்சாட்டுகளைக் குறிப்பிட்டு இருப்பதாக அந்தப் பத்திரிக்கைச் செய்தி கூறியது.

இதன் காரணமாக குஜ்ரால் மந்திரிசபையில் இடம் பெற்றுள்ள திமுக மந்திரிகளை நீக்க வேண்டும் என்று காங்கிரஸ் வற்புறுத்தியது. அதற்கு குஜ்ரால் மறுத்துவிட்டார். எனவே ஐக்கிய முன்னணிக்கு அளித்து வந்த ஆதரவை 1998, நவம்பர் 28-ல் காங்கிரஸ் வாபஸ் பெற்றது.

அதைத் தொடர்ந்து குடியரசுத்தலைவர் கே.ஆர். நாராயணனை குஜ்ரால் சந்தித்து ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்தார். குஜ்ராலின் ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டது. புதிய அரசு பதவியேற்கும் வரை காபந்து அரசாக நீடிக்கும்படி குடியரசுத்தலைவர் கேட்டுக் கொண்டார்.

குஜ்ராலின் தலைமையிலான அரசு ராஜினாமா செய்த போதிலும் பாராளுமன்றம் கலைக்கப்படவில்லை. இதனால் புதிய ஆட்சியை அமைக்கும் முயற்சியில் காங்கிரஸ் இறங்கியது. ஆனால் மற்ற கட்சிகளின் ஆதரவு கிடைக்கவில்லை.

எந்தக் கட்சியும் புது மந்திரிசபை அமைக்க முடியாததால் 1997-டிசம்பர் 4 ம் தேதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. 1998 மார்ச்சில் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

# 1.5 அடல் பிகாரி வாஜ்பாய்
## (ATAL BIHARI VAJPAYE 1998-2004)

### வாழ்க்கைக்குறிப்பு

அடல் பிகாரி வாஜ்பாய் மத்தியப் பிரதேச மாநிலம் குவாலியர் நகரில் 1926 டிசம்பர் 25-ம் தேதி கிறிஸ்துமஸ் நாளில் பிறந்தார். அவரது தந்தை பெயர் பண்டிட் கிருஷ்ண பிகாரி வாஜ்பாய். அவர் ஒரு பள்ளி ஆசிரியர். வாஜ்பாய் குவாலியரில் தொடக்கக்கல்வி பயின்ற பின், விக்டோரியா கல்லூரியில் சேர்ந்து பி.ஏ. பட்டம் பெற்றார். பின் கான்பூரில் உள்ள பல்கலைக் கழகத்தில் சேர்ந்து அரசியல் அறிவியல் பாடத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றார். ஆனால் சட்டப்படிப்பை வாஜ்பாய் பூர்த்தி செய்யவில்லை.

மாணவராக இருக்கும் போதே ஆர்.எஸ்.எஸ். இயக்க நிறுவனர் கேசவராவுடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அதன் மூலம் வாஜ்பாய் அரசியலில் நுழைந்தார். 1941-ல் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். 1942-ல் மகாத்மா காந்தி நடத்திய வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் பங்கு கொண்டு சிறை சென்றார். 1946-ல் ஆர்.எஸ்.எஸ். இயக்கம் நடத்திய ராஷ்டிரிய தர்மா என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். பத்திரிக்கைகளில் இவர் எழுதிய கட்டுரைகள் மூலம் இவரது எழுத்தாற்றல் வெளிப்பட்டது.

பின்னர் 1950-ல் பாரதிய ஜனசங்கம் கட்சியை உருவாக்குவதில் முக்கியப் பங்கெடுத்துக் கொண்டார். வாஜ்பாய் 1957-ல் தனது 33-வது வயதில் லக்னோ தொகுதியிலிருந்து இந்திய பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1962, 1986-ம் வருடங்களில் டெல்லி மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நேரு வாஜ்பாயைப் பற்றிக் குறிப்பிடும் போது இவர் தனது பேச்சுத்திறமையாலும் சொற்பொழிவாற்றும் திறமையாலும் ஒருநாள் இந்தியாவின் உயர்ந்த பதவியை வகிப்பார் என்று குறிப்பிட்டார். அவர் கூறியது போலவே வாஜ்பாய் உயர்ந்த நிலைக்கு வந்தார்.

இந்திரா காந்தி நெருக்கடி நிலை அறிவித்த போது 19 மாதங்கள் சிறையில் இருந்தார். பின்னர் ஜெயப்பிரகாசரின் யோசனைப்படி எதிர்க்கட்சிகள் சேர்ந்து

ஜனதா கட்சியை அமைத்த போது வாஜ்பாய் தனது ஜனசங்கம் கட்சியை அதனுடன் இணைத்தார். அதன் பிறகு மொரார்ஜி தேசாய் தலைமையில் அமைக்கப்பட்ட ஜனதா ஆட்சியில் வெளிஉறவு அமைச்சரானார். அப்போது வாஜ்பாய் ஐ.நா. சபையில் உரையாற்றினார். பல சர்வதேச மாநாடுகளிலும் பங்கு கொண்டார். ஜனதா கட்சி உடைந்த பிறகு பாரதீய ஜனதாக் கட்சியை 1980-ல் அமைத்தார். 1984, 1993, 1996-ம் ஆண்டுகளில் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவராக பணியாற்றினார்.

எதிர்க்கட்சித் தலைவர்களில் மூன்று முறை பிரதமராகிச் சாதனை படைத்தவர் வாஜ்பாய். 1996, மே 16-ல் முதல் முறையாகவும், 1998, மார்ச் 19-ல் இரண்டாவது முறையாகவும், 1999, அக்டோபர் 13-ல் மூன்றாவது முறையாகவும் பிரதமாக பதவி ஏற்றார் வாஜ்பாய்.

அரசியலுக்காக மட்டுமே வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டுள்ள வாஜ்பாய் திருமணம் செய்து கொள்ளவில்லை. இவர் இந்தியிலும், ஆங்கிலத்திலும் அற்புதமாகப் பேசக்கூடிய ஆற்றல் படைத்தவர். கவிதைகள் எழுதுவதிலும் வல்லவர். 1992-ல் மத்திய அரசு இவருக்கு பத்ம பூஷன் விருது வழங்கி கௌரவித்தது. பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களில் எல்லாக் கட்சித் தலைவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர் வாஜ்பாய்.

## 12-வது பொதுத்தேர்தல் : 1998

குஜ்ரால் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 1998 பிப்ரவரியில் 12-வது பொதுத்தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலிலும் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. பாரதீய ஜனதாவுக்கு 182 இடங்களும், காங்கிரஸ் கட்சிக்கு 141 இடங்களும் கிடைத்தன. இந்த தேர்தலில் தமிழ்நாட்டில் அதிமுக, பாரதீய ஜனதாவுடன் கூட்டு சேர்ந்து போட்டியிட்டது. அதில் அதிமுகவுக்கு கிடைத்த இடங்கள் 18. அப்போது அதிமுக முதல்வராக ஜெயலலிதா இருந்தார்.

அதிக இடங்களைப் பெற்றிருந்த தனிப்பெரும் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சித்தலைவர் வாஜ்பாய்க்கு மந்திரிசபை அமைக்குமாறு குடியரசுத் தலைவர் அழைப்பு விடுத்தார். ஆனால் அதிமுக மந்திரி சபையில் சேராது எனினும் வெளியில் இருந்து ஆதரவு தரும் என்று அறிவித்தது.

1998, மார்ச் 19ல் வாஜ்பாய் இரண்டாவது முறையாக பிரதமராகப் பதவியேற்றார். அவருக்கு குடியரசுத்தலைவர் கே.ஆர். நாராயணன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். மந்திரி சபையில் இடம் பெற முதலில் அதிமுக மறுத்த போதிலும் பிறகு சம்மதித்தது. இவ்வாறு மொத்தம் 17 உதிரிக் கட்சிகளின் ஆதரவுடன் வாஜ்பாய் ஆட்சியமைத்தார். ஆட்சி நடத்துவதற்கு வழிகாட்டியாக தேசிய செயல்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது.

## பொக்ரான் அணுகுண்டு சோதனை : 1998

உலகநாடுகள் அணு ஆயுதங்களைத் தயாரிக்கக் கூடாது என்று நேரு காலத்திலிருந்தே இந்தியா கூறி வருகிறது. அதே சமயத்தில் இந்தியாவில் அணுசக்தி ஆராய்ச்சி வளர்ந்து கொண்டிருந்தது. இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது 1974, மே 18-ம் தேதி ராஜஸ்தான் மாநிலம் பொக்ரான் என்ற இடத்தில் முதன் முதலாக அணுகுண்டு சோதனையை இந்தியா வெற்றிகரமாக நடத்திக்காட்டியது.

வாஜ்பாய் தலைமை தாங்கிய அரசாங்கம் பதவியேற்ற சில வாரங்களில் 1998 மே மாதத்தில் அணு ஆயுதப் பரிசோதனையை நடத்த முடிவு செய்தது. மே 11-ம் தேதி பொக்ரானில் பூமிக்கு அடியில் 3 வகையான அணுகுண்டுகள் தனித்தனி சக்திகள் மூலம் வெடிக்கப்பட்டன. மே 13-ல் அதே இடத்தில் மேலும் 2 அணுகுண்டுகளை வெடித்து சோதனை நடத்தியது. 1974-ல் இந்திரா காந்தி அணுசோதனை நடத்திய போது சமாதான நோக்கங்களைப் பற்றி பேசினார். ஆனால் இப்பொழுது வாஜ்பாய் அப்படி பேசவில்லை. இந்தியாவிடம் அணுகுண்டு இருக்கிறது என்று மார்தட்டினார்.

அணுகுண்டை எதிர்க்கிறவர்கள் தவிர மற்றவர்கள் எல்லோரும் அணுகுண்டு பரிசோதனையை வரவேற்றார்கள். அணுகுண்டு சோதனைக்கு தலைமை தாங்கிய அப்துல்கலாம் மற்றும் ஆர். சிதம்பரம் உள்ளிட்ட விஞ்ஞானிகள் குழுவைப் பாராட்டினார்கள். காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் பாராட்டினார். ஆனாலும் அரசியல் ஆதாயத்துக்காகவே வாஜ்பாய் அரசு அணுகுண்டை வெடித்தது என்று சந்தேகிக்கப்பட்டது.

எதிர்பார்த்தபடியே இந்தியாவுக்குப் போட்டியாக பாகிஸ்தான் 1998 மே, 30-ல் 5 அணுகுண்டுகளை சகாய் பாலைவனத்தில் வெடித்து சோதனை நடத்தியது. மறுநாள் மேலும் ஒரு அணுகுண்டை வெடித்தது. மேற்கு நாடுகளும், ஜப்பானும் பரிசோதனையைக் கண்டித்தன. அமெரிக்கா இந்தியா மீதான சில தடை நடவடிக்கைகளுக்கு ஆணையிட்டது. ஜப்பான், நார்வே, ஸ்வீடன், டென்மார்க், நெதர்லாந்து, கனடா ஆகிய நாடுகள் இந்தியாவுக்கு அளித்து வந்த உதவியை நிறுத்தின. உலகத்தில் அணு ஆயுதங்களை வைத்திருந்த நாடுகள் மற்ற நாடுகள் அணுகுண்டைத் தயாரிக்கக் கூடாது என்று விரும்பின. எனவே தான் இந்தியா அணுகுண்டை வெடித்தது அந்த நாடுகளுக்குப் பெரிய சவாலாக இருந்ததால் கூச்சல் போட்டன.

## வாஜ்பாய் தலைமையிலான கூட்டணி அரசாங்கம் கவிழ்ப்பு : 1999, ஏப்ரல் 17

பொக்ரான் அணுகுண்டு சோதனையால் கூட்டணி அரசை வாஜ்பாயால் காப்பாற்ற முடியவில்லை. ஆட்சியில் அங்கம் வகித்த ஒவ்வொரு கட்சியும் தங்கள் கட்சியின் பலத்தைப் பெருக்குவதிலேயே கண்ணாக இருந்தன

இந்நிலையில் பாரதீய ஜனதாவுக்கும் அதிமுகவுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. தமிழ்நாட்டில் அப்போதிருந்த கருணாநிதி தலைமையிலான திமுக மந்திரி சபையை டிஸ்மிஸ் செய்யும்படி ஜெயலலிதா கூறியதாகவும் அதற்கு வாஜ்பாய் தயங்குவதாகவும் செய்திகள் வெளியாயின.

திடீரென வாஜ்பாய் மந்திரி சபையில் இடம் பெற்றிருந்த 2 அதிமுக மந்திரிகள் ராஜினாமா செய்தனர். இது தொடர்பாக ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் கடற்படைத் தளபதி விஷ்ணு பகவத் டிஸ்மிஸ் செய்யப் பட்டதற்கான காரணத்தை கூட்டணிக் கட்சியான எங்களுக்கு தெரிவிக்க வில்லையென்றும், மந்திரி பதவியிலிருந்து ஜார்ஜ் பெர்னாண்டஸை நீக்க வேண்டும் என்ற எங்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என்றும் அதனால் 2 அமைச்சர்களை அதிமுக வாபஸ் பெற்றுக் கொள்கிறது என்றும் தெரிவித்தார்.

இதன்படி டெல்லி சென்ற ஜெயலலிதா குடியரசுத் தலைவரைச் சந்தித்து அரசுக்குக் கொடுத்து வந்த ஆதரவை வாபஸ் பெற்றுக் கொள்வதாகக் கடிதம் கொடுத்தார். இதன் காரணமாக பாரளுமன்றத்தில் மெஜாரிட்டியை நிரூபிக்குமாறு வாஜ்பாய்க்கு குடியரசுத்தலைவர் கட்டளையிட்டார்.

1999, ஏப். 15-ல் பாராளுமன்றக் கூட்டம் தொடங்கியது. அரசு மீது நம்பிக்கை இருக்கிறது என்ற ஒருவரித் தீர்மானத்தை வாஜ்பாய் கொண்டு வந்தார். 2 நாட்கள் விவாதம் நடைபெற்றது. 17-ம் தேதி ஓட்டெடுப்பு நடந்தது. தீர்மானத்தை ஆதரித்து 269 ஓட்டுகளும் எதிராக 270 ஓட்டுகளும் கிடைத்தன. ஒரு ஓட்டு வித்தியாசத்தில் வாஜ்பாய் அரசு கவிழ்ந்தது!

எனவே குடியரசுத்தலைவரைச் சந்தித்து ராஜினாமா கடிதத்தைக் கொடுத்தார் வாஜ்பாய். மாற்று ஏற்பாடு செய்யப்படும் வரை காபந்து அரசை நீடிக்கும்படி குடியரசுத்தலைவர் கேட்டுக் கொண்டார்.

மாற்று அரசு அமைக்க காங்கிரஸ் உட்பட மற்றக்கட்சிகள் செய்த முயற்சி வெற்றி பெறவில்லை. எனவே பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு தேர்தல் நடத்த குடியரசுத்தலைவர் கே.ஆர். நாராயணன் 1999, ஏப். 26-ல் உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்தது.

## கார்கில் போர் : 1999, மே 26

### a) வாஜ்பாயின் பஸ் பயணம்

ஆட்சி கவிழ்ந்து காபந்து அரசாக இருந்த போது கார்கில் போரில் பாகிஸ்தான் தீவிரவாதிகளை ஒடுக்கி புகழ் பெற்றார் வாஜ்பாய். வாஜ்பாய் பிரதமராகப் பதவி ஏற்ற பின் இந்தியா பாகிஸ்தான் உறவை மேம்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதற்காக இவர் 1999, பிப். 21-ல் மேற்கொண்ட நடவடிக்கை லாகூர் பஸ் பயணம் ஆகும். சுமார் 25

வருடங்களில் ஒரு இந்தியப் பிரதமர் அதுவும் பஸ்ஸில் பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொண்டது இதுவே முதல் முறையாகும். 'எல்லை முழக்கம்' என்று பெயரிடப்பட்ட இந்த பேருந்தில், கடந்த காலத்தை மறந்து புதிய துவக்கத்திற்கு அடிக்கல் நாட்டுவோம் என்ற முழக்கத்துடன் இருநாட்டு எல்லையைக் குறிக்கும் ரெட்கிளிப் கோட்டைக் கடந்து சரியாக 1999 - பிப். 21ல் இந்திய நேரடிப்படி மாலை 4.40க்கு சென்ற போது பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் வரவேற்றார்.

பின்னர் இருவரும் ஹெலிகாப்டரில் லாகூர் புறப்பட்டுச் சென்றனர். 1999 பிப். 22-ல் லாகூரில் இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவை மேம்படுத்தும் பரஸ்பர பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இறுதியில் லாகூர் பிரகடனம் வெளியிடப்பட்டது. ஆனால் இந்த லாகூர் பிரகடனம் அவ்வளவு விரைவில் காஷ்மீர் மலைகளில் உருகிப்போய் விடும் என்று யாரும் நினைக்கவில்லை.

## b) கார்கில் பகுதியில் ஊடுருவல்

காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை மீறி இந்தியாவுக்குள் உள்ள கார்கில் பகுதியில் 1999, மே 5-ல் சுமார் 700 ஊடுருவல்காரர்கள் புகுந்தனர். இவர்கள் கிராஸ், கார்கில், படாலிக், முஷ்சோ ஆகிய இடங்களில் சுமார் 50 கி.மீ தூரத்திற்கு முகாம்கள் அமைத்துத் தங்கிவிட்டனர். இந்த இடம் 17 ஆயிரம் முதல் 18 ஆயிரம் அடி உயரமுள்ள பனி சூழ்ந்த மலைப்பகுதி யாகும். இந்த ஊடுருவல்காரர்களுக்கு பாகிஸ்தான் ராணுவம் ஹெலிகாப்டர் மூலம் பயங்கர ஆயுதங்களை அனுப்பி வந்தது.

கார்கில் பகுதியில் தீவிரவாதிகளின் இந்த ஊடுருவலை மே 9-ம் தேதி இந்திய ராணுவம் கண்டுபிடித்தது. உடனே இந்திய ராணுவம் தாக்குதலைத் தொடங்கியது. சுமார் 30 ஆயிரம் இந்திய ராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப் பட்டனர். கடும் குளிரில் கரடு முரடான மலைகளில் ஏறி பாகிஸ்தானியருடன் நமது வீரர்கள் வீரப்போர் புரிந்தனர். லே பகுதியையும் காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரையும் இணைக்கும் சாலையைத் துண்டிப்பதற்கு பாகிஸ்தான் ராணுவத்தினர் செய்த முயற்சி முறியடிக்கப்பட்டது. இருதரப்பினருக்கும் இடையே 15 நாட்கள் பயங்கர சண்டை நடந்தது. இதில் 160 பாகிஸ்தான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

## c. ஆப்பரேஷன் விஜய்

இந்த பரபரப்பான சூழ்நிலையில் 1999, மே.26-ல் ஆப்ரேஷன் விஜய் என்ற பெயரிடப்பட்ட மிகப்பெரிய தாக்குதலை இந்தியா ஆரம்பித்தது இந்திய விமானங்கள் அணி அணியாகப் பறந்து சென்று எதிரி முகாம்கள் மீது சரமாரியாக குண்டுகளை வீசின. இந்தியா நடத்திய விமானத்தாக்குதலில் நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் பலியாயினர். பாகிஸ்தானியரிடம் சிக்கிய லெப்டினன்ட் சவுரவ்காலியா மற்றும் ஐந்து வீரர்கள் சித்திரவதை செய்யப்

பட்டு கொல்லப்பட்டனர். இவர்களின் உடல்களை இந்தியாவிடம் பாகிஸ்தான் ஒப்படைத்தது. உடல்களைப் பார்த்த இந்திய அதிகாரிகள் ரத்தம் உறைந்தது. ஐந்து பேர்களின் கண்கள் தோண்டப்பட்டிருந்தன. உடல் உறுப்புக்கள் துண்டிக்கப்பட்டிருந்தன.

### d) கார்கில் போரில் வெற்றி

இதற்கிடையில் நவாஸ் ஷெரிப் சமரசப் பேச்சு நடத்துவோம் வாருங்கள் என்று வாஜ்பாய்க்கு அடிக்கடி அழைப்புக் கொடுத்தார். தீவிரவாதிகளை இந்திய மண்ணில் இருந்து வாபஸ் பெற்றால் தான் பேச்சுவார்த்தை என்று வாஜ்பாய் திட்டவட்டமாக மறுத்துவிட்டார். அமெரிக்காவின் ஆதரவு கேட்டு ஜூலை 4-ல் நவாஸ் ஷெரிப் அமெரிக்க சென்றார். ஆனால் அமெரிக்க குடியரசுத்தலைவர் பில்கிளிண்டரின் கார்கில் பகுதியில் பாகிஸ்தான் ஊடுருவல் நடத்தியது தவறு என்றும், ஊடுருவல்காரர்களை வாபஸ் பெறுங்கள் என்றும் கண்டிப்புடன் கூறிவிட்டார். இதே போல் இங்கிலாந்து, சீனா போன்ற நாடுகளும் பாகிஸ்தானைக் கண்டித்தன.

உலக அரங்கில் தனிமைப்படுத்தப்பட்ட நவாஸ் ஷெரீப் ஊடுருவல் காரர்களை வாபஸ் பெற சம்மதித்தார். ஜூலை 16-ம் தேதிக்குள் பெரும்பகுதியினர் வாபஸ் ஆனார்கள். சிகரங்களில் ஒழிந்திருந்த சிலரை இந்திய ராணுவம் விரட்டியடித்தது. 2 மாதத்துக்கும் மேலாக நடந்த போர் ஓய்ந்தது. கார்கில் பகுதியில் அமைதி திரும்பியது.

இந்தப் போரில் பாகிஸ்தான் தரப்பில் 690 பேரும் இந்தியத் தரப்பில் 413 பேரும் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. போருக்காக இந்தியா தினமும் 15 கோடி ரூபாய் செலவிட்டது. போரில் போபர்ஸ் பீரங்கி பயன்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. கார்கில் பகுதியில் நடந்தது முழு அளவிலான யுத்தம் அல்ல. இருதரப்பு மோதல் தான். ஆயினும் இந்தியா முழுவதும் தேசபக்தி உணர்ச்சியை இந்தப் போர் கிளர்ந்தெளச் செய்தது.

### e) சில ஐயப்பாடுகள்

ஆனால் கார்கில் நெருக்கடி அடிப்படையான சில பிரச்சனைகளை எழுப்பியது. 1998 ஆகஸ்ட் மாதத்திலிருந்தே பாகிஸ்தான் வீரர்கள் காஷ்மீருக்குள் ஊடுருவினார்கள் என்றால் பல மாதங்களாக ஏன் நடவடிக்கை [illegible]வில்லை என்ற கேள்வி எழுந்தது. உளவுத்துறை சிறிது கூட செயல்பட [illegible] அல்லது வேறு காரணங்கள் இருந்தனவா? பிரிகேடியர் சுந்தர்சிங் [illegible]வில் இருந்த 121-ம் படைப்பிரிவின் தளபதியாக இருந்தவர். இவர் [illegible]றத்தில் '1998, ஆகஸ்டிலிருந்து பாகிஸ்தானிய வீரர்களின் ஊடுருவல் [illegible] அரசுக்கும், ராணுவ உயர் அதிகாரிகளுக்கும் எச்சரிக்கை கடிதங்கள் [illegible]ப்பட்டன' என்று தெரிவித்தார்.

அப்படியானால் அரசாங்கத்தின் நோக்கம் என்ன? நிலைமை மோசமடைந்த பிறகு அதாவது தேர்தலுக்கு முன்பு, எதிரியை நசுக்கி அரசியல் ஆதாயம் தேடுவதற்கு அரசாங்கம் விரும்பியதா? இந்திய வீரர்களைப் பலியிட்டு தேர்தலில் வெற்றியடைய விரும்பியதா? பதில் இல்லை. ஆனால் அரசியல் கீழ்நிலைக்குப் போய்விட்டது என்பது மட்டும் புரிந்து கொள்ளப் பட்டது. கார்கில் போருக்குப் பிறகு நடைபெற்ற தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி வெற்றி பெற அது உதவியது. கார்கில் போர் ஏற்படக்காரணம் இது போன்ற தாக்குதல்கள் நிகழாமல் இருக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பரிந்துரை செய்ய இந்திய அரசு ராணுவ ஆலோசகர் கே. சுப்ரமணியம் தலைமையில் ஒரு கமிஷனை அமைத்தது.

## 13-வது பொதுத்தேர்தல் : 1999 செப்./அக்.

வாஜ்பாய் அரசு ஒரு ஓட்டு வித்தியாசத்தில் 1999, ஏப்ரல் 17-ல் கவிழ்ந்ததால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் பாரதீய ஜனதா தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அமைக்கப்பட்டது. தமிழகத்தில் இந்தக் கூட்டணியில் திமுக சேர்ந்து போட்டியிட்டது.

ஓட்டு எண்ணிக்கை அக்டோபர் 6-ம் தேதி நடைபெற்றது. இதில் பாரதீய ஜனதா கூட்டணி 296 இடங்களில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியைப் பிடித்தது. இதில் பாரதீய ஜனதாவுக்கு மட்டும் கிடைத்த இடங்கள் 182. காங்கிரஸ் கூட்டணிக்கு மொத்தம் 134 இடங்கள் கிடைத்தன.

## மூன்றாவது முறையாக வாஜ்பாய் பிரதமராக பதவி ஏற்பு

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பிக்கள் கூட்டம் அக்டோபர் 10-ம் தேதி நடந்தது. கூட்டத்தில் பாராளுமன்ற பாரதீய ஜனதாக் கட்சித் தலைவராக வாஜ்பாய் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 29 எம்.பிக்களைக் கொண்ட தெலுங்கு தேசம் வாஜ்பாய் மந்திரி சபைக்கு ஆதரவு கொடுப்பதாக அறிவித்தது. பின்னர் வாஜ்பாய் குடியரசுத் தலைவரைச் சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரினார். மெஜாரிட்டி இருப்பதால் பிரதமராகப் பதவி ஏற்கும்படி வாஜ்பாய்க்கு குடியரசுத்தலைவர் அழைப்பு விடுத்தார்.

பதவி ஏற்பு விழா 1999, அக். 13-ல் குடியரசுத்தலைவர் மாளிகை முன்பு நடைபெற்றது. பிரதமர் வாஜ்பாய்க்கு குடியரசுத் தலைவர் கே. ஆர். நாராயணன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பின்னர் மந்திரிகள் பதவி ஏற்றுக் கொண்டனர். வாஜ்பாய் பிரதமராகப் பதவி ஏற்றது. இது மூன்றாவது முறையாகும்.

## வாஜ்பாய் ஆட்சியில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள் :

### 1. காந்தகார் விமானக் கடத்தல் சம்பவம் : 1999, டிச. 24

1999 டிசம்பர் மாதம் நேபாளத்தின் தலைநகரமான காத்மாண்டுவிலிருந்து டில்லிக்கு வந்து கொண்டிருந்த இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் பயங்கர வாதிகளால் கடத்தப்பட்டது. இந்தியச் சிறைகளில் உள்ள 36 பயங்கரவாதி களை விடுதலை செய்யவேண்டும் என்றும், மீட்புப் பணம் தரவேண்டும் என்றும் அவர்கள் கோரினார்கள். பஞ்சாபிலுள்ள அமிர்தசரஸ் விமான நிலையத்தில் நாற்பது நிமிடங்கள் வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பிறகு விமானம் ஆப்கானிஸ்தானிலுள்ள காந்தகாருக்குப் புறப்பட்டுச் சென்றது.

காந்தகாரில் விமானம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது ஒரு பயணி சுட்டுக் கொல்லப்பட்டார். தலிபான் உதவியுடன் கடத்தல்காரர்களுடன் பேச்சுவார்த்தை துவங்கின. முக்கியமான பயங்கரவாதி மௌலான மசூத் அஷார் மற்றும் இருவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். வெளி உறவு அமைச்சர் ஜஸ்வந்தர்சிங் அவர்களைக் கூட்டிக் கொண்டு விசேஷ விமானத்தில் காந்தகார் சென்றார். விமானத்திலிருந்த பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். விமானத்தைக் கடத்தியவர்களும் பயங்கரவாதிகளும் பாகிஸ்தானில் தஞ்சமடைந்தார்கள். இந்த சம்பவம் வாஜ்பாய் அரசின் பலவீனத்தை வெளிப்படுத்துவதாக இருந்தது.

### 2. ஆக்ரா பேச்சுவார்த்தைகள்

கார்கில் போர் சம்பவங்கள் பாகிஸ்தானில் வேறு விளைவை ஏற்படுத்தின. பாகிஸ்தான் ராணுவத்தின் தலைமை தளபதி ஜெனரல் முஷரப் [illegible]ர்ப் புரட்சி மூலம் 1999, டிச. 13-ல் பிரதமர் நவாஷ் ஷெரிபை பதவியிலிருந்து நீக்கி நாட்டின் சர்வாதிகாரி ஆனார். அப்போது காஷ்மீரில் அரசியல் நிலைமை கவலையளித்தபடியால் முஷரப்பும், வாஜ்பாயும் 2001 ஜூலையில் ஆக்ராவில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். வாஜ்பாய் எல்லாப் பிரச்சனைகளையும் பற்றிப் பேசுவதற்கு விரும்பினார். ஆனால் முஷரப் காஷ்மீரைப் பற்றி மட்டுமே பேச விரும்பினார்.

கூட்டறிக்கையில் காஷ்மீர் பிரச்சனையைச் சேர்க்க முஷரப் விரும்பினார். எல்லை தாண்டி வருகின்ற பயங்கரவாதத்தைச் சேர்க்க இந்தியா விரும்பியது. ஆனால் கூட்டறிக்கையில் இந்த இரண்டு கருத்துக்களுமே நீக்கப்பட்டன. வாஜ்பாய் மற்றும் வெளி உறவு அமைச்சர் ஜஸ்வந்த்சிங் கூட்டறிக்கைக்கு ஒப்புதல் அளித்தனர். ஆனால் உள்துறை அமைச்சர் அத்வானி கூட்டறிக்கையின் வாசகத்தை நிராகரித்தார்.

முஷரப் தனது கருத்தை தொலைக்காட்சி மூலம் வெளியிட்டதை இந்தியர்கள் அதிக அளவில் பார்த்தார்கள். காஷ்மீரில் நடைபெறுவது

பயங்கரவாதம் அல்ல. அது சுதந்திரப் போராட்டம் என்று கூறினார். இந்தியா தனது நிலையை இந்தியப் பத்திரிக்கையாளர்களிடம் கூடச் சொல்லவில்லை. ஆக்ரா பேச்சுவார்த்தை முஷரப்புக்கு மாபெரும் வெற்றியாகவும், இந்தியாவுக்குத் தோல்வியாகவும் இருந்தது. அதன் பிறகு பாகிஸ்தானுடன் இந்தியாவின் உறவுகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்படவில்லை.

## 3. இந்தியப்பாராளுமன்றம் தாக்கப்படுதல் : 2001, டிச. 13

கார்கில் போரில் இறந்த வீரர்களை அடக்கம் செய்வதற்கு வெளிநாட்டில் சவப்பெட்டிகள் வாங்கியதில் நடைபெற்ற ஊழல் பற்றி பாராளுமன்றத்தின் விவாதம் நடந்து கொண்டிருந்த போது பாராளுமன்றம் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் தொடுத்தார். இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். இதனால் இந்தியா பாகிஸ்தானுடனான தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டதுடன் இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் ராணுவத்தைக் குவித்து பயங்கரவாதத்தை இந்தியா தனித்து நின்றே முறியடிக்கும் என்று அறிவித்தது. இதன் பிறகு இந்திய பாகிஸ்தான் உறவு சீர்கேடடைந்தது. பாகிஸ்தான் அரசு பயங்கரவாதத்தைக் கண்டிக்க வில்லை. தீவிரவாதிகளைக் காஷ்மீருக்குள் அனுப்புவதை நிறுத்தவில்லை.

2002 செப்டம்பரில் காஷ்மீரில் தேர்தல்கள் அமைதியாக நடைபெற்ற பிறகு, காஷ்மீர் பிரச்சனையில் இந்தியாவின் நிலைக்கு ஆதரவு அதிகரித்தது. தேர்தல் ஆணையர் லிங்டோவின் மேற்பார்வையில் நடைபெற்ற தேர்தல் நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடைபெற்றது என்று உலகம் ஏற்றுக் கொண்டது. 2004 - ஜனவரி மாதம் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற சார்க் தலைவர்கள் மாநாட்டில் வாஜ்பாய் முஷரப்பை மறுபடியும் சந்தித்தார். இந்தியப் பாராளுமன்றத்தை பயங்கரவாதிகள் தாக்கிய பிறகு இந்திய பாகிஸ்தான் உறவுகளில் ஏற்பட்ட இறுக்கம் குறைந்தது.

## 4. தெகல்கா வெளியிட்ட ஆயுத பேர ஊழல் : 2001, மார்ச்

வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் உயர் ராணுவ அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் ஆயுத பேர ஊழலில் ஈடுபட்டு அவர்கள் பேசியது, பணம் வாங்கியது பற்றிய வீடியோக்களை தெகல்கா இணையதளம் வெளிப் படுத்தியது. இந்த ஊழலில் சிக்கிய பாரதீய ஜனதா கட்சித்தலைவர் பங்காரு லட்சுமணன், சமதா கட்சித்தலைவர் ஜெயா ஜெயிட்லி ஆகியோர் பதவி விலகினர். ராணுவத்தில் நடைபெற்ற ஊழல் ஆதலால் தார்மீகப் பொறுப்பேற்று பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டசும் பதவி விலகினார். இந்த ஊழலை எதிர்த்து கூட்டணிக் கட்சியான திரிணமூல் காங்கிரசும் கூட்டணியிலிருந்து விலகியது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டத்தால் மக்களவை செயல்பட முடியவில்லை. எனவே தெகல்கா வெளிப்படுத்திய ஆயுத பேர ஊழல் பற்றி விசாரிக்க

முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி கே. வெங்கடசாமியின் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது.

## 5. பொடாசட்டம் இயற்றப்படுதல் : 2002, ஏப். 2

பாராளுமன்றக் கட்டிடம், தாக்கப்பட்ட பிறகு வாஜ்பாய் அரசு பயங்கரவாதத்தை முறியடிக்க பொடா (POTA - Prevention of Terroism Act) சட்டத்தைக் கொண்டு வர முடிவு செய்தது. ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த தடா என்ற பயங்கரவாதத்தடுப்பு நடவடிக்கைகள் சட்டம் தவறாகப் பயன்படுத்தப் பட்டதால் பாரதீய ஜனதா உட்பட எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பால் அந்தச் சட்டம் கைவிடப்பட்டது.

ஆனால் பதவிக்கு வந்த பிறகு பொடா சட்டத்தை எப்படியும் கொண்டு வர முடிவு செய்தது அரசு. மக்களவையில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதா ராஜ்யசபையில் தோல்வியடைந்தது. எனவே அரசியலமைப்பின் 108வது பிரிவின்படி இரு அவை கூட்டு கூட்டம் கூட்டப்பட்டு அதில் பொடா சட்டம் நிறைவேற்றப்பட்டது.

## 6. இந்திய அரசியல் சாசன மறுஆய்வுக்குழு அமைக்கப்படுதல்

இந்திய அரசியல் சாசனத்தை இடைவிடாமல் குறை சொல்லி வந்த பாரதீய ஜனதாக்கட்சி 1999-ல் பதவிக்கு வந்த பிறகு அரசியலமைப்பு மறு ஆய்வு செய்யப்படவேண்டும் என்று முடிவு செய்தது. பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படாமல், எதிர்க்கட்சிகளைக் கலந்தாலோசிக்காமல், தேசிய கருத்தொற்றுமையை ஏற்படுத்தாமல் 2000, பிப்ரவரி 14-ல் இந்திய அரசியலமைப்பு சாசன மறு ஆய்வுக்குழு ஒன்றை ஓய்வு பெற்ற உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி எம்.என். வெங்கடாசலய்யாவின் தலைமையில் அமைத்தது. இந்தக் குழுவில் பத்து உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

கடந்த ஐம்பது ஆண்டுகால அனுபவத்தில் மக்களின் தேவைக்கேற்ற இந்த பிரிவுகள் பயனுடையவை என்றும் ஆட்சி சுமூகமாகவும் திறமையுடனும் நடைபெறத் திறனுடையது என்றும் ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரை செய்யக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்தக் குழு தனது பணி செய்யத் துவங்கிய காலமிலிருந்து ஒரு ஆண்டுக்குள் தனது பரிந்துரையை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

அரசியலமைப்பை மறுஆய்வு செய்யவேண்டும் என்ற கருத்தானது 1999ல் வாஜ்பாய் அரசு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தோற்கடித்த பிறகு, மாற்று அரசு ஒன்றை எதிர்க்கட்சிகளால் அமைக்க முடியாமல் போன சூழ்நிலையில் வலுப்பெற்றது.

1999-ல் வாஜ்பாய் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை அதிமுக வாபஸ் பெற்ற போது குடியரசுத்தலைவர் நாராயணன், வாஜ்பாய் அரசை நம்பிக்கை வாக்கெடுப்புக் கோரியதும், எதிர்க்கட்சிகளால் மாற்று அரசு அமைக்க

முடியாமல் போன போது 12-வது லோக் சபாவைக் கலைத்து விடுமாறு அவர் பரிந்துரை செய்ததும் பலரால் விமர்சனம் செய்யப்பட்டது. எனவே தான் மீண்டும் தேர்தலில் வெற்றி பெற்று வந்த வாஜ்பாய் அரசு நாட்டின் ஸ்திரத் தன்மையை நிலைநாட்ட அரசியலமைப்பை மறு ஆய்வு செய்ய முடிவு செய்து குழு ஒன்றை அமைத்தது.

அரசியலமைப்பு மறுஆய்வுக்குழு தனது இரண்டு ஆண்டு கால ஆய்வு செய்யும் பணியை முடித்துக் கொண்டு 2002, மார்ச் 31-ல் தனது இறுதி அறிக்கையை அரசிடம் தாக்கல் செய்தது. மொத்தத்தில் சட்ட மறு ஆய்வுக்குழு அரசியலமைப்புக்குத் திருத்தங்கள் கொண்டு வருவது தொடர்பான 58 பரிந்துரைகளையும், சட்டம் இயற்றுவது தொடர்பான 86 பரிந்துரைகளையும், நிர்வாக நடவடிக்கைகள் மூலம் செய்து முடிக்கப்படும் 106 பரிந்துரை களையும் செய்தது. ஆனால் இந்த பரிந்துரைகள் மீது நடவடிக்கை எடுக்க காலவரையரை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

அரசியலமைப்பை மறு ஆய்வு செய்ய வாஜ்பாய் தலைமையிலான அரசாங்கத்தின் இந்த முயற்சி உள்நோக்கம் கொண்டது என்று கடுமையாக விமர்ச்சிக்கப்பட்டது.

## 7. வகுப்புவாதத்தின் வளர்ச்சி

வாஜ்பாய் அரசில் வகுப்புவாதம் வளர்ச்சியடைந்தது. இந்திய ராணுவம் அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருந்து வந்துள்ளது. ஆனால் பாரதீய ஜனதாவின் நடவடிக்கைகள் அந்த மரபை மீறியதாக இருந்தன. பாரதீய ஜனதா உறுப்பினர் கூட்டங்களுக்கு ராணுவத்தளபதிகள் அழைக்கப்பட்டனர். பி.ஜே.பி. தலைவர்கள் பேசிய கூட்டங்களில் ராணுவத்தளபதிகளின் கட்-அவுட்கள் வைக்கப்பட்டன. விஷ்வ இந்து பரிஷத் உறுப்பினர்கள் நூற்றுக்கணக்கில் ராணுவமையமாகிய தெற்கு பிளாக்குக்கு வந்து இந்து ராணுவ வீரர்களின் கரங்களில் ராக்கியைக் கட்டினார்கள். முஸ்லீம், சீக்கிய, கிறிஸ்தவ வீரர்கள் ஒதுக்கப்பட்டனர். ஒய்வு பெற்ற ராணுவ ஜெனரல்கள் அரசியலில் ஈடுபட வேண்டும், பணியிலுள்ள படைவீரர்களிடம் வகுப்புவாத உணர்ச்சியைப் பரப்பவேண்டும் என்று பி.ஜே.பி தலைமை கேட்டுக் கொண்டது. இந்திய ராணுவத்தின் மதசார்பற்ற ஜனநாயக மரபுகளை ஒழித்து அவர்களைக் கட்சி அரசியலுக்குள் இழுப்பதற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இந்து வகுப்புவாதிகள் இந்து ராஷ்டிரியத்தை அமைக்க வேண்டும் என்ற பழைய செயல்திட்டத்தை இப்போது நிறைவேற்றத் தொடங்கினார்கள். மகாத்மா காந்தியின் படுகொலையில் வி.டி. சவர்க்காருக்குப் பங்கு உள்ளது என்று நீதிபதி ஜீவன்லால் கமிஷன் கருத்துக் கூறியது. ஆனால் சவர்க்காருடைய படம் பாராளுமன்றத்தின் மைய மண்டபத்தில் காட்சி

படத்துக்கு எதிரில் திறந்து வைக்கப்பட்டது. எதிர்கட்சித் தலைவரான சோனியாகாந்தி அதைக் கண்டித்தார்.

அடுத்து வாஜ்பாய் அரசில் இருந்த கல்வி அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி பாடநூல்களில் வகுப்புவாத நஞ்சைப் புகுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதன் மூலம் கல்வித்துறையில் வகுப்புவாதத்தை நுழைக்க வேண்டும் என்ற ஆர்.எஸ்.எஸ். திட்டத்தை நிறைவேற்றினார். மத்திய ஆலோசனைக்குழு அங்கீகரித்த பாடநூல்கள் இந்து வகுப்புவாதக் கருத்துக்களைக் கொண்டிருந்தன. பழைய பாடநூல்களில் இருந்த முற்போக்கான கருத்துக்கள், வாசகங்கள் நீக்கப்பட்டன.

NCERT பாடநூல்களை எழுதிய முற்போக்கான வரலாற்றாசிரியர்கள் இந்து மத எதிரிகள், ஐரோப்பாவை நேசிக்கும் இந்தியர்கள் என்றார் RSS தலைவர் கே.எஸ். சுதர்சன். ரொமிலா தாப்பர், ஆர்.எஸ். சர்மா போன்ற வரலாற்றாசிரியர்களைக் கைது செய்ய வேண்டும் என்று சிலர் கூக்குரலிட்டனர். இந்தியாவில் எல்லை கடந்த பயங்கரவாதம் ஆபத்தானது. இந்த வரலாற்றாசிரியர்களின் பயங்கரவாதம் அதைவிட பயங்கரமானது என்றார் முரளி மனோகர் ஜோஷி. கல்வி அமைச்சரின் இந்தக் கருத்துக்களை இந்திய வரலாற்றாசிரியர்களும், தேசியப் பத்திரிக்கைகளும் கண்டித்தன. 2001 ஜனவரியில் கூடிய இந்திய வரலாற்று காங்கிரஸ் புதிய வரலாற்றுப் பாட நூல்களை ஆய்வு செய்து அவற்றிலிருந்த தவறுகளின் பட்டியலை வெளியிட்டது.

இது தவிர குஜராத்தில் ஒன்பதாம் வகுப்பு சமூக அறிவியல் பாடநூலில் சிறுபான்மையினர் அன்னியர்கள் என்று எழுதப்பட்டுள்ளது. முஸ்லீம்கள் மட்டுமல்ல, கிறிஸ்தவர்கள், பார்சிக்கள் மற்றும் இதர அன்னியர்களும் சிறுபான்மையினராக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. பத்தாம் வகுப்பு சமூக அறிவியலில் பாசிசமும், நாசிசமும் புகழப்பட்டுள்ளது. ஹிட்லரின் சாதனைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு பாடநூல்களில் வகுப்பு வாதம் போதிக்கப்பட்டது. 2002-ல் குஜராத்தில் நடந்த இனப்படுகொலைக்கு பாட நூல்களில் இடம் பெற்றிருந்த நச்சுக் கருத்துக்களே காரணம் என்று சொல்லலாம்.

## குஜராத்தில் இனப்படுகொலை : (கோத்ரா சம்பவம்)

2002 மார்ச் மாதத்தில் குஜராத்தில் இனப்படுகொலை நடைபெற்றது. 'இது இந்தியாவின் நெற்றியில் வைக்கப்பட்ட கரும்புள்ளி. உலகத்தில் இந்தியாவின் பெருமை குறைந்துவிட்டது' என்று அப்போது பிரதமராக இருந்த வாஜ்பாய் தொலைக்காட்சி மூலம் பேசினார். குஜராத்தில் இனப்படு கொலை 3 மாதகாலம் நடைபெற்றது. நகரத்திலிருந்து கிராமங்களுக்கும் கலவரம் பரவியது. 2000-க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். 2 லட்சம் பேர் உடமைகள் இழந்து அகதிகளாக முகாம்களில் தங்கினார்கள்.

குஜராத்தில் 2002, பிப்ரவரி 27-ல் காலையில் கோத்ரா என்ற சிறிய நகரில் சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயிலில் ஒரு பெட்டித் தீ வைக்கப்பட்டது. 15 பெண்கள், 20 குழந்தைகள் உட்பட 58 பேர் நெருப்பில் இறந்தனர். அவர்கள் எல்லோரும் இந்துக்கள். அயோத்தியில் ராமர் கோவிலைக் கட்ட வேண்டும் என்பதற்காக வி.எச்.பி. நடத்திய யாகத்தில் பங்கெடுத்துவிட்டு சொந்த ஊருக்குத் திரும்பினார்கள். அப்படி திரும்புகிற வழியில் தான் இந்த துயர சம்பவம் நடைபெற்றது.

இந்து தொண்டர்களுக்கும் ரயில்நிலையத்திலிருந்து முஸ்லீம் வியாபாரி களுக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டு கைகலப்பில் முடிந்ததாகச் சொல்லப் படுகிறது. 'ராமர் வாழ்க' என்று கோஷம் போடுமாறு முஸ்லீம்கள் கட்டாயப் படுத்தப்பட்டதாகவும், அவர்கள் தாடி இழுக்கப்பட்டதாகவும், ஒரு முஸ்லீம் பெண்ணை ரயில் பெட்டிக்குள் கடத்திச் செல்ல முயன்றதாகவும் கூறப் படுகிறது. தகராறு பற்றி கேள்விப்பட்டதும் ரயில் நிலையத்திற்கு வெளியில் இருந்த 10, 15 முஸ்லீம்கள் ஓடிவந்து ரயில் மீது கற்களை வீசினார்கள். நிலையத்தை விட்டு ரயில் புறப்பட்டு விட்டது. புறப்பட்ட வண்டி மீண்டும் நிறுத்தப்பட்டது. அப்போது இந்து தொண்டர்கள் பயணம் செய்து கொண்டிருந்த பெட்டிகளில் ஒன்றில் தீ பிடித்து எரிந்தது.

முஸ்லீம்கள் அந்தப் பெட்டிக்குள் பெட்ரோலை ஊற்றி தீ வைத்தார்கள் என்று சொல்லப்பட்டது. அதே சமயம் நெருப்பு தற்செயலாகவும் ஏற்பட்டிருக்கலாம் என்றும் கூறப்பட்டது. ஆனால் இந்த நிகழ்ச்சி திட்டமிட்ட சதியா அல்லது தற்செயலான நிகழ்வா என்று சொல்ல முடியவில்லை. குஜராத் முதல்வர் நரேந்திரமோடி பாகிஸ்தான் உளவுத்துறையின் தூண்டுதலின் பேரில் உள்ளூர் முஸ்லீம்கள் இந்த நாசவேலையைச் செய்தார்கள் என்று குற்றம் சாட்டினார்.

கோத்ரா நிகழ்ச்சியைக் கண்டித்து விஸ்வ ஹிந்து பரிஷத் குஜராத் பந்த்க்கு பிப்.28-ல் அழைப்பு விடுத்தது. அன்று தொடங்கிய படுகொலை மூன்று மாத காலம் நீடித்தது. காவித்துணியைத் தலையில் கட்டிய இந்து இளைஞர்கள் முஸ்லீம் குடியிருப்புக்குள் நுழைந்து தீ வைத்தார்கள். கொள்ளையடித்தார்கள். முஸ்லீம்கள் குறி வைத்து தாக்கப்பட்டனர். முஸ்லீம் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டார்கள். காவல்துறை தடுக்கவில்லை. சுமார் 40 நகரங்களில் ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டது.

இது தற்செயலாக நடைபெற்ற கலவரம் அல்ல. முஸ்லீம் கடைகள், நிறுவனங்கள் குறி வைத்து தாக்கப்பட்டன. இந்துக்களும் முஸ்லீம்களும் மிகவும் போற்றிய உருதுமொழிக் கவிஞரான 'வாலி குஜராத்தியின் தர்கா' அழிக்கப்பட்டது. கிராமங்களில் நேற்றுவரை சகோதரர்களாக பழகிய இந்து முஸ்லீம் குடும்பங்கள் இன்று எதிரிகளாக மாறின. பாதிக்கப்பட்ட கிராமங்களிலிருந்து முஸ்லீம்கள் அதிக எண்ணிக்கையில் வெளியேறினர்

உயர் ஜாதியினருடன் சேர்ந்து தலித்களும், ஆதிவாசிகளும் இந்த வன்முறையில் ஈடுபட்டனர்.

குஜராத்தில் நடைபெற்ற சம்பவங்கள் இந்தியாவின் மனச்சாட்சியை உலுக்கின. காங்கிரஸ் தலைமையில் எதிர்க்கட்சிகள் குஜராத் மாநில அரசாங்கம் மீது நடவடிக்கை எடுக்குமாறு வாஜ்பாய் அரசாங்கத்தை வற்புறுத்தின. மோடி அரசாங்கம் மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கத் தவறிவிட்டது என்று மனித உரிமைக் கமிஷன் அறிக்கை வெளியிட்டது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் குஜராத் அரசைக் கண்டிக்கின்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தன. நரேந்திர மோடியை உடனடியாகப் பதவியிலிருந்து நீக்க வேண்டும், 355வது ஷரத்தின்படி மாநில அரசுக்கு எச்சரிக்கை நோட்டீஸ் தரவேண்டும் என்றார் சோனியா காந்தி.

மேற்கூறிய சூழ்நிலையில் மத்திய அரசாங்கம் குஜராத் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டியதிருந்தது. பஞ்சாபில் பயங்கரவாதத்தை ஒடுக்கிய, பஞ்சாப் காவல்துறை தலைமையதிகாரியாக இருந்த கே.பி.எஸ். ஜில் நரேந்திர மோடிக்கு ஆலோசகராக நியமிக்கப் பட்டார். மத்திய அரசின் இந்த தலையீட்டால் வன்முறை குறையத் தொடங்கியது. கோத்ரா சம்பவம், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட இனக்கலவரம் பற்றி விசாரணை செய்ய நீதிபதி கே.ஜி.ஷா தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது. குஜராத் இனக்கலவரம் வாஜ்பாய் அரசின் நம்பகத்தன்மையை வெகுவாகப் பாதித்துவிட்டது.

## வாஜ்பாய் அரசின் வீழ்ச்சியின் ஆரம்பம்

குஜராத் கலவரத்தினால் வாஜ்பாய் அரசு கூட்டணிக் கட்சிகளில் [illegible]பிக்கையை இழந்தது. பாஜக கூட்டணியிலிருந்து ராம்விலாஸ் பஸ்வான் [illegible] விலகிக் கொண்டது. மேலும் தெலுங்கு தேசம், திரிணமூல் காங்கிரஸ் [illegible]பாய் அரசின் செயலற்ற தன்மையைக் கண்டித்தன. இதனால் அரசின் [illegible]த்தன்மை பாதித்தது. அதே சமயம் பல ஊழல் புகார்கள் தலை தூக்கின. [illegible]ரோல் பம்புகள், கெரோசின் மற்றும் கேஸ் முகவர்களுக்கு முறை [illegible]க் கொடுக்கப்பட்டதில் ஊழல் நடந்துள்ளதாக புகார் கூறப்பட்டது. [illegible] ஜனவரிக்குப் பிறகு வாஜ்பாய் அரசு வழங்கிய அனைத்து ஏஜன்சி [illegible]யும் உச்சநீதிமன்றம் 2002 ஆகஸ்டில் தள்ளுபடி செய்தது. அரசு தலை [illegible]ந்தது.

2002, செப்.24-ல் இரண்டு பயங்கரவாதிகள் குஜராத் அக்ஷர்தம் [illegible]திற்குள் நுழைந்து வெறித்தாக்குதல் நடத்தினர். தமிழ்நாட்டிற்கும் [illegible]வுக்குமிடையே உள்ள காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சனைக்கு [illegible] முடியவில்லை. காஷ்மீரிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் [illegible]ரான கிளர்ச்சிகள் அதிகரித்தன. நாட்டில் தொடர்ந்து மதவாத

அரசியலிலும், பயங்கரவாதத்திற்கெதிரான போரிலும் கவனம் செலுத்தியதால் பொருளாதார வளர்ச்சியில் பின்னடைவு ஏற்பட்டது.

இதைத் தவிர வாஜ்பாய் அரசில் இருந்த கூட்டணிக் கட்சிகள் அமைச்சர் பதவி கேட்டு அடிக்கடி தொந்தரவு செய்தன. வாஜ்பாய் தன் இஷ்டப்படி அமைச்சரவை விரிவாக்கத்தை மேற்கொள்ள முடியவில்லை. ராஷ்டிரிய ஜனதா தளம் போன்ற சிறிய கட்சிகளுக்குக் கூட கேபினட் அமைச்சர் பதவி கொடுக்க வேண்டியதாயிற்று. உத்திர பிரதேசத்தில் பகுஜன் சமாஜ் கட்சியோடு செய்து கொள்ளப்பட்ட சந்தர்ப்பவாதக் கூட்டணி முறிந்தது.

இதே சமயத்தில் எதிர்க்கட்சியாக இருந்த காங்கிரஸ் எழுச்சி பெற ஆரம்பித்தது. இமாச்சலாப் பிரதேச சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றதால் எழுச்சி பெற்றது. அதற்கு புதிய நம்பிக்கை ஏற்பட்டது. எதிர்க் கட்சிகளை ஒருங்கிணைத்து 2003 ஆகஸ்டில் அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அது தோல்வியடைந்தாலும் எதிர்க் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு உதவியது. முதல் முறையாக பாரதீய ஜனதா கட்சிக்கு எதிராக தேசிய அளவில் கூட்டணி அமைப்பது என்று காங்கிரஸ் முடிவெடுத்தது. இது வாஜ்பாயின் அரசுக்கு பெரும் சவாலாக அமைந்தது.

## வாஜ்பாய் அரசு எடுத்த சில அவசர முடிவுகள்

காங்கிரசின் எழுச்சியையும், எதிர்க்கட்சிகளின் தாக்குதல்களையும் எதிர் கொள்ளும் விதமாக வாஜ்பாய் அரசு சில அவசரமான முடிவுகளை எடுத்தது. புதிய வன ஆணையம் அமைக்கப்பட்டது. தேசியப் பழங்குடியினர் ஆணையம் அமைக்கப்பட்டது. நதிகள் இணைப்புக்கான செயல்வடிவம் அமைக்கப்பட்டது. பிற்பட்ட வகுப்புகளின் மத்தியப் பட்டியல் விரிவு படுத்தப்பட்டது. மேலும் வாஜ்பாய் அரசாங்கத்திடம் எதிர்பார்த்த பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்படவில்லை.

1985-ல் கொண்டு வரப்பட்ட கட்சித்தாவல் தடைச்சட்டம் கட்சி உறுப்பினர்கள் கட்சி மாறுவதைத் தடுத்தது. ஆனால் மூன்றில் ஒரு பங்கு கட்சியினர் ஒட்டு மொத்தமாகக் கட்சி மாறுவதைத் தடுக்கவில்லை. இந்தக் குறையைப் போக்குவதற்காக 2003 டிசம்பரில் கட்சித் தாவல் தடைத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்படி ஒரு கட்சியின் மூன்றில் ஒரு பகுதியினர் கட்சியிலிருந்து விலகுவதற்கும் தடைவிதிக்கப்பட்டது. மேலும் அமைச்சர்களின் எண்ணிக்கை பாராளுமன்ற அல்லது மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 15 சதவீதத்திற்கும் அதிகப்படாமல் இருக்க வேண்டும் என்று உச்ச வரம்பும் விதிக்கப்பட்டது. இதன் மூலம் அரசியலில் கட்சித்தாவல் என்ற களங்கம் நீக்கப்பட்டது. பதவியில் நீடிப்பதற்காக ஆட்சியாளர்கள் தங்கள் இஷ்டத்திற்கு மந்திரிசபையை விஸ்தரிக்க முடியாது.

## 14-வது மக்களவைத் தேர்தலில் பாரதீய ஜனதா தோல்வி

2003-டிசம்பரில் நடைபெற்ற மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சட்டீஸ்கர் ஆகிய மூன்று மாநில சட்ட சபை தேர்தல்களில் காங்கிரசை தோற்கடித்து எதிர்பாராத வெற்றி பெற்றது பாரதீய ஜனதா. எதிர்பாராமல் கிடைத்த இந்த வெற்றியை வைத்து அரசியல் ஆதாயம் தேட முற்பட்டது. அதாவது 6 மாதங்களுக்குப் பிறகு நடைபெற வேண்டிய பாராளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்ததிட்டமிட்டது பாரதீய ஜனதா.

அதன்படி 13-வது மக்களவை 2004. பிப்ரவரி 6-ம் தேதி கலைக்கப்பட்டது. 14-வது பொதுத்தேர்தல் 2004, மார்ச் 20 லிருந்து மே 10 வரை நடைபெற்றது. இந்த தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி 138 இடங்களை மட்டுமே பெற்று அதிர்ச்சி தோல்வியடைந்தது. 'இந்தியா ஒளிர்கிறது' என்ற அவர்களது கோஷத்தை மக்கள் ஏற்கவில்லை. வாஜ்பாய் தனது அமைச்சரவையின் ராஜினாமாவை குடியரசுத்தலைவரிடம் சமர்ப்பித்தார். டாக்டர் மன்மோகன் சிங் தலைமையில் புதிய காங்கிரஸ் அரசு அமைக்கப்பட்டது.

## வாஜ்பாயின் வெளிஉறவுக் கொள்கை

### அணிசேராக் கொள்கை

இந்தியா சுதந்திரமடைந்ததிலிருந்து அணிசேராக் கொள்கையையே பின்பற்றி வந்தது. ஆனால் வாஜ்பாய் பதவியேற்ற பிறகு அரசு இந்தக் கொள்கையில் சில மாற்றங்கள் செய்ய முற்பட்டது. அதாவது காங்கிரஸ் பின்பற்றியது உள்நோக்கமுடைய கொள்கை என்று கூறிய பாஜக உண்மையான அணிசேராக் கொள்கையைப் பின்பற்றப் போவதாக அறிவித்தது.

அணிசேரா இயக்கத்தின் உச்சிமாநாடு 2003 பிப்ரவரியில் மலேஷிய தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பிரதமர் வாஜ்பாய், வெளிஉறவு அமைச்சர்யஸ்வந் சின்ஹா ஆகியோர் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் பேசிய வாஜ்பாய் அணு ஆயுதப் பெருக்கத்தைத் தடுத்தல், சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் பற்றி பேசினார். மேலும் தெற்கு வர்த்தக தொடர்பு, உலக வறுமை ஒழிப்பு நிதி உருவாக்கப்படுதல் போன்ற திட்டங்களையும் விவாதிக்க வேண்டும் என்ற யோசனையை முன் மொழிந்தார். பொருளாதார வளர்ச்சியை மையப்படுத்தி அணிசேரா இயக்கம் மறுசீரமைக்கப்பட வேண்டியதின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

### ii) இந்திய அமெரிக்க உறவு

பொதுவாக இந்தியா அணிசேராக் கொள்கையை பின்பற்றினாலும். இந்தியா வெளிஉறவுக் கொள்கை ரஷ்யா சார்புடையதாகவே இருந்து வந்தது. வாஜ்பாய் பிரதமரான உடன் இந்திய அமெரிக்க உறவை பலப்படுத்துவதில் முக்கியத்துவம் அளித்தார்.

1998-ல் இந்தியா அணுகுண்டு பரிசோதனை செய்த பிறகு அமெரிக்கா இந்தியா மீது தடைகளை விதித்தது. ஆனால் அமெரிக்காவின் இரட்டை கோபுரம் 2001, செப். 11-ல் தகர்க்கப்பட்ட பிறகு தடைகள் நீக்கப்பட்டன. அதற்கு முன்பே குடியரசுத்தலைவர் பில்கிளிண்டன் இந்தியாவுக்கு வந்தார். இந்தியா பொருளாதார பலமுள்ள ஜனநாயக நாடு. இந்தியாவுடன் தொடர்புகளை வளர்க்க வேண்டும் என்று அமெரிக்க மக்கள் விரும்பினார்கள். அமெரிக்காவின் பொருளாதாரத்தில் இந்திய நிபுணர்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தார்கள். அமெரிக்காவில் வசித்த இந்திய சமூகம் அரசியல் துறையில் செல்வாக்குடன் இருந்தது.

வெளிஉறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கும் அமெரிக்காவின் வெளிஉறவுத்துறைச் செயலாளர் ஸ்ட்ரோப் டால் போட்டும் இரண்டாவது இடங்களில் சந்தித்துப் பேசினார்கள். பயங்கர வாதிகள் செப். 11-ல் அமெரிக்காவைத் தாக்கிய போது எதிர் நடவடிக்கை களுக்கு இந்தியாவைத் தளமாகப் பயன்படுத்தலாம் என்று ஜஸ்வந்த் சிங் கூறினார். ஆனால் புவியியல் அமைப்பு வேறுவிதமாக இருந்தது. இந்தியாவும் ஆப்கானிஸ்தானும் ஒரே எல்லைக் கோட்டைக் கொண்ட நாடு அல்ல.

அமெரிக்கா 2003, மார்ச் மாதம் இராக்கைத் தாக்கிய போது நட்பு நாடுகள் ராணுவத்தை அனுப்புமாறு அமெரிக்கா கேட்டுக் கொண்டது. பொது மக்கள் எதிர்த்ததால் இந்தியா ராணுவத்தை அனுப்பவில்லை. காஷ்மீர் பிரச்சனை இரண்டு நாடுகளுக்கு இடையிலானது, மூன்றாவது நாடு மத்தியஸ்தம் செய்ய முடியாது என்று இந்தியா கூறினாலும் அமெரிக்கா சில முயற்சிகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக பொதுவாகக் கருதப்பட்டது. சிவிலியன் அணு ஆராய்ச்சி, அணுத்தாக்குதலிருந்து பாதுகாப்பு, தொழில்நுட்ப வர்த்தகம் ஆகிய துறைகளில் இரண்டு நாடுகளும் ஒத்துழைக்கும். 2004 ஜனவரியில் புஷ் மற்றும் வாஜ்பாய் கூட்டறிக்கை வெளியிட்டார்கள். பொதுவாக வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் இந்திய அமெரிக்க உறவு நெருக்கமாகவே இருந்தது.

### b) இந்திய ரஷ்ய உறவு

1991-ல் சோவியத் யூனியன் உடைந்து சிதறிய பிறகு இந்திய ரஷ்ய உறவில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. உறவில் பெரும் சரிவு ஏற்பட்டது. எனவே இந்திய ரஷ்ய உறவை மேம்படுத்தும் நோக்கத்துடன் ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் 2002 டிசம்பர் மாதம் இந்தியா வந்து வாஜ்பாயுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். அதன் தொடர்ச்சியாக டெல்லி பிரகடனம் வெளியிடப்பட்டது. இந்த பிரகடனத்தில் தீவிரவாதத்தை இருநாடுகளும் சேர்ந்து முறியடித்தல், எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கெதிராக இந்தியா எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு ரஷ்யாவின் ஆதரவு, இந்தியா ஐநா பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினராவதற்கு ரஷ்யாவின் ஆதரவு, இரு நாட்டு பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக விரிவாக்கம் போன்ற அம்சங்கள்

இடம் பெற்றிருந்தன. இதனடிப்படையில் 2003 நவம்பரில் வாஜ்பாய் ரஷ்யா சென்றபோது பல உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டன.

### c) இந்தியா பாகிஸ்தான் உறவு

வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற கார்கில் போர், அதன் பிறகு 2001-ல் பாகிஸ்தான் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட பாராளுமன்றத் தாக்குதல் ஆகியவற்றின் காரணமாக இந்திய பாகிஸ்தான் உறவு படுமோசமான நிலைக்குப் போய்விட்டது. பாகிஸ்தான் மீது போர் தொடுக்க வேண்டும் என்ற குரல் ஒலித்தது. பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் 3 லட்சம் இந்திய ராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டனர். பதட்டம் நிலவியது. இருநாடுகளுமே அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் ஏவுகணை பரிசோதனைகள் நடத்தின. இருந்தாலும் பேச்சுவார்த்தை மூலமே பிரச்சனைத் தீர்க்க முடியும் என்று கருதிய இருநாடுகளும் இருதரப்பு பேச்சுவார்த்தைகளைத் துவக்கின.

2003-நவம்பர் மாதம் இந்தியாவும் பாகிஸ்தானும் போர் நிறுத்தம் செய்ய சம்மதித்தன. 2004 ஜனவரியில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் சார்க் உச்சி மாநாடு நடைபெற்றது. அதில் கலந்து கொள்ளச் சென்ற வாஜ்பாய் பாகிஸ்தான் அதிபர் முஷராப்பைச் சந்தித்துப் பேசினார். இந்த பேச்சு வார்த்தையின் முடிவில் கூட்டு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் பயங்கரவாதம் தடுக்கப்படவேண்டும் என்றும், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை அனுமதிப்பதில்லையென்றும், பிரச்சனைகளைத் தீர்க்க ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது என்றும் குறிப்பிடப் பட்டிருந்தது. இஸ்லாமாபாத்தில் ஏற்பட்ட இந்த இருதரப்பு உடன்பாடு இந்திய பாகிஸ்தான் உறவில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

### d) இந்திய சீன உறவு

அணுகுண்டு சோதனை நடத்திய பிறகு இந்தியா உலக அமைதிக்கு உறுதியாகப் பாடுபடும் என்று அறிவித்திருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அதற்கு எதிரான காரியங்களைச் செய்தது. இந்தியாவின் முதல் எதிரி சீனா என்று பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் பேசினார். சீனாவும் பாகிஸ்தானும் இந்தியாவுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நாடுகள் என்று பிரதமர் வாஜ்பாய் அமெரிக்க குடியரசுத் தலைவர் பில்கிளிண்டனுக்கு எழுதிய கடிதம் நியூயார்க் டைம்ஸ் பத்திரிக்கையில் பிரசுரமாகிவிட்டது. இதனால் இந்தியா - சீன உறவில் சிக்கல் ஏற்பட்டது.

இந்தச் சிக்கலை சரிசெய்யும் விதமாக வாஜ்பாய் 2003 ஜுலை மாதம் சீனப் பயணத்தை மேற்கொண்டார். அப்போது இருதரப்பு பேச்சுவார்த்தை நடை பெற்றது. அதில் இருநாடுகளுக்குமிடையே உள்ள எல்லைப் பிரச்சனை பற்றி பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவும் அதுவரை எல்லையில் அமைதி காக்கவும் முடிவு செய்யப்பட்டது. மேலும் பொருளாதாரக் கூட்டுறவைப் மேம்படுத்தி வர்த்தக விரிவாக்கத்துக்கு ஊக்கமளிப்பது என்றும் முடிவு

செய்யப்பட்டது. இதனால் பொருளாதார ஒத்துழைப்பு மூலம் அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வாய்ப்பு அதிகரித்தது.

### e) இந்திய பங்களாதேஷ் உறவு

பங்களாதேஷ் நாடு உருவான பிறகு இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையே சில பிரச்சனைகளை தீர்க்கப்படாமலேயே இருந்தது. முக்கியமாக கங்கை நதிநீரை பங்கிடுதல், இருநாடுகளுக்கிடையே எல்லை வரையரை செய்தல், சக்மா அகதிகள் பிரச்சனை போன்றவை தீர்க்கப்படாமல் இருந்தன. 2001 பிப்ரவரியில் இருநாடுகளுக்கிடையே விசாமுறை தொடர்பான உடன்பாடு ஏற்பட்டது. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயில் போக்குவரத்து இருநாடுகளுக்குமிடையே மீண்டும் துவக்கி வைக்கப்பட்டது.

இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சனைகளைத் தீர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1998 ஜுன் மாதம் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா இந்தியா வந்த போது இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இந்திய பங்களாதேஷ் கூட்டுப் பொருளாதார ஆணையத்தை மீண்டும் அமைத்தல், 1996-ம் வருடம் செய்து கொள்ளப்பட்ட இந்திய பங்களாதேஷ் கங்கை நீர் உடன்படிக்கையின் விதிகளைப் பின்பற்றி நடத்தல் போன்ற முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

### f) இந்திய இலங்கை உறவு

இந்தியாவும் இலங்கையும் அணிசேராக் கொள்கையைக் கடைப் பிடிக்கின்றன. மேலும் சார்க் உறுப்பினர் நாடுகளாகவும் உள்ளன. இரண்டு நாடுகளுக்குமிடையே பாரம்பரிய, கலாச்சார, வர்த்தக உறவுகள் இருந்த போதிலும் இருபதாம் நூற்றாண்டில் பிற்பகுதியில் இருநாடுகளுக்கிடையே யான மிக முக்கிய பிரச்சனை இனப்பிரச்சனையும், இந்திய வம்சாவழியினரின் இலங்கைக் குடியுரிமைப் பிரச்சனையாகும்.

வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றன. 2001 பிப்ரவரி மாதம் இலங்கை அதிபர் சந்திரிகா குமார துங்கா இந்தியாவுக்கு மூன்றுநாள் பயணமாக வந்த போது இனப்பிரச்சனை பற்றி விவாதிக்கப்பட்டது. இந்தியாவைப் பொருத்த அளவில் இலங்கையின் ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றின் அடிப்படையிலேயே இனப் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என்பதாகும். விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே மூன்றாவது நாடு தலையிட்டு மத்தியஸ்தம் செய்வதை இந்தியா விரும்பவில்லை. இதுதவிர தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்படுவதும், கைது செய்து சிறையிலடைக்கப் படுவதும் தீராத பிரச்சனையாகி உள்ளது.

### g) இந்திய நேபாள உறவு

இந்தியாவுக்கும் அண்டை நாடான நேபாளத்திற்குமிடையே எப்போதும் அரசியல் உறவுகள் சுமூகமாக இருந்ததில்லை. வாஜ்பாய் பதவி ஏற்ற பிறகு

நேபாளத்துடன் உறவை பலப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டது. நேபாளத்தில் நேபாள மன்னர் ஞானேந்திராவுக்கும், அரசியல் கட்சிகளுக்குமிடையிலான போராட்டம், மாவோயிஸ்டுகளின் பயங்கரவாத நடவடிக்கைகள், நேபாளத்திலுள்ள இந்திய நிறுவனங்களும் சொத்துக்களும் தாக்கப்படுதல் போன்ற பிரச்சனைகள் இருந்தன.

வாஜ்பாய் அரசு மன்னர் ஞானேந்திராவுக்கு ஆதரவாகவே செயல்பட்ட தாக மாவோயிஸ்டுகள் கருதினர். நேபாளத்தில் முடியாட்சியை அகற்றி விட்டு ஜனநாயக கட்சியை அமைக்க இந்தியா உதவி செய்யவில்லை என்று எதிர்க் கட்சிகள் கருதின. ஆனால் முடியாட்சியின் கீழ் பலகட்சி ஜனநாயகம் செயல் படவேண்டும் என்பதே இந்தியாவின் நிலையாக இருந்தது.

### h) இந்திய ஆப்கானிஸ்தான் உறவு

*2001, செப் 11-ல் அல்கய்தா பயங்கரவாதிகளால் அமெரிக்க இரட்டைக் கோபுரம் தாக்கப்பட்ட பிறகு ஆப்கானிஸ்தானிலுள்ள தலிபான் பயங்கர வாதிகளுக்கெதிரான தாக்குதல்களை ஆரம்பித்தது. அமெரிக்காவின் தாக்குதலின் விளைவாக முல்லாமுகமது ஓமர் தலைமையிலான தலிபான் அரசு வீழ்ந்தது. ஹமித் கர்சாய் தலைமையிலான அரசு அமெரிக்காவின் ஆதரவுடன் அமைக்கப்பட்டது. அமெரிக்காவின் ஆப்கானிஸ்தானத் தாக்குதலை இந்தியா ஆதரித்தது. அத்துடன் ஆப்கானிஸ்தான் புனரமைப்புக்காக இந்தியா பல கோடி ரூபாய் கொடுக்க முன் வந்தது.*

### i) இந்திய இஸ்ரேல் உறவு

*1977-ல் அமைக்கப்பட்ட ஜனதா ஆட்சியின் போது வெளிஉறவு அமைச்சராக இருந்த வாஜ்பாய் இந்திய இஸ்ரேல் உறவுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். ஏற்கனவே இஸ்ரேலுடன் பொருளாதார வர்த்தக, தொழில்நுட்பத் தொடர்பு இருந்து வந்தாலும் ராஜதந்திர உறவு ஏற்பட வில்லை. 1992-ல் நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில் தான் இருநாடுகளிடையே ராஜதந்திர உறவு ஏற்பட்டது.*

*வாஜ்பாய் 1999-ல் பிரதமராக பதவியேற்றப்பின் இஸ்ரேலுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ள விரும்பினார். பாலஸ்தீன பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட இஸ்ரேல் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட இந்தியாவுக்கு உதவி செய்ய முன் வந்தது.*

*முதன் முறையாக இஸ்ரேல் நாட்டின் பிரதமர் ஏரியல் ஷரோன் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். அப்போது, பயங்கரவாதத்தை ஒடுக்க இஸ்ரேலிடமிருந்து ஆயுத உதவி, இரு நாடுகளுக்கிடையே தொழில்நுட்ப பரிமாற்றம், வரிச்சலுகைகளுடன் கூடிய வர்த்தக உறவு ஆகியவைகளில் உடன்பாடு ஏற்பட்டது. இவ்வாறு வாஜ்பாய் இந்தியாவின் ராணுவப் பாதுகாப்பு தொடர்பாக இஸ்ரேலுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்டார்.*

# 1.6 மன்மோகன்சிங் ஆட்சி
## (MANMOHAN SINGH, 2004-2014)

### வாழ்க்கைக் குறிப்பு

இந்தியாவின் 14-வது பிரதமர் மன்மோகன்சிங், மேற்கு பஞ்சாபில் உள்ள கா (Gah) என்ற ஊரில் (தற்போது பாகிஸ்தானில் உள்ளது) 1932, செப்டம்பர் 26-ல் குர்முக்சிங் மற்றும் அம்ரித் கவுர் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இவர் மிக இளவயதிலேயே தனது தாயை இழந்தார். இந்தியப் பிரிவினைக்குப் பிறகு இவரது குடும்பம் இந்தியாவிலுள்ள அமிர்தசரஸ் நகருக்கு குடிபெயர்ந்து வந்தது. இவர் அங்குள்ள இந்துக் கல்லூரியில் படித்தார். அதன் பிறகு பஞ்சாப் பல்கலைக்கழகத்திலும், ஹோசியாப்பூர் பல்கலைக் கழகத்திலும் பொருளாதாரப் பாடம் படித்து 1954-ல் முதுகலைப்பட்டம் பெற்றார்.

அதன் பிறகு சண்டிகாரில் உள்ள பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் மூத்த விரிவுரையாளராக 1957-59-ம் ஆண்டுகளில் பணியாற்றினார். 1960-ல் ஆகஸ்போர்டு பல்கலைக்கழகம் சென்று பொருளாதாரத்தில் டாக்டர் பட்டம் (D.Phil) பெற்றார். 1969-ல் டில்லியிலுள்ள பல்கலைக்கழகத்தில் பன்னாட்டு வர்த்தக பேராசிரியராகப் பணியாற்றினார். 1972-ல் இந்திய வெளிநாட்டு வர்த்தக அமைச்சகத்தில் பொருளாதார ஆலோசகராகச் சேர்ந்தார். 1980-82ல் திட்டக் குழு உறுப்பினராக பணிபுரிந்தார். 1982-ல் இந்திய ரிசர்வ் வங்கியின் கவர்னராக நியமனம் செயல்பட்டு 1985 வரை பணிபுரிந்தார். 1985-87ல் இந்திய திட்ட ஆணையத்தின் துணை தலைவர் ஆனார். 1990 - 91 வரை பொருளாதார விவகாரங்களில் இந்தியப் பிரதமரின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். 1991 முதல் 1996 வரை பிரதமர் நரசிம்ராவின் அமைச்சரவையில் மன்மோகன் சிங் நிதிஅமைச்சராக பணியாற்றினார்.

2004, மே 22-ல் இந்தியப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்களவை மூலம் தேர்ந்தெடுக்கப்படாத ஒரே பிரதமர் இவர் தான். 1991 முதல் மாநிலங்களவையின் உறுப்பினராகவே இருந்து வருகிறார். சீக்கிய சமயத்தைச் சேர்ந்த இவர் இந்து சமயத்தைச் சாராத முதல் பிரதமர் ஆவார். 2009-ல் மறுபடியும் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 2014, மே 25 வரை பிரதமர் பதவி வகித்தார்.

## மன்மோகன் சிங் பிரதமராகப் பதவி ஏற்றல் : 2004, மே 22

14-வது பாராளுமன்றத் தேர்தல் 2004 ஏப். மே மாதங்களில் 5 கட்டங்களாக நடைபெற்றது. இந்த தேர்தலில் 539 தொகுதிகளில் காங்கிரஸ் கூட்டணி 215 இடங்களைப் பிடித்தது. அப்போது ஆளும் கட்சியாக இருந்த பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 187 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்று 2-வது இடத்திற்குத் தள்ளப்பட்டது. இரு கூட்டணியிலும் சேராமல் தனித்துப் போட்டியிட்ட முலயாம்சிங் யாதவின் சமாஜ்வாடி கட்சி, மாயாவதியின் பகுஜன் சமாஜ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு யாருமே எதிர்பாராத அளவுக்கு 137 இடங்கள் கிடைத்தது.

தனித்து ஆட்சியமைக்க எந்தக் கூட்டணிக்கும் முடியாத நிலையில் பாரதீய ஜனதா ஆட்சியமைக்க உரிமை கோருவதில்லை என்று முடிவு செய்தது. இதனால் காங்கிரஸ் கட்சி, முலயாம்சிங் மற்றும் கம்யூனிஸ்டுகள் ஆதரவுடன் ஆட்சியமைக்க முடிவு செய்தது. சோனியாகாந்தி பாராளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் பிறகு சோனியா காந்தி குடியரசுத்தலைவர் அப்துல்கலாமைச் சந்தித்துப் பேசினார். அப்போது என்ன பேசப்பட்டது என்று தெரியவில்லை. குடியரசுத் தலைவர் மாளிகையை விட்டு வெளியே வந்ததும் பிரதமர் பதவியை ஏற்க மாட்டேன் என்று சோனியா காந்தி அறிவித்தார்.

இதனால் பிரதமர் தேர்வில் புதிய திருப்பம் ஏற்பட்டது. தனக்குப் பதிலாக மன்மோகன்சிங்கை பிரதமராகத் தேர்ந்தெடுக்க ஆதரவு அளிக்க வேண்டும் என்று கூட்டணித் தலைவர்களை சோனியா காந்தி கேட்டுக் கொண்டார். அதற்கு அவர்கள் சம்மதம் தெரிவிக்கவே 2004, மே 14-ல் பாராளுமன்றக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக மன்மோகன்சிங் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இதைத் தொடர்ந்து புதிய அரசு அமைக்க மன்மோகன்சிங்குக்கு குடியரசுத்தலைவர் அழைப்பு விடுத்தார். அதன்படி 2004 மே 22-ல் இந்தியாவின் 14-வது பிரதமராக மன்மோகன்சிங் பதவி ஏற்றார். இந்த சூழ்நிலையில் தான் பிரதமர் மன்மோகன்சிங் 'தற்செயல் பிரதமர்' என்று கருதப்பட்டார்.

## மன்மோகன்சிங் இரண்டாவது முறையாக பிரதமராகுதல் : 2009 மே 22

2009 ஏப், மே மாதங்களில் நாடு முழுவதும் நடந்து முடிந்த 15வது பாராளுமன்றத் தேர்தலுக்கான ஒட்டு எண்ணிக்கை 16.05.2009 ல் நடந்தது. முடிவில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி 256 இடங்களைப் பிடித்தது. பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 161 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் சார்பில் மீண்டும் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்

பட்ட மன்மோகன்சிங்கை புதிய அரசு அமைக்க வருமாறு குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் அழைப்பு விடுத்தார். இதை ஏற்று மன்மோகன்சிங் தலைமையிலான அரசு 2009 மே 22-ல் பதவியேற்றது.

காங்கிரஸ் கட்சியில் நேருவுக்குப் பிறகு 5 ஆண்டுகள் முழுமையாகப் பதவி வகித்து அதன்பின் மீண்டும் பிரதமர் ஆனவர் மன்மோகன்சிங் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் காங்கிரஸ் வரலாற்றில் தேர்தலுக்கு முன்பே பிரதமர் வேட்பாளர் என்று முதன் முறையாக அறிவிக்கப்பட்டவர் என்ற பெருமையும் மன்மோகன்சிங்குக்குக் கிடைத்தது.

## மன்மோகன் ஆட்சிக் காலத்தில் முக்கிய நிகழ்ச்சிகள்

### 1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம்

இது மன்மோகன் சிங் அரசின் கனவுத்திட்டமாகும். 2006-ல் இத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கிராமப்புற மக்களுக்கு வேலையளிப்பை உறுதி செய்வதற்காகவும், அவர்கள் மத்தியில் பணப்புழக்கத்தை அதிகரிப்பதற்காகவும், கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்து வதற்காகவும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் குறைந்த பட்சம் 100 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை சம்பளம் வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டம் நாடு முழுவதும் 635 மாவட்டங்களில் செயல்படுத்தப் படுகிறது. 7.5 லட்சம் கிராமங்களில் 27 கோடி பேர் இந்த திட்டத்தின் பயனாளி களாக உள்ளனர். இந்த திட்டத்தின்படி ஆண்டுக்கு 100 நாட்கள் கட்டாயம் வேலை வழங்கப்படும். சம்பளம் வேலையாட்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இந்த திட்டத்தில் தொழிலாளர் தேர்வு, சம்பளம் வழங்கு வதில் தாமதம், வேலையாட்களின் சுணக்கம் போன்ற குறைபாடுகள் காணப்படுகின்றன.

### 2. நானாவதி கமிஷன் அறிக்கை

1984-ல் இந்திராகாந்தி அவரது சீக்கியப் பாதுகாவலர்களால் கொல்லப் பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் 2500 சீக்கியர்கள் கொல்லப்பட்டனர். இது குறித்து விசாரணை செய்ய உச்சநீதிமன்ற நீதிபதி ஜி.டி நானாவதி தலைமையில் கமிஷன் ஒன்றை தேசிய ஜனநாயகக் கூட்டணி அமைத்தது. இந்தக் கமிஷன் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. இது இந்திரா காந்தி கொலை தொடர்பான ஒன்பதாவது அறிக்கையாகும். அந்த அறிக்கையை 2005 ஆகஸ்ட் மாதம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தார் மன்மோகன்சிங். அப்போது நம் அரசு சார்பாகவும், நாட்டின் அனைத்து மக்கள் சார்பாகவும், இது போன்ற ஒரு நிகழ்ச்சி நடந்தது குறித்து அவமானத்தால் நான் தலைகுனிகிறேன் என்று பேசினார்.

## 3. லிபரான் கமிஷன் அறிக்கை

1992-ம் ஆண்டு அயோத்தியில் இடிக்கப்பட்ட பாபர் மசூதி சம்பவம் பற்றிய லிபரான் விசாரணைக் கமிஷன் இந்தியாவில் அமைக்கப்பட்ட கமிஷன்களிலேயே மிக நீண்டகாலம் (17 ஆண்டுகள்) விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பித்த கமிஷனாகும். லிபரான் கமிஷனின் ஆயிரம் பக்கங்கள் கொண்ட அறிக்கையும், அதை ஆராய்ந்து எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகள் தொடர்பான 13 பக்கங்கள் கொண்ட அறிக்கையும் (ATR) 2009, நவம்பர் 24-ம் தேதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த அறிக்கை பாபர் மசூதி இடிப்பு திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு சம்பவம் என்று தெளிவுபடுத்தியுள்ளது. அப்போதைய உத்திரபிரதேச முதல்வர் கல்யாண்சிங்கும், அன்றைய அதிகார வர்க்கமும் தெரிந்தே மசூதி இடிக்கப் படுவதற்கான சூழலை ஏற்படுத்தினார்கள் என்று இந்த அறிக்கை குற்றம் சாட்டியது. மேலும் பா.ஜ.க தலைவர்கள் வாஜ்பாய், அத்வானி உள்ளிட்ட அனைத்து முன்னணித் தலைவர்களையும் குற்றவாளி பட்டியலில் சேர்த்துள்ளது. பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது ஆட்சியிலிருந்த மத்திய அரசு மீது எந்த குற்றச்சாட்டையும் இந்தக் கமிஷன் கூறவில்லை.

லிபரான் கமிஷனின் சில பரிந்துரைகள் வருமாறு : அரசு பதவியில் உள்ள அரசியல் தலைவர்கள் ஒரே நேரத்தில் மத அமைப்புகளில் எந்த பதவியிலும் இருக்கக் கூடாது. அரசியலில் ஜாதி, மதம் மற்றும் பிராந்திய வாதத்தைப் புகுத்தக்கூடாது. மதத்தின் அடிப்படையில் அரசு அமைவதைத் தடை செய்ய வேண்டும். தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சிலுக்கு சட்டபூர்வமான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். சட்ட அமலாக்க அமைப்புகளின் செயல்பாடுகளைக் கண்காணிக்க குற்றவியல் நீதி ஆணையம் அமைக்கப்பட வேண்டும், போன்றவையாகும்.

## 4. ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் அறிக்கை

ஆந்திர மாநிலத்தின் தெலுங்கானா பகுதிகளைப் பிரித்து தனிமாநிலமாக அறிவிக்கக் கோரி அப்பகுதி மக்கள் பலகாலமாக போராடி வந்தனர். இந்தப் பிரச்சனை தீவிரமடைந்ததையடுத்து தனிதெலுங்கான அமைப்பது குறித்து ஆராய்ந்து பரிந்துரை செய்ய ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா தலைமையில் மத்திய அரசு கமிஷன் ஒன்றை 2010 பிப். 3-ல் அமைத்தது. இந்த கமிஷன் தனது அறிக்கையை 2010, டிசம். 30ல் சமர்ப்பித்தது. இந்த அறிக்கையில் தெலுங்கானா பகுதியில் சமூக பொருளாதார மேம்பாட்டை காக்கும் வகையில் அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து அதற்குத் தேவையான புதிய அரசியலமைப்புச் சட்டங்களை உருவாக்கி பிரிவினையைத் தவிர்க்கலாம் என்று தெரிவித்தது. மேலும் தனியதிகாரம் கொண்ட தெலுங்கானா ரீஜினல் கவுன்சில் என்ற ஒரு அமைப்பை உருவாக்கி அதன் செயல்பாடுகளை வரையறுத்து அதற்குத் தேவையான நிதிஉதவிகளைச் செய்யவும் ஸ்ரீகிருஷ்ணா அறிக்கை பரிந்துரை செய்தது.

## 5. வர்மா கமிஷன் அறிக்கை

டில்லியில் மருத்துவ மாணவி நிர்பயா கற்பழித்துக் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளைத் தடுப்பது பற்றி ஆராய நீதிபதி வர்மா தலைமையில் மூன்று பேர் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் கமிஷன் தனது பரிந்துரையை 2013 ஜனவரி 23-ம் தேதி அரசிடம் சமர்ப்பித்தது. இந்த வர்மா கமிஷனின் முக்கிய பரிந்துரைகள் வருமாறு:

பெண்ணைக் கற்பழித்துக் கொலை செய்யும் குற்றவாளிகளுக்கு 20 ஆண்டுவரை சிறைத் தண்டனை விதிக்க வேண்டும். கும்பலாகக் கற்பழிப்பவர்களுக்கு ஆயுள்தண்டனை விதிக்க வேண்டும். பெண்களுக்கு எதிரான குற்றங்களின் வழக்கு விசாரணையை குறித்த காலவரைக்குள் நடத்தி முடிக்க வேண்டும். பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்படுவோர் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற வேண்டும் என்று எதிர்ப்பார்க்கக் கூடாது. பெண்களுக்கு எதிரான வன்முறையில் போது சட்டத்தை மீறுவோருக்கும் அதைத் தடுப்பதற்குச் சட்டரீதியான கடமையைச் செய்யத் தவறும் ஊழியர்களுக்கும் அதிகபட்சம் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்க வேண்டும் போன்ற பரிந்துரைகள் செய்யப்பட்டன.

## 6. மும்பையில் தீவிரவாதிகள் தாக்குதல் 26, நவம்பர் 2008

இந்தியாவின் வர்த்தக தலைநகரமான மும்பையில் 2008, நவம்பர் 26-ல் பாகிஸ்தானிய பயங்கரவாதிகள் 10 பேர் எதிரி நாட்டின் மீது போர் தொடுப்பதைப் போல பயங்கர ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகளுடன் தாக்குதல் நடத்தினார்கள். அவர்கள் தனித்தனிக் குழுக்களாகப் பிரிந்து அன்றைய தினம் இரவு 9.15 மணியில் இருந்து இரவு 10.50 வரை அடுத்தடுத்து 10 இடங்களில் இயந்திரத் துப்பாக்கிகளால் சுட்டும், கைஎறி குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினார்கள்.

லியோ போல்ட் கபே ஓட்டல், நரிமன்ஹவுஸ், சத்ரபதி சிவாஜி ரயில் நிலையம், தாஜ்மஹால் பேலஸ் ஓட்டல், டிரைடண்ட் ஓட்டல், காமா ஆஸ்பத்திரி, மெட்ரோ சினிமா தியேட்டர் போன்ற இடங்களில் சில நிமிட இடைவெளியில் அடுத்தடுத்து தாக்குதல் நடைபெற்றது. கண் இமைக்கும் நேரத்தில் நடந்துவிட்ட இந்த தாக்குதல்களால் மும்பை ரத்தக் களரியானது.

இதற்கிடையே கேட்வே ஆப் இந்தியா பகுதியில் உள்ள நூற்றாண்டு பழமை மிக்க தாஜ் ஓட்டலில் புகுந்த தீவிரவாதிகள் அங்கிருந்த 200-க்கும் மேற்பட்டோரை பிணையக் கைதிகளாக பிடித்து வைத்துக் கொண்டனர். எனவே மறுநாள் 27-ம் தேதி புனே மற்றும் டெல்லியிலிருந்து 2000க்கும் மேற்பட்ட ராணுவத்தினர் மற்றும் அதிவிரைவு கமாண்டோக்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் தீவிரவாதிகளுடன் கடுமையான துப்பாக்கி

சண்டையில் ஈடுபட்டனர்.

இந்த தீவிரவாதிகள் தாக்குதலில் 180-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியானார்கள். ஏராளமான பேர் படுகாயம் அடைந்தார்கள். மும்பை தீவிரவாதத் தடுப்பு போலீஸ் தலைவர் ஹேமந்த் ஹர்கரே, என்கவுண்டர் சிறப்பு அதிகாரி விஜய்சலங்கர், கூடுதல் கமிஷனர் அசோக் காம்ரே ஆகியோர் பலியானவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

இந்த பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்ட 9 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். உயிருடன் முகம்மது அஜ்மல்கசாப் என்ற தீவிரவாதி மட்டும் பிடிபட்டான். அவன் மீது வழக்கு தொடரப்பட்டு பின்னர் தூக்கில் போடப்பட்டான். இந்த சம்பவம் இந்திய பாகிஸ்தான் உறவை பெரிதும் பலித்தது.

## 7. காஷ்மீரில் ஏற்பட்ட புதிய சிக்கல்

ஜம்முகாஷ்மீர் வரலாற்றில் முதன் முறையாக 2008-ல் மாநிலத்தின் இரு பகுதிகளிலும் பெரிய குழப்பம் ஏற்பட்டது. ஸ்ரீஅமர்நாத் கோவிலுக்கு வருடாந்திர தரிசனத்திற்காக வரும் பயணிகளுக்காக மன்மோகன்சிங் அரசு ஒரு காட்டு வழிப்பாதையை அமர்நாத் கோவில் வாரியத்திடம் வழங்கியது. இதை எதிர்த்து காஷ்மீர் பள்ளத்தாக்கில் வாழும் பெருவாரியான முஸ்லீம்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். லட்சக்கணக்கான யாத்ரிகர்கள் வந்து செல்வதால் அதன் சுற்றுச் சூழல் முற்றிலும் பாதிக்கப்படும் என்று அவர்கள் கூறினர்.

இதனால் அரசு தனது முடிவை மாற்றிக் கொண்டது. இது இந்து மக்கள் வாழும் ஜம்மு பகுதியில் பெரும் கலவரத்தைத் தூண்டிவிட்டது. காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கும் ஒரே பாதை மூடப்பட்டது.இதனால் உணவும் மருந்துப் பொருட்களும் காஷ்மீருக்குள் செல்லமுடியாமல் போனது. எனவே காஷ்மீர் மக்கள் கொதித்தெழுந்தனர்.

2008 ஆகஸ்ட் மாதம் மாநில ஆளுநர் பல இந்து அமைப்புகள் இணைந்த அமர்நாத் சாவ்காஷ் சமிதியுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டதும் நிலைமை கட்டுக்குள் அடங்கியது. அந்த ஒப்பந்தத்தின் படி வருடாந்திர யாத்ரிகர்கள் வசதிக்காக தற்காலிக தங்குமிடம், கழிவறைகள் போன்றவை அமைக்க நூறு ஏக்கர் காட்டு நிலத்தைப் பயன்படுத்த வாரியத்துக்கு உரிமை அளிக்கப்பட்டது.

## 8. இமாலயன் சுனாமி : 2013

முழுவதும் மலைகளால் சூழப்பட்ட இயற்கை எழில் சூழ்ந்த உத்திர காண்ட் மாநிலத்தில் தான் ரிஷிகேஷ், ஹரித்துவார், கங்கோத்ரி, பத்ரிநாத், கேதார்நாத் போன்ற இந்துக்களின் புனித தலங்கள் உள்ளன. ஒவ்வொரு வருடமும் மே மாதத்தில் தொடங்கும் ஆதிசங்கர ஜெயந்தி விழாவைக் கொண்டாட இந்தியா முழுவதுமிருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் இங்கு

கூடுவார்கள்.

2013-ல் தென்மேற்கு பருவமழையின் திடீர் சீற்றத்தால் உத்திரகாண்ட் மாநிலத்தில் ஜூன் மாதம் பெய்த கனமழை மற்றும் நிலச்சரிவுகளால் 5700க்கும் மேற்பட்ட மக்கள் பலியாகினர். குறிப்பாக பத்ரிநாத், கேதர்நாத் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். சாலைகள் முற்றிலும் துண்டிக்கப்பட்டன. சுமார் ஆயிரம் பாலங்கள் உடைந்து நொறுங்கின. 200க்கும் அதிகமான கிராமங்கள் துண்டிக்கப்பட்டன. உத்ரகாண்டில் உள்ள உத்ரகாசி, தெக்ரி, ஹரித்துவார், டேராடூன் ஆகிய மாவட்டங்களில் பலத்த சேதம் ஏற்பட்டது.

இந்த மாநிலத்தில் யமுனா நதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு கடும் சேதத்தை ஏற்படுத்தியது. லபரா என்ற கிராமமே நீரில் மூழ்கியது. அந்த கிராமத்தை இணைக்கும் 2 கி.மீ. சாலை வெள்ளத்தில் அழிந்து விட்டது. இது தவிர கரையோரம் இருந்த பல மாடி கட்டிடங்கள் வெள்ள அரிப்பில் சிக்கி இடிந்து விழுந்தன.

உத்திரகாண்டில் ராணுவம், துணை ராணுவம், எல்லையோரப் பாதுகாப்புப் படை, விமானப்படை, பேரிடர் மீட்புக்குழு என சுமார் 8500 ராணுவவீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். 40 ஹெலிகாப்டர்கள் மீட்புப் பணியில் பயன்படுத்தப்பட்டன. இந்திய வரலாற்றிலேயே மிகப்பெரிய மீட்புப் பணி இது தான் என்றது ராணுவம். உத்திரகாண்டில் இயற்கையின் இந்த ருத்ரதாண்டவத்தில் இருந்து உத்திரகாண்ட் மாநிலம் மீண்டு வர இன்னும் 10ஆண்டுகளாவது ஆகும் என்கிறார்கள் நிபுணர்கள்.

## 9. உங்கள் கையில் உங்கள் பணம் திட்டம்

அரசின் பல்வேறு மானிய உதவிகள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு நேரடியாகச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் 2013, ஜனவரி 1ல் உங்கள் கையில் உங்கள் பணம் என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஜூன் 1 முதல் இத்திட்டத்தின் கீழ் சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கான மானியத் தொகையை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் சேர்க்கும் நடைமுறை அமலுக்கு வந்தது. பின் இந்த திட்டம் 291 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டத்தில் ஆதார் அட்டை வைத்துள்ளோரின் வங்கிக் கணக்கில் மானியம் வரவு வைக்கப்பட்டது. இத்தொகையுடன் பயனாளிகள் எரிவாயு சிலிண்டரை சந்தை விலையில் வாங்கி வந்தனர். இதன்படி 2.80 கோடி குடும்பத்திற்கு 5,400 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது.எனினும் ஆதார் அட்டை இருந்தால் மட்டுமே மானியத் தொகையை பெற முடியும் என்பதால் இந்த அட்டை அல்லது வங்கி கணக்கு இல்லாதவர்களுக்கு சமையல் எரிவாயு மானியம் கிடைக்கவில்லை. இதனால் 2014, மார்ச் 7-ம் தேதி இந்த திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதாக அரசு அறிவித்தது.

இத்திட்டம் குறித்து மறு ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட எஸ்.ஜி. தாண்டே தலைமையிலான குழு, இத்திட்டம் கண்டிப்பாகத் தொடர வேண்டும் என்று தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

## மன்மோகன்சிங் ஆட்சிக்காலத்தில் இயற்றப்பட்ட முக்கிய சட்டங்கள் பின்வருமாறு:

### 1. தகவல் பெறும் உரிமைச்சட்டம் : 2005

அரசின் செயல்பாடுகள் பற்றி மக்கள் அறிந்து கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இயற்றப்பட்ட சட்டமாகும். இச்சட்டம் 2005, அக்டோபர் 12-ல் இந்தியப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டு அமல்படுத்தப்பட்டது. இந்த சட்டம் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைத் தவிர மற்ற அனைத்து இந்தியப் பகுதிகளுக்கும் பொருந்தும். இச்சட்டத்தை அமல் படுத்திய 55வது நாடு இந்தியா ஆகும்.

அரசு அதிகாரிகளிடமிருந்து தகவல்கள் பெறும் உரிமை அடிப்படை உரிமையாக மக்களுக்கு வழங்கும் வகையில் இச்சட்டம் உள்ளது. எனவே அரசு அலுவலகங்கள் ஒவ்வொன்றின் செயல் திறனிலும் வெளிப்படையான நிலை, செயலாற்றுபவர்களிடையே பொறுப்புடைமையை மேம்படுத்துதல், அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்களின் செயலாற்றல் குறித்த தகவல்களை குடிமக்களுக்கு அளித்தல், ஊழலை ஒழித்தல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது இந்த சட்டம்.

இச்சட்டப்படி தகவல் பெறும் உரிமை இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் உண்டு. தகவல் கேட்பவர் அதற்கான காரணத்தைக் கூற வேண்டும் என்பதில்லை. தகவல் கேட்பவர் தன்னைப் பற்றிய விபரங்களைக் கொடுக்கவும் தேவை இல்லை.

ஒருவர் தாம் அறிய வேண்டிய தகவல்கள் குறித்து தொடர்புடைய அலுவலகத்தின் தகவல் தொடர்பு அதிகாரியிடம் ரூ. 10 கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தாலே போதுமானது. வேண்டிய தகவலை அளிக்க மறுத்தாலோ, தவறான தகவல் அளித்தாலோ, காலதாமதம் ஏற்படுத்தினாலோ, சம்பந்தப் பட்டவர்கள் ரூ. 20,000 வரை அபராதம் செலுத்த வேண்டும். பாதுகாப்பு காரணங்களுக்காக உளவுத்துறை, RAW போன்ற 18 அமைப்புகள் இச்சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளன. மத்திய மற்றும் மாநில தகவல் தொடர்பு ஆணையங்கள் இந்த தகவல் அறியும் உரிமை சட்டத்தை செயல்படுத்தும் அதிகாரம் பெற்றவை ஆகும்.

### 2. அமைப்பு சாரா பணியாளர்களின் சமூகப் பாதுகாப்பு சட்டம், 2008

வீட்டுத் தொழிலாளி, சுய வேலைத் தொழிலாளி அல்லது அமைப்பு சாராத் துறையின் கூலித்தொழிலாளி மற்றும் அட்டவணையில் குறிப்பிடப்

படாத அமைப்பு சார்ந்த தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்விற்காக இச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் படி 'தேசிய அமைப்பு சாரா பணியாளர்களின் சமூகப்பாதுகாப்பு வாரியம்' ஒன்று அமைக்கப்பட்டது. இந்தச் சட்டப்படி பாதுகாப்பு பெறுவதற்கு ஒவ்வொரு அமைப்புசாரா பணியாளர்களும் 14வயது நிறைந்தவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் மாவட்ட நிர்வாகத்தில் தங்களைப் பதிவு செய்து கொண்டு அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும். இவர்களுக்காக இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத்திட்டம், ஜனனி சுரக்ஷ யோஜனா, கைத்தறி நெசவாளர் மற்றும் கைவினைக் கலைஞர்களின் விரிவான நலத்திட்டம், ஆம் ஆத்மி பீமயோஜனா போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

## 3. இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009

இந்த சட்டம் 2009-ம் வருட 86-வது அரசியலமைப்புத் திருத்த சட்டப்படி அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் அடிப்படை உரிமைகளில் விதி 21A வில் சேர்க்கப்பட்டுள்ளது. இதன்படி 6 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி பெறுவது அடிப்படை உரிமையாக்கப்பட்டுள்ளது. தொடக்கக் கல்வி பெறுவது குடிமக்கள் அனைவருக்கும் அடிப்படை உரிமையாகும். இது மறுக்கப் பட்டால் பாதிக்கப்பட்ட நபர் நேரடியாகப் பூர்த்தி செய்யப்பட்ட நீதிப் பேராணை மனுமூலம் சட்டவிதி 32 மற்றும் 226-ன்படி உச்சநீதி மன்றத்தையோ உயர்நீதி மன்றத்தையோ அணுகமுடியும்.

அரசு பள்ளிகள் இலவசக் கல்வியை அனைத்துக் குழந்தைகளுக்கும் அளிக்கும். அதே போல தனியார் பள்ளிகள் பொருளாதாரத்தில் பின் தங்கிய குழந்தைகளுக்கு குறைந்தது 25% கட்டணமாகவோ அல்லது கட்டணம் இன்றியோ அளிக்கலாம். பள்ளி உள்கட்டமைப்பு தேவையான அளவு மேம்படுத்தப்பட வேண்டும். வயது ஆதாரம் இல்லாத எந்தக் குழந்தை களையும் பள்ளியில் சேர்க்கக்கூடாது. தொடக்கக்கல்வி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெறும்வரை குழந்தைகளை வெளியேற்றக்கூடாது. ஒவ்வொரு தந்தையும் அல்லது காப்பாளரும் தங்கள் குழந்தைகளுக்குத் தேவையான தொடக்கக் கல்வியை வழங்குவதற்கு அருகில் உள்ள பள்ளிகளில் சேர்க்க வேண்டும்.

## 4. உணவுப் பாதுகாப்பு சட்டம் : 2013

2013, செப். 12-ம் தேதி பாராளுமன்றத்தில் உணவுப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கி உள்ளவர்கள் அனைவருக்கும் உணவு கிடைக்கவேண்டும் என்பதே இந்தச் சட்டத்தின்

நோக்கமாகும். இதன் மூலம் இந்திய மக்கள் தொகையில் 63.5 சதவீதம் பேர் பயனடைவர்.

குறிப்பாக பெண்கள், குழந்தைகள், ஆதரவற்றோர், இயற்கைப் பேரழிவில் சிக்கியோர், பட்டினியால் வாடுபவர்கள் என அனைவருக்கும் கட்டாயமாக உணவு கிடைக்கும்.

இந்தச் சட்டம் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இதற்குக் காரணம் முன்னுரிமைப் பிரிவினர், பொதுப்பிரிவினர் என்று வகைப்படுத்தப் பட்டதேயாகும். முன்னுரிமைப் பிரிவினருக்கு மாதம் 7 உணவுப் பொருட்கள் கிடைக்கும். அரிசி கிலோ 3 ரூபாய்க்கும், கோதுமை கிலோ 2 ரூபாய்க்கும், சிறுதானியங்கள் கிலோ ஒரு ரூபாய்க்கும் கிடைக்கும். பொதுப்பிரிவு குடும்ப அட்டைதாரர்களுக்கு 3 உணவுப் பொருட்கள் கிடைக்கும். இதன் மூலம் கிராமங்களில் 75 சதவீத மக்களுக்கும், நகர்ப்புறங்களில் 50 சதவீதம் மக்களுக்கும் மானிய விலையில் உணவுப் பொருட்கள் கிடைக்கும். ஆனால் முன்னுரிமைப் பிரிவினர், பொதுப்பிரிவினர் என்று யாரும் அடையாளப் படுத்தப்படவில்லை.

## 5. லோக்பால் சட்டம் : 2014

ஊழலை ஒழிப்பதற்கு வலிமையான லோக்பால் சட்டம் தேவை என்று சமூக ஆர்வலர் அன்னாஹசாரே டில்லியில் 2011-ஏப்ரலில் உண்ணாவிரதம் மேற்கொண்டார். அதன் தொடர்ச்சியாக மத்திய அரசால் 2011 டிசம்பரில் லோக்பால் மசோதா நிறைவேற்றப்பட்டது. 2013 டிசம்பர் 17-ல் ராஜ்யசபாவில் நிறைவேற்றப்பட்டு, 2014 ஜனவரி 1ல் குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற்று சட்ட மாகியது. இச்சட்டத்தின்படி மத்தியில் லோக்பால் என்ற அமைப்பும் மாநிலங்களில் லோக் ஆயுக்தா என்ற அமைப்பும் அமைக்கப்படும்.

இந்த லோக்பால் குழு எந்தத் தலையீடும் இல்லாமல் சுதந்திரமாக விசாரணையில் ஈடுபடமுடியும். லோக்பால் அதிகார வரம்பிற்குள் பிரதமர் அனைத்து அரசு மற்றும் பொது ஊழியர்கள், அரசு நிதி உதவி பெறும் சங்கம் மற்றும் அறக்கட்டளை போன்ற அனைத்தும் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த சட்டப்படி ஊழல் வழக்கு விசாரணையை ஒரு ஆண்டுக்குள் முடிக்க வேண்டும். ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவரின் சொத்துக்களை வழக்கு விசாரணையின் போதே முடக்க லோக்பாலுக்கு அதிகாரம் உண்டு. குற்றம் நிரூபிக்கப்பட்ட பிறகு அரசுக்கு ஏற்பட்ட இழப்பை தண்டனை பெற்றவரே திரும்ப செலுத்த வேண்டும். லஞ்சம், ஊழலில் சேர்த்த சொத்து மற்றும் பணத்தை பறிமுதல் செய்யும் அதிகாரம் லோக்பாலுக்கு உண்டு. சிறப்பு நீதி மன்றம் அமைக்கவும் அதிகாரம் உண்டு.

## 7. பாலியல் வன்முறைத் தடைச்சட்டம் : 2013

டில்லியில் 2012, டிசம்பர் 16-ல் மருத்துவ மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப்பட்ட பிறகு பிறப்பிக்கப்பட்ட அவசர சட்டத்திற்கு மாற்றாக, மேற்கண்ட பாலியல் வன்முறைத் தடைச் சட்டம் 2013, ஏப்ரலில் நிறைவேற்றப்பட்டது. பாலியல் வன்கொடுமைகள் அனைத்துக்குமான தண்டனைகளை கடுமையாக்க இச்சட்டம் வகை செய்துள்ளது.

இச்சட்டப்படி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளானவர் உயிரிழந்தாலோ நிரந்தர செயலற்ற நிலைக்குத் தள்ளப்பட்டாலோ குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்படும். குற்றவாளிக்கு குறைந்த பட்சம் 20 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், தேவைப்பட்டால் ஆயுள் தண்டனையாக நீட்டிக்கவும் இச்சட்டத்தில் இடம் உள்ளது.

பெண்களைத் தவறான எண்ணத்துடன் பின் தொடர்தல், ஆபாச வார்த்தைகள் பேசுதல் ஆகிய குற்றங்கள் இரண்டாவது முறையாகத் தொடர்ந்தால் அவற்றை ஜாமீன் பெற முடியாத குற்றங்களாக இச்சட்டம் வகைப்படுத்தியுள்ளது. அமிலம் வீசி அதனால் இழைக்கப்படும் அநீதிகளுக்கு 10 ஆண்டுகள் முதல் ஆயுள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும். ஆனால் இந்த இச்சட்டவிதிகள் 18 வயதுக்கு குறைந்த குற்றமிழைத்தோருக்குப் பொருந்தாது.

# மெகா ஊழல்கள்

## 1. 2.ஜி அலைவரிசை ஊழல்

இந்திய அரசியல்வாதிகளும் அதிகார வர்க்கமும் சம்பந்தப்பட்ட வரலாற்றில் மிகப்பெரிய ஊழல் 2. ஜி அலைவரிசை ஊழல் ஆகும். இதனால் அரசு கருவூலத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 1.76 லட்சம் கோடி என இந்திய தணிக்கைக் கட்டுப்பாட்டு அதிகாரி கண்டு பிடித்து வெளியிட்டிருந்தார். 2ஜி அலைக்கற்றையை ஏலமுறையில் விற்பனை செய்யாமல் போனதால் ஏற்பட்ட இழப்புதான் இது. அதாவது 2010-ல் ஏலமுறையில் உரிமம் வழங்கப்பட்ட 3ஜி அலைவரிசை ஒதுக்கீட்டில் அரசு அடைந்த வருவாயை அடிப்படையாக வைத்து 2 ஜி அலைவரிசையில் எவ்வளவு வருவாய் ஈட்டி யிருக்க முடியும் என்று கணக்கீடு செய்தது இந்திய தணிக்கைக் கட்டுப்பாட்டு அலுவலகம்.

இந்த ஊழலுக்கு மூளையாகச் செயல்பட்டவர் மத்திய தகவல் தொடர்பு துறை அமைச்சரான அ.ராஜா என்று சி.பி.ஐ. குற்றம் சாட்டியது. சேவை செய்யத் தகுதியே இல்லாத ஸ்வான் மற்றும் யூனிடெக் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கியது தனக்கு வேண்டிய நிறுவனங்களுக்கு மிகக்குறைந்த விலையில் முறைகேடாக உரிமம் வழங்கியது போன்றவை ராஜா மீது

சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டாகும். 2008-ம் ஆண்டில் 2ஜி அலைவரிசை உரிமம் வழங்கப்பட்டதிலிருந்தே இதில் ஊழல் நடந்திருந்தாலும், 2011 நவம்பர் மாதம் தான் ராஜா பதவி விலகினார். 2011 பிப்ரவரியில் கைது செய்யப்பட்டார். மோசடி, முறைகேடு மற்றும் பதவியைப் பயன்படுத்தி அரசுக்கு பொருளாதார இழப்பை ஏற்படுத்துதல் ஆகிய குற்றப் பிரிவுகளிலும், ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழும் ராஜா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் நீண்ட பட்டியலில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மகளும் ராஜ்யசபா எம்.பியுமான கனி மொழியும் உண்டு. ஸ்வான் டெலிகாம் நிறுவனம் 2ஜி அலைவரிசை உரிமம் பெறுவதற்காக அவர்களது சார்பு நிறுவனங்கள் மூலம் கலைஞர் தொலைக் காட்சி நிறுவனங்களுக்கு ரூ. 200 கோடி லஞ்சமாக கொடுக்கப்பட்டதை சி.பி.ஐ. ஆதாரங்களுடன் கண்டு பிடித்தது. இந்த லஞ்சப் பண பரிமாற்றத்திற்கு பின்புலத்தில் இருந்து செயல்பட்டதாக கனிமொழி கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். மேலும் பிரபல தொழில் அதிபர் களான சஞ்சய் சந்திரா, ஷாசித் பால்வா, வினோத் கோயங்கா, கௌதம் ஜோஷி போன்றோர் மீதும் குற்றம் சாட்டப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை மறுத்து வருகிறார்கள். இந்த ஊழல் வழக்கு விசாரணை 2011, நவம்பர் 11 முதல் நடந்து வருகிறது.

## 2. காமன் வெல்த் போட்டி ஊழல்

2010-ல் டெல்லியில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி களின் போது நடந்ததாகக் கூறப்படும் ஊழல் மற்றும் நிதி மோசடிகள் குறித்த குற்றச் சாட்டுகளின் அடிப்படையில் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிக் குழுவின் அமைப்புச் செயலாளரான சுரேஷ் கல்மாடி 2011, ஏப்ரல் 25-ல் மத்திய குற்றப்புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டார்.

போட்டிகளுக்குத் தேவையான கருவிகள் மற்றும் சாதனங்களை ஒரு சுவிஸ் நிறுவனத்திடம் வாங்கியதில் நிதிமோசடி, வீரர்கள் தங்குவதற்கு துணை நகரங்கள் அமைக்கப்பட்டதில் முறை கேடு, பல டெண்டர்கள் மற்றும் ஒப்பந்தங்களை முற்றிலும் தகுதியற்ற ஊழல் பேர்வழிகளுக்கும் நிறுவனங் களும் வழங்கி முறை கேடு செய்தது, சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஸ்வாட்ச் என்ற நிறுவனத்தோடு இணைந்து பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டு அரசுக்கு பெருந்த பொருள் இழப்பை ஏற்படுத்தினார் என்று சுரேஷ் கல்மாடி மீது சிபிஐ குற்றம் சாட்டியது. இவர் ஒரு காங்கிரஸ்காரர் என்பதால் மன்மோகன்சிங் அரசுக்கு பெரும் அவப்பெயர் ஏற்பட்டது.

## 3. நிலக்கரி சுரங்க ஊழல்

இந்தியாவில் இதுவரை நடைபெற்ற ஊழல்களின் மகாராணி, நிலக்கரி சுரங்க ஊழல் என்று இந்திய பத்திரிக்கைகள் வர்ணித்தன. 2004-ம் ஆண்டே

நிலக்கரி சுரங்க ஊழலுக்கான வித்து நடப்பட்டு விட்டது. அப்போது தொடங்கி 2009-ம் ஆண்டு வரை கோல் இந்தியா நிறுவனத்திற்குச் சொந்தமான நிலக்கரி வயல்களை மன்மோகன்சிங் அரசு தனியார் முதலாளிகளுக்கு அடிமாட்டு விலைக்கு வாரி வழங்கி விட்டது.

மத்திய அரசின் கைவசம் உள்ள நிலக்கரி வயல்களில் 3319.9 கோடி டன் நிலக்கரி இருப்பு இருந்தது. இதைக் கொண்டு அடுத்த 50 ஆண்டுகளுக்கு ஒரு நாளைக்கு 1,50,000 மெகாவாட் வீதம் அனல் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். இதைச் சரிபாதியாகப் பிரித்து 1700 கோடி டன் நிலக்கரி இருப்பு கொண்ட நிலக்கரி வயல்களை கார்ப்பரேட் முதலாளிகளுக்கும், 1616.9 கோடி டன் நிலக்கரி வயல்கள் மத்திய மாநில அரசுகளின் பொதுத்துறை நிறுவனங் களுக்கும் கொடுக்கப்பட்டது.

உலகச் சந்தையில் ஒரு டன் நிலக்கரியின் விலை ரூ. 14,000 ஆகும். இந்திய சந்தையில் கோல் இந்தியா நிறுவனம் மானிய விலையில் விற்பதால் ஒரு டன் 2000 ரூபாய் முதல் 2500 வரையே இருந்தது. அதாவது நாட்டின் இயற்கை வளத்தை ஒரு டன் ஐம்பதுக்கும், நூறுக்கும் என்ற ரீதியில் விற்று விட்டது மன்மோகன்சிங் அரசு. 2011, மார்ச் நிலவரப்படி நிலக்கரியின் இந்திய சந்தை விலையை வைத்துக் கணக்கிட்டாலே அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 10.67 லட்சம் கோடி ரூபாய் என்று துல்லியமாக சொன்னது மத்திய கணக்கு தணிக்கையாளர் அறிக்கை.

அதே சமயம் நிலக்கரி வயல்களை அடிமாட்டு விலைக்கு வாங்கிய மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள பிரகாஷ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் 25 கோடி டன் நிலக்கரியை கள்ளச்சந்தையில் விற்று 4000 கோடி ரூபாய் லாபமடைந்தது. இதே போல் கொல்கத்தாவை சேர்ந்த எலக்ட்ரோ ஸ்டீல் நிறுவனம், ஒடிசாவின் நவபாரத் நிறுவனம் போன்ற நிறுவனங்கள் கோடி கோடியாக லாபம் சம்பாதித்தன.

இந்த ஊழல் வெளிப்பட்ட போது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் அரசு மீது குற்றம் சாட்டின. இதையடுத்து நிலக்கரி சுரங்க ஊழல் பற்றி விசாரிக்க மத்திய கண்காணிப்பு ஆணையம் (சி.பி.சி) மற்றும் மத்திய புலனாய்வு நிறுவனத்தை அமைத்தது அரசு. இந்தப் பிரச்சனையில் முன்னாள் நிலக்கரித் துறை செயலர் பி.சி. பரேக், தொழிலதிபர் குமாரமங்கலம் பிர்லா போன்றோர் மீது சி.பி.ஐ வழக்கு பதிவு செய்தது. இது தொடர்பாக மொத்தம் 20 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

## 4. ஐ.பி.எல் சூதாட்ட ஊழல்

இந்தியாவை மட்டுமல்லாமல் உலக கிரிக்கெட் ரசிகர்களையே திரும்பிப் பார்க்க வைத்தது 2013-ல் இந்தியாவில் நடந்த 20.20 ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் ஆகும். 2013 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் சென்னை, மும்பை

டெல்லி உட்பட பல்வேறு மாநிலங்களில் போட்டிகள் நடைபெற்றது. இதில் கிரிக்கெட் வீரர்களே சூதாட்டத்தில் ஈடுபட்டது தெரிய வந்தது.

ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியின் போது சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ராஜஸ்தான் ராயல் அணி வீரர்கள் ஸ்ரீசாந்த், அஜித் சண்டிலா, அங்கீத் சவான் மற்றும் சில புரோக்கர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். வீரர்களின் இந்த சூதாட்ட பேரம் இந்தியப் பாராளுமன்றம் உட்பட பல இடங்களிலும் பலத்த சர்ச்சையை எழுப்பியது. இது பற்றி விசாரித்த ஐ.பி.எல் விசாரணைக்குழு சூதாட்டத்தில் ஈடுபட்ட கிரிக்கெட் வீரர்களுக்கு போட்டியில் பங்கேற்க வாழ்நாள் தடை விதிக்கப்பட்டது. இந்த கிரிக்கெட் சூதாட்ட ஊழல் கிரிக்கெட் வீரர்கள் மத்தியிலும், ரசிகர்கள் மத்தியிலும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

### 5. ஹெலிகாப்டர் ஊழல்

அதிமுக்கிய நபர்களின் பயணத்திற்காக பயன்படுத்தப்படும் AW101 ஹெலிகாப்டர்களுக்கு இந்தியாவிலிருந்து ஆர்டர் கிடைப்பதற்காக கோடிக்கணக்கான ரூபாய் லஞ்சம் கொடுக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டையடுத்து, ஹெலிகாப்டர் கம்பெனி தலைவர் சில்பே ஒர்சி என்பவர் இத்தாலியில் 2013 பிப். 11-ல் கைது செய்யப்பட்டார். இதையடுத்து இந்த ஹெலிகாப்டர் ஒப்பந்தம் தொடர்பாக சி.பி.ஐ விசாரணைக்கு பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே அந்தோணி உத்தரவிட்டார். இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

வழக்கின் ஆதாரங்களைத் தேடி இத்தாலி சென்ற சி.பி.ஐ. கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் இந்திய விமானப்படை முன்னாள் தலைவர் எஸ்.பி. தியாகி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மீது வழக்குப் பதிவு செய்தது. 3600 கோடி ரூபாய்க்கான இந்த வணிக ஒப்பந்தத்திற்கு வழங்கப்பட்ட லஞ்சப் பணம் 360 கோடி ரூபாய் ஆகும்.

இவை தவிர ஆதர்ஷ் அடுக்குமாடி குடியிருப்பு ஊழல், எஸ்பாண்டு ஊழல், விவசாயக் கடன் ஊழல் போன்ற ஊழல் புகார்களால் மன்மோகன் சிங் அமைச்சர்களின் நம்பகத் தன்மையை இழந்தது.

## மன்மோகன்சிங்கின் வெளி உறவுக் கொள்கை

### 1. இந்திய அமெரிக்க உறவு

சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவும் அமெரிக்காவும் அணுசக்தியை மக்கள் நலனுக்காகப் பயன்படுத்துவது பற்றி இணைந்து [illegible] ஒப்பந்தம் செய்தன. பிரதமர் மன்மோகன்சிங் ஜூலை 2005-ல் அமெரிக்கா சென்றதால் கிடைத்த பலன் இது. இந்த ஒப்பந்தம் இந்தியா அணுசக்தி தயாரிப்பதற்கான எரிசக்தி, அணுஉலை, போன்றவற்றை

அமெரிக்கா மற்றும் பிறநாடுகளிலிருந்து வாங்குவதற்கு அனுமதி அளிக்கிறது. இதற்குப் பதிலாக இந்தியாவிலுள்ள அணுசக்தி நிலையங்களில் சிவில் பகுதிகளைப் பார்வையிட அனுமதி வழங்கும். உலக அணுசக்தி ஏஜென்சி (IAEA) மேற்பார்வை செய்வதற்கும் இந்தியா ஒத்துக் கொண்டது.

இந்த உடன்பாடு இந்தியாவில் அதிகமாக விவாதிக்கப்பட்டது. அணுசக்தி பரிசோதனையை இந்தியா விருப்பபூர்வமாக நிறுத்தி வைத்துள்ளது. எதிர்காலத்தில் இந்தியா அணு ஆயுதப் பரிசோதனை செய்தால் அமெரிக்கச் சட்டப்படி இந்தியாவுக்கு எரிபொருள் மற்றும் தொழில்நுட்பம் கொடுப்பதை அமெரிக்கா நிறுத்திக் கொள்ளும் என்று கூறப்பட்டது.

ஆனால் உடன்பாட்டில் கண்டுள்ளதை மட்டுமே இந்தியா நிறைவேற்றும் அமெரிக்காவின் சட்டம் இந்தியாவைக் கட்டுப்படுத்தாது என்று அரசாங்கம் கூறியது. இந்தியாவுக்கு யுரேனியம் தேவைப்படுகிறது. இந்தியாவின் சக்தி தேவை அதிகரித்துக் கொண்டே செல்வதால் சிவிலியன் அணுசக்தித் திட்டத்தை இந்தியா நிறைவேற்ற வேண்டும். இந்திய அணு ஆயுதம் உள்ள நாடு என்று இந்த உடன்பாடு அங்கீகரிக்கிறது. அது இந்தியாவுக்கு பெரிய லாபம் ஆகும்.

2007, ஜூலை இறுதியில் உடன்படிக்கை இறுதியாக்கப்பட்டது. 2007 ஜூலை 27-ல் வெளிஉறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியும், அமெரிக்க வெளிஉறவுச் செயலர் கண்டலீசா ரைசும் கூட்டறிக்கை வெளியிட்டார்கள். அணுசக்தி துறையில் சமாதான ரீதியான ஒத்துழைப்புக்கு இரண்டு நாடுகளும் நடத்திய பேச்சுவார்த்தை இறுதியாக்கப்பட்டு விட்டது என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இறுதியில் 2008, அக்.10ல் உடன்பாடு கையெழுத்திடப் பட்டது.

இந்த 123 உடன்பாடு அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் மிகவும் முக்கியமான முன் முயற்சியாகும். இந்த 123 அணுசக்தி உடன்படிக்கைப் படி அமெரிக்காவிலிருந்து வாங்கிப் பயன்படுத்தப்பட்ட எரி பொருளை மறுசுழற்சி செய்ய இந்தியாவுக்கு உரிமை உண்டு. இந்தியாவின் அணு உலைகளுக்கு தடையில்லாதபடி எரிபொருள் சப்ளை செய்ய அமெரிக்கா உத்திரவாதமளிக்கிறது. மற்ற நாடுகளின் உதவியுடன் எரிபொருள் கையிருப்பு வைத்துக்கொள்ள இந்தியாவுக்கு அமெரிக்கா உதவி செய்யும். இந்தியாவின் அணுஆயுதத் தயாரிப்புத் திட்டத்தின் வளர்ச்சியை அமெரிக்கா தடுக்காது. இதுவரை கையெழுத்திட்ட உடன்பாடுகளில் பெரும்பாலான வற்றில் அணுகுண்டு சோதனை செய்யக்கூடாது என்ற ஷரத்து உள்ளது இந்தியாவுடன் கையெழுத்திட்ட உடன்படிக்கையில் அந்த ஷரத்து இல்லை.

இந்த அணுசக்தி உடன்படிக்கைக்கு மக்களிடம் பரவலாக ஆதரவு இருந்தது. ஆனால் மன்மோகன் சிங்கின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு

வெளியிலிருந்து ஆதரவு கொடுத்து வந்த இடதுசாரி கட்சிகள் உடன்படிக்கையின் சில ஷரத்துக்களை எதிர்த்தன.

## 2. இந்திய பாகிஸ்தான் உறவு

2005, மார்ச், ஏப்ரலில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகள் இரு நாடுகளுக்குமிடையே பகைமையைக் குறைக்கும் விதமாக இருந்தது. ஏப்ரல் மாதம் இந்தியா பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியைப் பார்க்க டெல்லி வந்தார் பாகிஸ்தான் அதிபர் முஷராப். அப்போது அவர் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் முடிவில் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. காஷ்மீர் பிரச்சனையை முன்னோக்கு ரீதியில் பயனுள்ளதாக முடிவு செய்ய வேண்டும் என்று உறுதி பூண்ட அவர்கள் இந்த அமைதி நடவடிக்கைகளில் எவ்வித தீவிரவாதமும் குறுக்கிடக் கூடாது என்றும் கருத்து தெரிவித்தனர். இதன் தொடர்ச்சியாக 2005 ஏப்ரல் மாதம் 170 கி.மீ. தூரமுள்ள ஸ்ரீநகர் முஸாராபாத் பஸ் போக்குவரத்து துவங்கப்பட்டது. 56 ஆண்டுகளில் முதன் முறையாக இரண்டு காஷ்மீர் மக்களும் ஒருவரை ஒருவர் சந்திக்க இந்த பஸ் போக்குவரத்து வாய்ப்பளித்தது.

ஆனால் 2008 நவம்பர், 26-ல் பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட மும்பை குண்டு வெடிப்பு சம்பவத்தை அடுத்து இந்தியா பாகிஸ்தான் இடையேயான அமைதி நடவடிக்கையில் பெரும்பின்னடைவு ஏற்பட்டது. 180 பேர் பலியாகக் காரணமான இந்த சம்பவத்தில் பாகிஸ்தான் உரிய நடவடிக்கை எடுக்க ஆர்வம் காட்டவில்லை. பாகிஸ்தான் தீவிரவாத அமைப்பான லஸ்கர்-இ- தொய்யாவே காரணம் என இந்தியா சந்தேகப்பட்டது. இதை முதலில் ஏற்றுக் கொள்ள மறுத்த பாகிஸ்தான் சில மாதங்களுக்குப் பின் ஒத்துக் கொண்டது. கைது செய்யப்பட்ட தீவிரவாதி அஜ்மல் கசாப்பும் ஒத்துக் கொண்டான்.

2009-ல் இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் சந்திப்பு நடந்தது. ஆனாலும் எந்த பலனும் ஏற்படவில்லை. பிரதமர் மன்மோகன்சிங் பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரியை ரஷ்யாவில் யேக்டேரிங் பர்க் என்ற நகரத்தில் 2009 ஜூன் மாதம் நடைபெற்ற ஷாங்காய் கூட்டாண்மை அமைப்பின் உச்சி மாநாட்டின் போது சந்தித்தார். அப்போது மும்பை தாக்குதல் தொடர்பான தீவிரவாத அமைப்பு மீது பாகிஸ்தான் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சிங் கேட்டுக் கொண்டார். அடுத்து எகிப்தில் நடந்த அணிசேரா உச்சிமாநாட்டின் போதும் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானியும், மன்மோகன்சிங்கும் சந்தித்துப் பேசினர். ஆனால் இவற்றால் எந்த பலனும் இல்லை. அமைதிப் பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் இல்லை.

சிதைந்து போன இந்திய உறவைத்துளிர்க்க வைக்க பாகிஸ்தானின் புதிய இளம் வெளிஉறவு அமைச்சர் ஹினா ரப்பானி 2011-ல் டில்லி வந்து இந்திய வெளிஉறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவை ஆக்கப்பூர்வமான பேச்சு வார்த்தையின் நிமித்தம் சந்தித்தார். அப்போது இந்தியாவுடன் பாகிஸ்தான் நல்லுறவை விரும்புவதாகவே கூறினார்.

2013-ல் பாகிஸ்தான் பிரதமரானார் நவாஸ் ஷெரிப். பிரதமர் மன்மோகன் சிங்கும் நவாஸ் ஷெரிபும் செப். 2013-ல் நியூயார்க்கில் சந்தித்துப் பேசினர். இரு நாடுகளும் பொறுமையும், கட்டுப்பாடும் காக்க முடிவெடுத்தனர். இரு நாட்டு உறவை வலுப்படுத்த அமைதிப் பேச்சுவார்த்தையே சிறந்த வழி என்றார் நவாஸ் ஷெரிப், தீவிரவாதமும், வன்முறையும் இல்லாத சூழ்நிலையை உருவாக்க ஒத்துழைப்பு இருக்குமானால் இந்தியா இருநாட்டு உறவை மேம்படுத்த உறுதியுடன் இருப்பதாகக் கூறினார் மன்மோகன்சிங்.

### 3. பிற நாடுகளுடன் உறவு :

a. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே இருநாட்டு எல்லையில் குறிப்பாக மேற்குப் பகுதியில் நடைபெற்ற சில உரசல் நிகழ்வுகளால் இரு நாட்டு உறவில் தொய்வு ஏற்பட்டது. 2013 அக்டோபரில் இந்தியப் பிரதமரின் சீனப்பயணம் இருநாடுகளுக்கிடையேயான நட்புறவில் ஒரு புத்துணர்வு நிகழ்வு என்று கூறலாம். எல்லைப் பகுதியில் அமைதி குலையாமலிருக்க ஒத்துழைப்பு கொடுத்தால் மட்டுமே சீனாவுடன் வர்த்தகம் போன்ற பிற துறைகளில் இணைந்து செயலாற்ற முடியும் என்று தெரிவித்தார் மன்மோகன் சிங். இதையடுத்து இருதரப்பு உயர்நிலை அதிகாரிகளின் எல்லைப் பாதுகாப்பு கூட்டுச் செயலாக்க ஒப்பந்தம் உருவாக்கம் பற்றிய ஆலோசனைகளில் ஈடுபட்டனர்.

b. மன்மோகன் சிங் காலத்தில் இந்தியாவும் வங்காள தேசமும் தங்களுக்கிடையேயான பரஸ்பர உறவை வலுப்படுத்துவதில் முன்னேற்றம் கண்டன. இவ்விரு நாடுகளுக்கும் இடையே வெகு சிக்கலான பிரச்சனை நதி நீர்ப் பங்கீடு தான். எல்லை தாண்டி இருநாடுகளிலும் சல சலக்கும் 54 நதிகள் உள்ளன. இருப்பினும் இந்தியா அமைத்திருக்கும் 'பராக்கா' தடுப்பணையும், டீஸ்டா நதிப் பங்கீடுமே தீர்க்கப்பட முடியாத பிரச்சனையாக உள்ளன. ஆனால் எல்லை தாண்டிய ஊடுருவல், கடத்தல், வாணிபம் ஆகிய பிரச்சனை களில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. 2013 ஜனவரியில் அண்டை நாட்டால் தேடப்படும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அந்நாட்டிடம் ஒப்படைக்க வகை செய்யும் ஒப்பந்தத்தில் இருநாடுகளும் கையொப்பமிட்டு இறுதி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும்.

c. இந்தியாவின் மிகச் சிறந்த நட்புறவு நாடு பூடான் ஆகும். 2006-ல் இந்தியாவின் உதவியுடன் துவங்கப்பட்ட இரு மின் உற்பத்தித் திட்டங்கள்

இவ்விரு நாடுகளுக்கிடையேயான நீர் மின் திட்டங்களில் கூட்டு முயற்சியை வளர்க்கும் ஊக்கியாக அமைந்தது. 2007ல் செய்யப்பட்ட இந்திய - பூடான் நட்புறவு ஒப்பந்தம் இருநாடுகளுக்கிடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்த உதவியது. வர்த்தகத்திலும், இந்தியாவும் பூடானும் ஒருங்கிணைந்து செயலாற்றுகின்றன. இந்நாடுகளுக்கிடையே தடையில்லா வர்த்தகம் அமலில் உள்ளது. 2013-ல் மூன்று உயர் மட்டத் தலைவர்களின் அரசு முறை விஜயங்கள் நிகழ்ந்தன. 2013 பிப்ரவரியில் பூடான் பிரதமர் ஜிக்மே தின்லே நல்லுணர்வுப் பயணமாக இந்தியா வந்தார்.

## தேர்தலில் தோல்வி

2014 ஏப்ரல் மே மாதம் நடைபெற்ற 16வது மக்களவைத் தேர்தலில் பாஜக 282 இடங்களைப் பெற்று தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. காங்கிரஸ் வெறும் 44 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. காங்கிரஸ் கூட்டணி படுதோல்வியடைந்தது.

இந்நிலையில் பிரதமர் மன்மோகன்சிங்கின் தலைமையிலான கடைசி அமைச்சரவைக் கூட்டம் டில்லியில் 2014 மே, 17ல் நடைபெற்றது. அதில் 15வது மக்களவையை உடனடியாகக் கலைக்கும்படி குடியரசுத்தலைவருக்கு பரிந்துரை செய்ய முடிவு செய்யப்பட்டது. இதற்கான கடிதம் குடியரசுத் தலைவரிடம் கொடுக்கப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி அரசியலமைப்புச் சட்டத்தின் 85 (2) பிரிவின்படி குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி 15வது மக்களவையை உடனடியாகக் கலைக்க மே 18ல் உத்தரவிட்டார்.

## மதிப்பீடு

நேருவுக்குப் பிறகு தொடர்ச்சியாக இரண்டு முறை முழு ஆட்சிக் காலத்திலும் பிரதமர் பதவி வகித்தவர் என்ற பெருமைக்குரிய மன்மோகன்சிங் கடந்த 10 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க சில சாதனைகள் அதற்கு இணையாக பல சருக்கல்களுடன் விடைபெற்றார். 2004-ல் காங்கிரஸ் தலைமையில் கூட்டணி ஆட்சி அமைந்த போது மன்மோகனுக்கு அதிர்ஷ்டம் அடித்தது. தொடக்கத்தில் சற்று தடுமாறினாலும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியை ஐந்து ஆண்டுகள் வழி நடத்திச் சென்றார். அதற்குப் பலனாக 2009-ல் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக பிரதமர் பதவி அவரைத் தேடி வந்தது.

கூட்டணிக் கட்சிகளின் நெருக்கடி கட்சித் தலைமையின் கெடுபிடி, போன்ற காரணங்களால் செயல்படாத பிரதமர் என எதிர்க்கட்சிகளின் மோசமான விமர்சனத்திற்கு உள்ளானாலும், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச்சட்டம், இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம், ஒட்டு மொத்த

உற்பத்திக் குறியீட்டில் வரலாறு காணாத அளவுக்கு 8.5 சதவீத வளர்ச்சி போன்றவை இவரது சாதனைகளாகப் பதிவாகி உள்ளன.

பதட்டமான காலகட்டத்திலும் பாகிஸ்தானுடன் இணக்கமான நல்லுறவைப் பராமரிக்க இவரது தனிப்பட்ட முயற்சிகள் பெரிய அளவில் உதவின என்பதில் சந்தேகம் இல்லை. அதே சமயம் நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டு ஊழல், 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் ஊழல் போன்ற குற்றச்சாட்டுகள் இவரது ஆட்சிக்கு ஏற்பட்ட களங்கங்கள் ஆகும்.

மன்மோகன்சிங் 1987-ல் பத்மவிபூஷன் விருது, 1995-ல் இந்திய அறிவியல் மாநாட்டில் நேரு நூற்றாண்டு விழா விருது, 1993, 1994ல் சிறந்த நிதியமைச்சருக்கான ஆசிய விருது, 1993ல் ஐரோப்பிய விருது உட்பட ஏராளமான விருதுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டுள்ளார்.

எத்தனையோ வெற்றிகளையும் வீழ்ச்சிகளையும் சந்தித்திருந்தாலும் எளிமையான பின்னணியைச் சேர்ந்த ஒருவர் இந்திய ஜனநாயகத்தில் பெரிய அளவில் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டி பலருக்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர் என்ற பெருமை மன்மோகன்சிங்குக்கு என்றும் நிலைத்திருக்கும்.

# 1.7 நரேந்திர மோடி
## (NARENDRA MODI, 2014-)

ஜனநாயகம் என்ற வார்த்தைக்கு தற்போது பதில் கிடைத்துள்ளது. ஜனநாயகத்தில் அனைத்து மக்களும் சமம். மக்களே ஆட்சியாளர்களைத் தேர்வு செய்வர். இதன்படி சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்த நரேந்திர மோடி தனது கடின உழைப்பு, அர்ப்பணிப்பு உணர்வு, துணிச்சலான முடிவு, நேர்மறை எண்ணம் ஆகியவற்றால் நாட்டின் 15-வது பிரதமராக 2014 மே 26-ல் பதவி ஏற்றார்.

### வாழ்க்கைக்குறிப்பு

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் மேஹ்சனா மாவட்டத்தில் வத் நகரில் 1950 செப். 17-ல் உயர்தட்டு வகுப்பைச் சார்ந்த வைசியா பிரிவின் உட்பிரிவான 'மோத்கான்சி' என்ற குஜராத்தில் மட்டுமே காணப்படும் பிரிவினைச் சேர்ந்த ஒரு நடுத்தரக் குடும்பத்தில் நரேந்திர மோடி பிறந்தார். மோடி என்றால் இந்தியில் முத்து என்று பொருள். இவரது பெற்றோர் தாமோதர் தாஸ் முல்சந்த் மோடி, ஹீராபென் ஆவர். இந்த தம்பதியின் 6 குழந்தைகளில் 3வதாகப் பிறந்தவர் தான் மோடி. மோடி பள்ளியில் படிக்கும் போதே 'அகில பாரதி வித்யார்தி பரிஷத்' அமைப்பில் சேர்ந்து ஊழல் எதிர்ப்பு போராட்டங்கள், அரசியல் தொடர்பான கூட்டங்களில் அதிகமாகப் பங்கேற்கத் தொடங்கினார். இளம் வயதில் சகோதரருடன் சேர்ந்து டீ கடை நடத்தினார். ரயில் நிலையங்களில் 'டீ' விற்றார்.

பள்ளிப் படிப்பை முடித்த பின் ராஜ்கோட் ராமகிருஷ்ணா மிஷன் மற்றும் மேற்கு வங்கத்தின் பேலூர் மடம் ஆகியவற்றுக்குச் சென்றார். பின்பு 2 ஆண்டுகள் இமயமலையில் சாதுக்களிடம் இந்துத்துவா பற்றிக் கற்றார். யோகாவும் கற்றுள்ளார். 15 வயதில் 1965 இந்தியா - பாக் போரின் போது ராணுவ வீரர்களுக்கு ரயில் நிலையத்தில் உதவினார். அதே போல் 17-ம் வயதில் குஜராத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது மீட்புப் பணிகளில் ஈடுபட்டார். மோடி தனது 18வது வயதில் ஜசோதாபென் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

நரேந்திர மோடி குஜராத் பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியலில் முதுகலைப்பட்டம் பெற்றார். அமெரிக்காவில் பப்ளிக் ரிலேஷன்ஸ் அண்டு இமேஜ் மேனேஜ்மென்ட் என்ற 3 மாதப்படிப்பை முடித்துள்ளார். மற்ற அரசியல்வாதிகளிடமிருந்து இவர் வித்தியாசமாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்

## நரேந்திர மோடியின் அரசியல் வெற்றி

1970-ல் ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் உறுப்பினராக சேர்ந்த மோடி அந்த அமைப்பின் முழுநேர பிரச்சாரகராக இணைந்தார். 1985-ல் பாரதீய ஜனதாக் கட்சியில் களம் இறக்கப்பட்டார். 1995-ல் ஐந்து மாநிலங்களுக்கான பா.ஜ. கட்சியின் தேசிய செயலாளராக நியமிக்கப்பட்டார். 1998-ல் குஜராத் மற்றும் இமாச்சலப் பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தலில் பா.ஜ.க. சார்பில் பிரச்சாரம் செய்ய கட்சித் தலைவர் அத்வானியால் நியமிக்கப்பட்டார். இப்பணியைத் திறம்படச் செய்தார். குஜராத் முதல்வராக இருந்த கேசுபாய் படேல் 2001-அக்டோபர் 6-ல் ராஜினாமா செய்தார். இதையடுத்து எம்.எல்.ஏ. வாகக் கூட இல்லாத மோடி அக். 7-ல் முதல்வராகப் பதவியேற்றார். பின்னர் இடைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

மோடி குஜராத்தின் முதல்வராகப் பதவியேற்ற போது, பூகம்பத்தின் பாதிப்பால் மாநிலம் பின் தங்கிய நிலையில் இருந்தது. பின் அடுத்த ஆண்டு நடந்த வன்முறைச் சம்பவமும் மாநில வளர்ச்சிக்கு தடைக் கல்லாக இருந்தது. இருப்பினும் தன்னம்பிக்கை, தொலைநோக்குப் பார்வை மூலம் மாநிலத்தின் வளர்ச்சியை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்பட்ட இவர் நாட்டிலேயே குஜராத்தை பல துறைகளிலும் முன் மாதிரி மாநிலமாக மாற்றிக் காட்டினார். 2002, 2007, 2012 என தொடர்ந்து வெற்றி பெற்று 3 முறை முதல்வராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். குஜராத் அரசியல் வரலாற்றில் நீண்டகாலம் (13 ஆண்டுகள்) முதல்வராக இருந்தவர் என்ற சாதனைக்குச் சொந்தக்காரர் மோடி ஆவார்.

2012 சட்டசபைத் தேர்தலில் வெற்றி விழாவில் பங்கேற்ற தொண்டர்கள் இவரை 'அடுத்த பிரதமர்' என்று கோஷமிட்டனர். அவர்களது நம்பிக்கையின் படி 2013 செப். 13-ம் தேதி கோவாவில் நடைபெற்ற கூட்டத்தில் பாஜக பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். அன்றிலிருந்து தனது பணியைத் தொடங்கினார். இடைவிடாத பிரச்சாரம் மூலம் 10 கோடி மக்களை நேரில் சந்தித்தார். 25 மாநிலங்களில் 3 லட்சம் கி.மீ. பயணம் செய்து 437 பெரிய பிரச்சாரக் கூட்டங்களில் பேசினார். 3-D ஹோலோ கிராபிக்ஸ் மூலமும் பேசினார்.

சாதாரணமாக இருந்த 2014 அரசியல்களம் மோடி அலையாக மாறியது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை 'நமோ' கோஷம் ஒலித்தது. 2014, மே 16-ல்

நடந்த ஓட்டு எண்ணிக்கையில் 282 தொகுதிகளில் வெற்றி பெற்று பாஜக தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்தது. நாட்டு மக்களின் நம்பிக்கை யுடன் நரேந்திர மோடி மே 26-ல் இந்தியப் பிரதமரானார்.

சுதந்திரத்திற்குப் பின் பிறந்த ஒருவர் பிரதமராவது இதுவே முதல் முறை. இதற்கு முன் லோக்சபாவிலோ ராஜ்யசபாவிலோ எம்.பி. ஆக இல்லாமல் முதன் முறையே பிரதமராக பாராளுமன்றத்துக்குச் செல்லும் முதல் நபர் மோடி. கூட்டணிக் கட்சிகள் தயவின்றி பா.ஜ.க தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்பது இதுவே முதல் முறை ஆகும். 30 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் தனி ஒரு கட்சி பெரும்பான்மை பெற்று வலுவுள்ள அரசாக விளங்குகிறது.

## நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்றல் 2014, மே 26

16-வது லோக்சபாவுக்கான தேர்தல் 2014 ஏப்ரல், மே மாதங்களில் 9 கட்டமாக நடைபெற்றது. ஓட்டு எண்ணிக்கை மே 16-ல் நடைபெற்றது. 543 தொகுதிகளில் பாரதீய ஜனதா கட்சியின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 335 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. பாஜக மட்டும் தனியாக 282 இடங்களில் வென்று தனிப்பெரும்பான்மை பெற்றது. வெற்றி பெற்ற 543 எம்.பிக்களின் பெயர் பட்டியலை தலைமை தேர்தல் ஆணையர் மே 18-ல் குடியரசுத் தலைவரிடம் வழங்கினார்.

மே 20-ம் தேதி நரேந்திர மோடி பாஜக பாராளுமன்றக் கட்சியின் தலைவராகவும், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்று மாலை குடியரசுத்தலைவரைச் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார். அதன் தொடர்ச்சியாக ஆட்சியமைக்கும் படி நரேந்திர மோடிக்கு குடியரசுத்தலைவர் உத்தரவிட்டார்.

மே 26 மாலை 6 மணி அளவில் குடியரசுத்தலைவர் மாளிகையில் உள்ள அரங்கத்தில் பதவி ஏற்புவிழா நடைபெற்றது. நரேந்திர மோடிக்கு 15-வது பிரதமராக பதவிப் பிரமாணமும், ரகசியக்காப்பு பிரமாணமும் செய்து வைத்தார் குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜி. 'சிறிய அரசு நிறைந்த நிர்வாகம்' என்ற கோஷத்துடன் பதவி ஏற்றார் நரேந்திர மோடி.

அவருடன் அமைச்சர்கள் 45 பேரும் பதவியேற்றனர். இவர்களில் 23 பேர் கேபினட் அமைச்சர்கள். 10 பேர் தனிப்பொறுப்புடன் கூடிய இணை அமைச்சர்கள். 12 பேர் இணை அமைச்சர்கள். தமிழகத்தைச்சேர்ந்த பொன் ராதா கிருஷ்ணனுக்கு இணை அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் 7 பேர் பெண்கள். ராஜ்நாத்சிங் உள்துறை அமைச்சராகவும், சுஷ்மா சுவராஜ் வெளிஉறவு அமைச்சராகவும் பதவியேற்றனர். இந்திய வெளிஉறவுத் துறையின் முதல் பெண் அமைச்சர் என்ற பெருமை இவருக்கு கிடைத்துள்ளது.

மோடியின் பதவியேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்கவருமாறு சார்க் நாடுகளின் தலைவர்களை இந்திய அரசு கேட்டுக் கொண்டு அழைப்பிதழ் அனுப்பியது. அதனை ஏற்றுக் கொண்ட பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப், இலங்கை அதிபர் ராஜபக்ஷே, ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமித் ஹர்சாய், பூடான் பிரதமர் துசரிங் டோப்கே,நேபாள பிரதமர் சுசில் கொய்ராலா, மாலத்தீவு அதிபர் அப்துல்லா கயீம், வங்கதேச பாராளுமன்ற சபாநாயகர் ஷரில் சௌத்ரி ஆகியோர் பங்கேற்றனர். புத்த மதத்தலைவர் தலாய் லாமாவும் பங்கேற்றார்.

இந்தியப் பிரதமர் ஒருவர் பதவி ஏற்பு விழாவில் சார்க் நாடுகளின் தலைவர்கள பங்கேற்பது இதுவே முதல் முறையாகும். இதனால் அண்டை நாடுகளுடனான உறவுகள் மேலும் பலப்பட வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாக மத்திய அரசு தரப்பில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இது நரேந்திர மோடியின் ராஜதந்திர நடவடிக்கைகளின் தொடக்கமாகவும் கருதப்படுகிறது.

## பிரதமர் மோடியின் நிர்வாக நடவடிக்கைகள்

### a) கருப்பு பணத்தை மீட்க புலனாய்வுக் குழு

2004, மே 27-ல் மோடியின் தலைமையில் முதல் முறையாக அமைச்சரவை கூடியது. இந்தக் கூட்டத்தில் சுவிட்சர்லாந்து உட்பட பல வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் டெபாசிட் செய்துள்ள கருப்புப் பணத்தை மீட்டு வரவும் அது தொடர்பான விவகாரங்களை கண்காணிக்கவும் உச்சநீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதி எம்.பி.ஷா தலைமையில் சிறப்பு புலனாய்வுக்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் ரிசர்வ் வங்கியின் துணை கவர்னர், மத்திய நேர்முக வரிகள் வாரியத் தலைவர், வருவாய்த்துறை செயலர், சி.பி.ஐ. மற்றும் ஐ.பி. அமைப்புகளின் இயக்குனர்கள் உறுப்பினர்களாக இடம் பெறுவர். உச்சநீதி மன்ற முன்னாள் நீதிபதி அர்ஜித் பஜாயத் துணைத் தலைவராகச் செயல்படுவார்.

### b) மோடியின் 10 அம்சத்திட்டம்

மத்திய அமைச்சரவையின் இரண்டாவது கூட்டம் 2014, மே 29-ல் மோடி தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் குடிதண்ணீர், மின்சாரம், கல்வி போன்ற மக்களின் அத்யாவசியத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்பது உட்பட 10 அம்சத்திட்டம் ஒன்றை பிறப்பித்தார் மோடி. அதன் விபரம் வருமாறு.

1. பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறாக உள்ள தடைகளை அகற்ற வேண்டும்.

2. மக்களின் முக்கியத் தேவைகளைத் தீர்க்க அதிக முன்னுரிமை அளிக்க வேண்டும்.

3. உள் கட்டமைப்புத் துறைகளில் சீர்திருத்தங்களை அமல்படுத்த வேண்டும்.

4. நல்ல திறமையான நிர்வாகத்தை அளிக்க வேண்டும். மக்களுக்கு நன்மை தரும் திட்டங்களை அமல்படுத்த வேண்டும்.

5. மக்களின் திட்டங்களையும், கொள்கைகளையும் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் நிறைவேற்ற வேண்டும்.

6. கொள்கைகளில் உறுதியாக இருப்பதோடு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளையும் காப்பாற்ற வேண்டும்.

7. மத்திய அமைச்சகங்களுக்கிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்த வேண்டும். கேபினட் அந்தஸ்துடைய அமைச்சர்கள் தங்கள் கீழ் பணிபுரியும் இணை அமைச்சர்களை அரவணைத்து ஒரு குழு போல் செயல்பட வேண்டும்.

8. அதிகாரிகள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

9. அரசின் ஏல முறைகள் அனைத்தும் வெளிப்படையாக நடைபெற வேண்டும். அதற்கேற்ற முறையில் இ-டெண்டர் முறையை அனைத்து துறைகளிலும் அமல்படுத்த வேண்டும்.

10. அதிகாரிகள் திறமையாகச் செயல்பட அவர்களுக்கு அதிகாரமும் சுதந்திரமும் அளிக்கப்பட வேண்டும்.

மொத்தத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மக்கள் நலன் சார்ந்த அரசாகச் செயல்படும் என்றார் மோடி.

### c) நூறுநாள் செயல்திட்டம்

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர்களுக்கு பிரதமர் மோடி சில அறிவுரைகளை வழங்கினார். 100 நாள் செயல்திட்டம் என்ற யோசனையை முன் வைத்தார். ஒவ்வொரு அமைச்சரும் தன் அமைச்சகத்தின் கீழ் உள்ள துறைகளில் அடுத்து வரும் 100 நாட்களில் என்னென்ன திட்டங்களைச் செயல்படுத்தலாம் என்பதையும், தேவையான திட்டங்கள் பற்றியும் தகவல்களை தொகுக்க வேண்டும். அந்த திட்டங்களை 100 நாட்களுக்குள் நடைமுறைப்படுத்த முழு அளவில் தயாராக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் மோடி.

### d) அமைச்சரவைக் குழுக்கள் தலைப்பு

மன்மோகன்சிங் பதவிக் காலத்தில் அதிகாரமிக்க அமைச்சர்கள் அடங்கிய 9 குழுக்களும், 21 அமைச்சர்கள் குழுக்களும் செயல்பட்டு வந்தன. பல முக்கியப் பிரச்சனைகளில் மத்திய அரசு முடிவெடுக்கத் தயங்கும் போது அவை அனைத்தும் இந்த இரண்டு வகையான குழுக்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு அவை எடுக்கும் முடிவின் அடிப்படையில் இறுதி நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் 2004, மே 31-ல் மோடி இந்த இரண்டு வகையான அனைத்துக் குழுக்களையும் கலைத்து உத்தரவிட்டார். இதன் மூலம் முடிவு எடுக்கும் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படும். காலதாமதம் தவிர்க்கப் பட்டு அரசு வேகமாகச் செயல்பட முடியும். அரசு பணிகளின் வேகமும் அதிகரிக்கும். அத்துடன் அரசின் செயல்பாடுகளில் பொறுப்புடைமையும் கூடும் என்று அரசு தெரிவித்தது.

## 16-வது லோக்சபாவின் முதல் கூட்டத்தொடர்

16-வது லோக்சபாவின் முதல் கூட்டத்தொடர் 2014, ஜுன் 4-ல் தொடங்கியது. லோக்சபாவின் தற்காலிக சபாநாயகராக கமல்நாத்திற்கு குடியரசுத்தலைவர் பதவிப் பிரமாணம் செய்து வைத்ததுடன் லோக்சபா துவங்கியது. மத்திய அமைச்சர் கோபிநாத் முண்டே மறைவுக்கு இரங்கல் தெரிவித்ததும் சபை ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த 16-வது லோக்சபாவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 543 எம்.பிக்களில் 315 பேர் முதல் முறையாக தேர்வாகி உள்ளனர். 86 வயதான அத்வானி வயதில் மூத்த எம்.பி, 26 வயதுடைய பாஜகவைச் சார்ந்த ஹீனா தாவிட் இளம் எம்பி என்ற பெருமையைப் பெற்றுள்ளனர்.

கூட்டத்தொடரின் 2-ம் நாளில் பிரதமர் மோடி முதல் நபராக எம்.பி. ஆக பதவியேற்றார். அதைத் தொடர்ந்து பெரும்பாலான எம்.பிக்கள் பதவி ஏற்றனர். அவர்களுக்கு தற்காலிக சபா நாயகர் கமல்நாத் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

## 16-வது லோக்சபாவின் சபாநாயகர் தேர்வு

16-வது லோக்சபாவின் முதல் கூட்டத்தொடரின் மூன்றாவது நாளான 2014 ஜூன் 6-ல் சபாநாயகர் தேர்தல் நடைபெற்றது. மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த வரும், இந்தூர் லோக்சபா தொகுதியிலிருந்து எட்டுமுறை எம்.பியாகத் தேர்வு செய்யப்பட்டவருமான 71 வயதுடைய சுமித்ரா மகாஜனை சபாநாயகராகத் தேர்வு செய்வதற்கான தீர்மானத்தை பிரதமர் நரேந்திர மோடி கொண்டு வந்தார். அந்த தீர்மானம் குரல் ஓட்டு மூலம் நிறைவேற்றப்பட்டது.

லோக்சபா சபா நாயகராக ஏக மனதாக தேர்வு செய்யப்பட்ட சுமித்ரா மகாஜன் தனது 39-வது வயதில் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார். 1999-2004ல் வாஜ்பாய் அரசில் மனிதவள மேம்பாட்டு இணை அமைச்சராகப் பணியாற்றினார். வழக்கறிஞராக இருந்து அரசியலுக்கு வந்த சுமித்ரா மகாஜன் எளிமையானவர், நேர்மையானவர் என்று பெயரெடுத்தவர்.

## எம்.பிக்களுக்கு பிரதமர் மோடியின் ஆலோசனை

லோக்சபாவுக்கு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்பிக்கள் பங்கேற்ற பா.ஜ.க பாராளுமன்ற கட்சிக் கூட்டத்தில் நரேந்திர மோடி எம்.பிக்களுக்கு,

கண்டிப்புடன் கூடிய ஆலோசனை வழங்கினார். பெரும்பான்மை பலம் பெற்றுள்ள ஆளும் கட்சி என்ற மிதப்பில் செயல்படக்கூடாது. பிற கட்சித் தலைவர்களை கண்ணியத்துடன் விமர்சிக்க வேண்டும். லோக்சபா நடக்கும் நாட்களில் தினமும் தவறாமல் வரவேண்டும். பதிவேட்டில் கையெழுத்துப் போட்டு விட்டு சென்றுவிடக்கூடாது. சபையின் கவுரவத்தைப் பேணிக் காக்கும் முறையில் பொறுப்போடு செயல்படவேண்டும். தங்கள் அறிவுத் திறமையை வளர்த்து பாராளுமன்ற விவாதங்களில் பங்கேற்கும் போது அதற்கேற்ற வகையில் விவரங்களுடன் தயார் நிலையில் வரவேண்டும். தொகுதி மக்களை அடிக்கடி சந்தித்து அவர்கள் உடனான தொடர்பை அதிகரித்துக் கொள்ள வேண்டும். நான் உட்பட எந்த பாஜக தலைவர் காலில் விழுந்து வணங்கக் கூடாது. இவ்வாறு அறிவுரையும், ஆலோசனையும் கூறினார் மோடி.

## பாராளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் உரை 2014, ஜுன் 9

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மத்தியில் பதவி ஏற்ற பிறகு பாராளுமன்றத்தின் இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி 2014 ஜுன் 9-ல் உரை நிகழ்த்தினார். அதில் மோடி அரசு செய்யப்போகும் திட்டங்களை விரிவாக பட்டியலிட்டார். 'குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச நிர்வாகம்' என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் புதிய அரசு செயல்படும் என்றார். இந்த புதிய அரசு ஏழைகளுக்காக அர்ப்பணம் செய்யப்படுகிறது. ஏழ்மையை ஒழிப்பதே இந்த அரசின் குறிக்கோள் என்றார். அவர் அறிவித்த திட்டங்கள் வருமாறு :

a) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த அதிக முன்னுரிமை வழங்கப்படும். பதுக்கல்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். பொது விநியோகம் சீரமைக்கப்படும்.

b) நாடு முழுவதிலும் சர்வதேச தரத்திலான 100 புதிய நகரங்கள் எல்லா வசதிகளுடனும் அமைக்கப்படும்.

c) அரசு ஆவணங்கள் அனைத்தும் டிஜிட்டல் மயமாக்கப்படும். விரைவில் டிஜிட்டல் இந்தியா உருவாக்கப்படும்.

d) மழை நீர் சேமிப்பு, சாத்தியம் உள்ள இடங்களில் நதிகள் இணைப்பு, பிரதமர் விவசாய நீர் பாசனத்திட்டம், தேசிய சுகாதார காப்பீட்டுத் திட்டம், ஆன்-லைன் படிப்பு திட்டம், பெண்கள் பாதுகாப்பு மற்றும் பெண்கள் கல்வி போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

# 1.8 இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் சிறப்பம்சங்கள்

## (Foreign Policy of India)

வெளிநாட்டுக் கொள்கை என்பது பிற நாடுகளுடன் உறவு கொண்டு தேச நலன்களை நிறைவேற்றிக் கொள்ளும் மார்க்கமாகும். நாட்டுப் பாதுகாப்பும், தேச நலனும் வெளி உறவுக் கொள்கையின் உயிர் நாடியாகும். தற்கால உலகில் தனி மனிதரோ, சமுதாயமோ அல்லது ஒரு நாடோ பிறரைச் சார்ந்தே வாழ வேண்டியுள்ளது. எனவே தான் ஒவ்வொரு நாடும் பிறநாடுகளுடன் அரசியல், கலாச்சார, ராஜதந்திர தொடர்புகள் வைத்துக் கொள்கின்றன. இந்த தொடர்புகளைத் தீர்மானிப்பதே வெளிநாட்டுக் கொள்கையாகும்.

இந்தியா சுதந்திரமடைந்தபோது எதிர்நோக்கிய பல பிரச்சனைகளில் 'இந்தியாவுக்கு ஒரு நல்ல வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவதும்' ஒன்றாக இருந்தது. அப்போது பிரதமராக இருந்த நேரு பன்னாட்டளவில் நிலவி அரசியல் நிலை, இந்தியாவில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூக நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவுக்கென்று சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கினார். அவர் வகுத்துத் தந்த வெளிநாட்டுக் கொள்கையில் இலட்சியமும் யதார்த்தமும் கலந்திருந்தது. அவர் அமைத்துக் கொடுத்த அடித்தளத்தின் மீதே இந்திய வெளிநாட்டுக் கொள்கை என்ற மாளிகை எழுப்பப்பட்டது. இவ்வாறு இந்தியாவுக்கு சிறந்த வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கிய நேரு 'வெளி நாட்டுக் கொள்கையை உருவாக்கிய சிற்பி' (Architect par excellence of our foriegn policy) என்று புகழப்படுகிறார்.

### இந்திய வெளிஉறவுக் கொள்கையின் சிறப்பியல்புகள் :

### 1) கூட்டுச்சேராக் கொள்கை :

கூட்டுச்சேரா கொள்கை இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் முதுகெலும்பைப் போன்றது. நேரு வடிவமைத்துக் கொடுத்த இந்த கூட்டுச்சேரா கொள்கை திடீரென்று உருவாக்கப்பட்டதல்ல. இந்தியாவின் நீண்டகாலப் பண்பாட்டிலிருந்தும், சுதந்திரப் போராட்ட கால நிகழ்ச்சிகளிலிருந்தும், சமீப கால வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்தும் உருவாக்கப்பட்டது ஆகும். இந்தியா சுதந்திரமடைந்த போது உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிந்து காணப்பட்டது. அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ நாடுகளும், சோவியத்

யூனியனின் தலைமையிலான கம்யூனிச நாடுகளும் தங்களுக்குள் போட்டியையும் வெறுப்பையும் வளர்த்துக் கொண்டிருந்தன.

எனவே ஜவஹர்லால் நேரு அப்போது இந்தியாவில் இருந்த பாதுகாப்புத்தேவை, பொருளாதாரப் பிரச்சனை போன்றவற்றை மனதில் கொண்டு உருவாக்கப்பட்ட கொள்கையே கூட்டுச்சேரா கொள்கை ஆகும். கூட்டுச்சேரா கொள்கை என்பது எந்த இராணுவ அணியுடனும் சேராமல் இருப்பதாகும். உலகத்தில் பதட்ட நிலையைத்தணிப்பது, பொருளாதார சமூக வளர்ச்சிக்கு தங்கள் சக்தியை செலவு செய்வது, சுதந்திரத்தையும் தேசியத்தன்மையையும் பாதுகாப்பது, படைப் பெருக்கத்தில் ஈடுபடாமலும், வெளிநாட்டுப் போர்களில் தலையிடாமலும் இருத்தல் ஆகியவையே கூட்டுச் சேராக்கொள்கையை இந்தியா ஏற்றுக் கொண்டதற்கு முக்கிய காரணங்களாகும்.

## 2) உலக அமைதியைப் பேணுதல் :

இந்தியா சுதந்திரமடைந்த போது உள்நாட்டு நிலையை வலுப்படுத்துவதையும், பொருளாதார மேம்பாட்டையுமே தனது தலையாய நோக்கமாகக் கொண்டிருந்தது. வெளிநாட்டுறவில் அமைதி நீடித்தால் மட்டுமே உள்நாட்டு அமைதியைப் பேண முடியும். எனவே உலக அமைதியைப் பேணுதல் இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் சிறப்பு அம்சமாகும். இந்திய அரசியலமைப்பின் நான்காவது பிரிவில் 51-வது விதி பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பை இந்தியா பேணவேண்டும் என்று தெரிவிக்கிறது. போர்களால் எந்த சிக்கல் களையும் தீர்க்க முடியாது. அது புதிய சிக்கல்களையே உருவாக்கும் என்று அறிந்திருந்தார் நேரு. மேலும் அணு ஆயுதங்கள் மனித இனத்தையே அழித்துவிடும். எனவே உலக அமைதியைப் பேணுவதே இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய அம்சமாகத் திகழ்கிறது.

## 3) ஏகாதிபத்திய, காலனி ஆதிக்க எதிர்ப்பு :

ஏகாதிபத்தியத்தையும், காலனி ஆதிக்கத்தையும் தொடர்ந்து எதிர்ப்பது இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையின் அடுத்த சிறப்பு அம்சமாகும். இதனால் தான் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் ஏகாதிபத்தியத்திற்கும், காலனி ஆதிக்கத்திற்கும் எதிராக நடைபெற்ற எல்லா போராட்டங்களுக்கும் தனது ஆதரவை தொடர்ந்து அளித்து வந்தது.

## 4) இனப்பாகுபாட்டிற்கு எதிர்ப்பு :

இனம் மற்றும் கலாச்சார அடிப்படையிலான எல்லா வகையான இனப்பாகுபாட்டையும் இந்தியா தொடர்ந்து எதிர்த்து வருகிறது. தெ... ஆப்பிரிக்காவும், ரொடிஷியாவும் பின்பற்றி வந்த இனப்பா...

பாடுகளுக்கெதிராக குரல் கொடுத்த முன்னனி நாடு இந்தியா ஆகும். 1952-ல் ஐ.நா. சபையில் பிற ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுடன் சேர்ந்து இனப்பாகுபாட்டை எதிர்த்துகுரல் கொடுத்தது இந்தியா. அது ஐ.நா சாசனத்திற்கு எதிரானது என்றும், மனித உரிமை அறிக்கைக்கு எதிரானது என்றும், உலக அமைதிக்கு கேடு விளைவிப்பது என்றும் இந்தியா தெரிவித்தது. தென் ஆப்பிரிக்கா, ஜிம்பாவே, நமிபியா ஆகிய நாடுகளில் கருப்பர்களுக்கெதிரான சிறுபான்மை வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்தது இந்தியா. இது நமது வெளிநாட்டுக் கொள்கையில் சிறப்பியல்பு ஆகும்.

### 5) பஞ்சசீலம் :

பஞ்சசீலக் கொள்கை இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் மற்றொரு பரிமாணம் ஆகும். உலக நாடுகள் சமாதான சக வாழ்வு வாழ்வதற்கான பட்டயமே பஞ்சசீலக் கொள்கையாகும். பஞ்ச சீலம் என்றால் 'ஐந்து நடத்தை நெறி' என்று பொருளாகும். 1954-மே 29-ல் இந்தியாவும் சீனாவும் சேர்ந்து பஞ்ச சீலக் கொள்கையை ஏற்றுக் கொண்டு அறிவிப்பு செய்தன. அவை வருமாறு:1) பிற நாடுகளின் இறைமைக்கும், தேச ஒற்றுமைக்கும் பரஸ்பர மதிப்பளித்தல்,2) ஆக்கிரமிப்பு செய்யாதிருத்தல், 3) பிற நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடாமை, 4) சமத்துவம் மற்றும் பரஸ்பர நம்பிக்கையைக் காத்தல் 5) சமாதான சகவாழ்வு ஆகியவையே பஞ்ச சீலக் கொள்கையாகும்.

பஞ்ச சீலக் கொள்கை இந்திய வெளி உறவுக்கொள்கையின் இயல்பான விரிவாக்கம் ஆகும். உலக நாடுகளிடையே சமாதான சகவாழ்வு நிலவவேண்டும் என்ற நேருவின் பஞ்சசீலக் கொள்கை சர்வதேச அங்கிகாரம் பெற்றது.

### 6) ஆசிய நாடுகளுடன் நெருங்கிய உறவு :

அனைத்து உலக நாடுகளுடன் இந்தியா நெருங்கிய உறவு கொண்டாலும், ஆசிய நாடுகளும் மிகவும் நட்புடன் இருக்க விரும்புகிறது. இதனால் தான் பல ஆசிய நாடுகளில் நடக்கும் மாநாடுகளில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது. தனியாக ஒரு ஆசிய நாடுகளின் அமைப்பை ஏற்படுத்துவது இந்தியாவின் நோக்கமல்ல. ஆசிய நாடுகளுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதே நோக்கமாகும். இதன் அடிப்படையில்தான் சார்க் அமைப்பில் இந்தியா ஒரு உறுப்பு நாடாக உள்ளது.

### 7) காமன்வெல்த் அமைப்புடன் உறவு :

காமல் வெல்த் அமைப்புடன் நல்ல உறவை வைத்துக் கொள்வது இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு அம்சமாகும். இந்தியா சுதந்திரமடைந்த பின்பும் காமன் வெல்த் அமைப்பில் தொடர்ந்து உறுப்பு

நாடாக இருந்து வருகிறது. இந்த அமைப்பில் தற்போது 54 நாடுகள் உள்ளன. இந்த நாடுகளுக்கிடையே சமூக, கலாச்சார, பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் சிறப்பு அம்சமாகும். காமன்வெல்த் நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தில் இந்தியா முக்கிய இடம் வகிக்கிறது.

### 8) ஐ.நா.சபைக்கு ஆதரவு :

1945, அக்டோபர் 24-ல் ஐ.நா. சபை தோன்றியபோது அதன் ஆரம்ப கால உறுப்பு நாடுகளில் இந்தியாவும் ஒன்று ஆகும். ஐ.நா சபையின் நோக்கங்களிலும், கொள்கைகளிலும் இந்தியா முழு நம்பிக்கை வைத்துள்ளது. உலகம் முழுவதிலும் அமைதியை ஏற்படுத்தும் ஐநாவின் முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவு அளித்து வருகிறது. அதன் எல்லா அமைப்புகளிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஐநா அமைதிப்படையில் இந்தியா பங்கெடுத்துள்ளது. இவ்வாறு ஐநா சபைக்கு தொடர்ச்சியான ஆதரவளித்து வருவது இந்திய வெளி உறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக உள்ளது.

### 9) படைக்கலக்குறைப்புக்கு ஆதரவு :

அணு ஆயுத மற்றும் மரபு வழி ஆயுதப்படைக் குறைப்பே இந்தியாவின் வெளி நாட்டுக் கொள்கையின் மற்றொரு அம்சமாகும். அமைதிப் பணிக்கு அணு சக்தியைப் பயன்படுத்துவதை இந்தியா ஆதரிக்கிறது. ஆனால் அழிவை ஏற்படுத்தும் அணு ஆயுதங்கள் மற்றும் போர்க்கருவிகள் செய்யப்படுவதை இந்தியா எதிர்த்து வருகிறது. ஆனாலும் பல காரணங்களால் அணு ஆயுதப் பரவல் தடைச்சட்டத்தில் இந்தியா கையெழுத்திட மறுத்து வருகிறது. உலக நாடுகள் அனைத்துமே தங்கள் வசம் இருக்கும் எல்லாவிதமான அணு ஆயுதங்களை ஒழித்து விட வேண்டுமென்பதே இந்தியாவின் கொள்கையாகும்.

### 10. புதிய பன்னாட்டு பொருளாதார ஒழுங்கிற்கு ஆதரவு : Support to NIEO.

நீதி, சமநிலை, பரஸ்பர ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியா புதிய பன்னாட்டு பொருளாதார ஒழுங்கிற்கு (New Jnternational Economic Order) ஆதரவளித்து வருகிறது. இதன் முக்கிய நோக்கம் அமைதியும், வளர்ச்சியுமே ஆகும். வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார சுதந்திரத்தை பேணிக்காப்பது இந்தியாவின் விருப்பம் ஆகும். எனவே தான் காட் (GATT-General Agreement on /Trade and Tariff ஒப்பந்தத்தில் இந்தியா பங்கெடுத்துள்ளது. மேலும் உலக பொருளாதார அமைப்பிலும் (WTO) உறுப்பினராகி உள்ளது. UNCTAD, G.T.T. G-

போன்ற அமைப்புகள் மூலம் இந்தியாவில் பொருளாதார நலன்களைப் பாதுகாத்து வருகிறது.

இவை தவிர, இந்திய இறையாண்மையைப் பாதுகாத்தல், மத்திய கிழக்கு பகுதியிலிருந்து எண்ணை வளத்தை தடங்கலில்லாமல் பெறுதல், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் நலன்களைப் பாதுகாத்தல், வெளி நாட்டு வாணிபத்தை பெருக்குதல், பொருளாதார வளர்ச்சிக்கான உதவிகளைப் பெறுதல், பாதுகாப்பு தன்மையை வலுப்படுத்துதல், பாதுகாப்பான கடல்வழி, வான் வழியை அமைத்துக் கொள்ளுதல், உலகம் முழுவதும் நடைபெறும் அதிகாரப் போட்டியில் எப்பொழுதும் நடுநிலையையே வகித்தல் ஆகியவை இந்தியா வெளிநாட்டுக் கொள்கையின் சிறப்பு அம்சங்களாக இருந்து வருகின்றன.

# 1.9 கல்வி

## (Education)

ஒரு நாட்டின் வளர்ச்சி அதன் கல்வி மேம்பாட்டின் அடிப்படையிலேயே அமைகிறது. இந்தியா சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து கல்வி முன்னேற்றம் அடைந்து வருகிறது. 1976-ம் ஆண்டு வரை கல்வியானது மாநிலங்களின் அதிகாரப் பட்டியலில் இருந்து வந்தது. ஆனால் அந்த ஆண்டு செய்யப்பட்ட அரசியலமைப்புத் திருத்தத்தின்படி கல்வி மத்திய, மாநிலங்களின் கூட்டு அதிகாரப்பட்டியலில் சேர்க்கப்பட்டது. கல்வியின் அமைப்பு மற்றும் அதன் நிர்வாகம் மாநிலங்களின் பொறுப்பு என்றாலும் கல்வியின் தரத்தை மேம்படுத்தவதில் மத்திய அரசுக்கு முழுப்பொறுப்பு உள்ளது. கல்வியைத் திட்டமிடுதலில் மாநிலங்களுக்குள்ள பொறுப்புகளை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகமும் கல்வித்துறையும் பங்கிட்டுக் கொள்கின்றன. இந்தியக் கல்விக் கொள்கை மற்றும் அதன் திட்டமிடுதலையும் உருவாக்குவதிலும் அதனை மேற்பார்வை செய்வதிலும் 1935-ம் வருடம் அமைக்கப்பட்ட மத்திய கல்வி ஆலோசனை வாரியம் (Central Advisory Board of Education) முக்கிய பங்காற்றி வருகிறது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கு 20,381.64 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

**இந்தியாவில் கல்வி வளர்ச்சி வரலாறு :**

1947-ம் ஆண்டுக்குப் பின் சுதந்திர இந்தியாவின் வளர்ச்சிக்கான திட்டங்களில் கல்வி வளர்ச்சிக்கான முயற்சிகள் முக்கிய இடத்தை பெற்றுள்ளன. நம்நாட்டுப் பண்பாட்டிற்கேற்றவையும், நமது வளர்ச்சித் தேவைகளை நிறைவு செய்யக் கூடியவையுமான கல்வித் திட்டங்களை உருவாக்குவதில் நமது மைய அரசும், மாநில அரசுகளும் பெரு முயற்சியினை மேற்கொண்டு வருகின்றன. கல்வி பெறுவோர்களின் எண்ணிக்கை பெருக்கம், கல்வியின் தரத்தை உயர்த்துதல், கல்வி ஆராய்ச்சி, தொழில் நுட்பம், மருத்துவம் போன்ற கல்வியின் பல்வேறு துறைகளின் வளர்ச்சி, பெண்கல்வி, முதியோர் கல்வி வளர்ச்சி ஆகிய அனைத்துத் துறைகளிலும் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சுதந்திர இந்தியாவின் கல்வி வளர்ச்சிபற்றி ஆராய கடந்த காலத்தில் நிறுவப்பட்ட கல்விக் குழுக்களின் அறிக்கைகளைப் பற்றி ஓரளவு அறிந்திருப்பது இன்றியமையாததாகும்.

**1. டாக்டர் ராதாகிருஷ்ணன் குழு : Radhakrishnan Commission**

டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களது தலைமையில் பல்கலைக் கழக கல்வி அமைப்பினை ஆராய்வதற்கு பத்து உறுப்பினர்களைக் கொண்ட கல்விக்குழு ஒன்றை 1948 நவம்பர் 4-ம் தேதி மத்திய அரசு

அமைத்தது. இக்குழுவின் முக்கிய நோக்கம் பல்கலைக்கழக கல்வி பற்றிய அறிக்கை ஒன்று சமர்ப்பிக்க வேண்டும் என்பதேயாகும். அத்துடன் தற்காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் பொருந்தகூடிய வகையில் கல்வி வளர்ச்சிக்கான பரிந்துரைகள் செய்ய வேண்டும் என்பதும் இந்தக்குழு அமைக்கப்பட்டதின் நோக்கமாகும். மேலும் பல்கலைக் கழக கல்வியை மறுசீரமைத்தல், ஆசிரியர்களின் பிரச்சனைகள் பாடத்திட்டம், கற்பிக்கப் படும் மொழி, சமயக்கல்வி, ஒழுங்குப்பிரச்சனைகள், மாணவர்களின் உடல்நலம் மேலும் இவைகள் தொடர்பான பிரச்சனைகள் எல்லாம் அலசி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி ராதாகிருஷ்ணன் குழுவிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்தக்குழு நாடு முழுவதும் பயணம் செய்து உயர்கல்வி யாளர்கள், மாணவர்கள், கல்வி நிறுவனர்கள் போன்றோர்களைச் சந்தித்து இரண்டு தொகுதிகளாக அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தது. இந்த அறிக்கை 18 அத்தியாயங்களையும், 747 பக்கங்களையும் கொண்டது. இதன் முக்கிய பரிந்துரைகள் வருமாறு :

a) பல்கலைக்கழகங்கள் நமது நாட்டின் கலாச்சாரத்தையும், நாகரிகத்தையும் பாதுகாக்க வேண்டும்.

b) அரசியல், நிர்வாகம், கல்வி, தொழில், வாணிபம் ஆகிய துறைகளில் நல்ல தலைவர்களை உருவாக்க வேண்டும்.

c) கற்றறிவுமிக்க மாணவர்களை பல்கலைக்கழகங்கள் உருவாக்க வேண்டும்.

d) நமது கலாச்சார பாரம்பரியத்தை விடாமலும் அதே சமயம் நவீன முன்னேற்றத்தை நோக்கிக்கொண்டும் பல்கலைக்கழகப் பாடத்திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும்.

e) மாணவர்களிடத்தில் மறைந்துகிடக்கும் திறமைகளை வெளிக்கொணர வேண்டும்.

f) பல்கலைக்கழகங்கள் தாய்மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

g) சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயக உணர்வு ஆகியவற்றை கல்வியின் மூலம் பேணிக் காக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

h) கல்வி வளர்ச்சி அடைவதும், கல்வித்திட்டங்கள் வெற்றியடைவதும் ஆசிரியர்களின் கையில் இருப்பதால் ஆசிரியர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் அவர்களுக்கு சிறப்பான பயிற்சியளிக்கப்படவேண்டும்.

இதுபோன்ற பரிந்துரைகளை ராதாகிருஷ்ணன் குழு சமர்ப்பித்தது இவைதவிர பல்கலைக்கழக கல்விக்கு அடிப்படையாக அமையும் உயர்நிலைக் கல்வி பற்றியும் இக்குழு ஆராய்ந்து அதன் நிலையை உயர்த்த உதவும் சில கருத்துக்களையும் தெரிவித்தது.

## 2. லட்சுமணசாமி முதலியார் குழு : A.L. Mudhaliar Commission, 1953

1953-ம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் தலைமையில் உயர்நிலைக் கல்விக்கான குழு ஒன்று இந்திய அரசினால் அமைக்கப்பட்டது. இந்தக்குழு உறுப்பினர்கள் நாடுமுழுவதும் சுற்றுப்பயணம் செய்து உயர்நிலைக்கல்வி பற்றிய கருத்துக்களை நேரில் கேட்டறிந்து 250 பக்கங்கள் கொண்ட தங்கள் அறிக்கையை அரசிடம் 1953, ஆகஸ்ட் 29-ல் சமர்ப்பித்தது. முதலியார் குழுவின் முக்கிய பரிந்துரைகள் வருமாறு :

a) மாணவர்கள் சிறந்த குடிமக்களாகவும், செயல்திறன், தலைமை தாங்கும் ஆற்றல் உள்ளோராகவும், அறிவும் ஒழுக்கமும் உள்ளவர்களாக வளர அவர்களுக்கு பயிற்சியளிப்பது கல்வியின் முக்கிய நோக்கமாக அமைய வேண்டும்.

b) நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் தொடக்கக் கல்விக்குப் பின்பு மூன்று ஆண்டுகள் நடுநிலைக் கல்வியும் நான்கு ஆண்டுகள் உயர்நிலைக் கல்வியும் புதிய கல்வியமைப்பில் காணப்பட வேண்டும்.

c) தாய்மொழியோ அல்லது வட்டார மொழியோதான் உயர்நிலைக்கல்வியில் பயிற்று மொழியாக அமையவேண்டும்.

d) பாடத்திட்டத்தில் மொழி, சமூகப்பாடம், பொது அறிவியல், கணிதம், உடற்கல்வி ஆகியவை இடம்பெற வேண்டும்.

e) பாடப்புத்தகங்களின் தரம் உயர்த்தப்பட வேண்டும்.

f) வெறும் பொருளறிவை வளர்ப்பதுடன் மாணவர்களிடையே நல்ல மனப்பான்மைகள், சிறந்த வாழ்க்கை குறிக்கோள்கள், உழைக்கும் பழக்கம் ஆகியவற்றை வளர்ப்பதும் கல்வியின் நோக்கமாக அமையவேண்டும்.

g) மாணவரின் ஒழுக்கவளர்ச்சிக்கு கல்விமுறையின் ஒவ்வொரு செயலும் உதவ வேண்டும்.

h) சாரணர் இயக்கம், முதலுதவிப்பயிற்சி, செஞ்சிலுவை சங்க நடவடிக்கைகள் போன்ற பாடப்புறச்செயல்களுக்கு போதிய முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

i) மாணர்வகளின் உடல்நலம் நன்கு காக்கப்படுவதற்கு திட்டமிடப்பட வேண்டும்.

j) கல்வி முறையின் வெற்றி ஆசிரியரின் தரத்தைப் பொறுத்தே அமைவதால் ஆசிரியப் பயிற்சியினைச் சீராக்கி, ஆசிரியரின் நிலை உயர்த்தப்பட வேண்டும்.

## 3. டாக்டர் கோத்தாரி குழு : Dr. Kothari Commission, 1964

தேசியக்கல்வி அமைப்பு ஒன்றை உருவாக்கவும், கல்வியி… எல்லா நிலைகளும் அவற்றின் வளர்ச்சிக்கான கொள்கைகளை… உருவாக்கவும் இந்திய அரசுக்கு ஆலோசனை கூறும் வகையி… பல்கலைக்கழக மானியக்குழுவின் சேர்மன் டாக்டர் கோத்தா… தலைமையில் இந்திய அரசு 1964, ஜூலை 14-ல் ஒரு குழு அமைத்த… இக்குழு இரண்டாண்டு காலம் இந்தியக் கல்வியில் காணப்பட்… பிரச்சனைகளை ஆராய்ந்து தனது 1600 பக்க அறிக்கையை 1966, ஜூ… 29-ல் அரசிடம் சமர்ப்பித்தது. இக்குழுவின் அறிக்கையில் காணப்படு… முக்கியக் கருத்துக்கள் வருமாறு :

a) தொடக்கப்பள்ளி வகுப்புகளுக்கு முற்பட்ட கல்விக்கு (Pre Primary) முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இதற்காக மழலைய… பள்ளி (Nursery Schools) எல்லா மாநிலங்களிலும் தொடங்கப்ப… வேண்டும்.

b) 14வயது வரையுள்ள குழந்தைகளுக்கு கட்டாய இலவசக்கல்… வழங்கப்பட வேண்டும்.

c) உயர்நிலைக்கல்வியில் பயன்பெறக்கூடிய திறனுடை… மாணவர்களே சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். உயர்நிலை… கல்வியில் தொழிற்பயிற்சி கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்ப… வேண்டும்.

d) பள்ளிக்கல்வியின் தரம் உயர்த்தப்பட வேண்டும். பள்ளிக்கல்… சமுதாயத்துடன் தொடர்பு கொண்டு இயங்குதல் வேண்டு… திருத்தியமைக்கப்பட்ட கல்விமுறையை சிறந்த முறையில் செயல்படு… ஆசிரியர்களுக்கான 'கற்பித்தல் வழிகாட்டிகள்' தயாரிக்கப்ப… வழங்கப்பட வேண்டும். மேலும் ஆசிரியர்களுக்கு 'பணியிடைப்பயிற்… வழங்கப்பட வேண்டும்.

e) அறிவியல் பாடமும், கணிதப்பாடமும் கட்டாயமாக எல்… மாணவர்களுக்கும் கற்பிக்கப்பட வேண்டும். பாடப்பொருள் அறிவிய… முன்னேற்றத்துடன் இணைந்ததாக இருக்க வேண்டும்.

f) கைப்பணி, தொழில் தொடர்புடைய வேலைக… நூற்புவேலை, தோட்டவேலை, மரவேலை, தொழிற்பட்டறை வே… போன்றவைகளில் பயிற்சி அளித்து மாணவர்களுக்கு வே… அனுபவங்களை அளித்தல் வேண்டும்.

g) புதிய உடற்கல்வித் திட்டம் உருவாக்கப்பட்டு பள்ளிக… செயல்படுத்த வேண்டும்.

i) மாணவரது நல்லொழுக்க வளர்ச்சிக்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் உதவ வேண்டும். இதற்காக வாரத்திற்கு இரண்டு பாடவேளைகள் ஒதுக்கப்படுவது நல்லது.

j) நுண்கலைக் கல்வியின் வளர்ச்சிக்கும் திட்ட மிடவேண்டும். மாணவர்களது ஆக்கத்திறன் கற்பனைத்திறன் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் உதவவேண்டும்.

k) மனையியல் கல்வி (Home Science) பெண்களுக்கு போதிக்கப்படுதல் அவசியம். இசை, பிற நுண்கலைகள் ஆகிய வற்றுக்கும் பெண்கல்வியில் முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும்.

l) கல்வி ஏற்பாட்டினை சீர்திருத்தும் முயற்சியுடன் இணைந்த வகையிலேயே கற்பித்தல் முறைகள், மதிப்பீட்டு முறைகள் ஆகியவற்றில் சீர்திருத்தங்கள் செய்யப்படல் வேண்டும்.

m) மாணவர்களுக்கு வழிகாட்டுதலுக்கும, அறிவுறை கூறுதலுக்கும் (Guidance and Counselling) ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

n) மதிப்பீடு கல்வி நோக்கங்களுடன் இணைந்ததாகும் . புதிய மதிப்பீட்டு முறைகளின் உதவியுடன் எழுத்துத் தேர்வின் நம்பகத்தன்மை உயர்த்தப்பட வேண்டும்.

இவ்வாறு கோத்தாரி குழு அறிக்கையில் இந்தியக் கல்வியில் எல்லா மாநிலங்களிலுமே புரட்சிகரமான மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

## புதிய கல்விக் கொள்கை :
## New Educational Policy, 1986.

*1968-ம்* ஆண்டு உருவாக்கப்பட்ட தேசியக்கல்விக்கொள்கை சரியாக செயல்படுத்தப்படவில்லை. பல நடைமுறைச் சிக்கல்கள் தோன்றின. ஆரம்பக்கல்வியிலிருந்து ஆராய்ச்சிக்கல்விநிலை வரை இந்தியக் கல்வி குழப்பத்திலேயே இருந்து வந்தது. எனவே பிரதமர் ராஜீவ்காந்தி காலத்தில் இந்திய கல்விமுறையைச் சீரமைக்கும் நோக்கத்துடன் புதியகல்விக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

*1985-* ஆகஸ்ட் 15-ம் தேதி சுதந்திரதினத்தன்று ராஜீவ்காந்தி இந்தியாவில் புதியக் கல்விக்கொள்கையை செயல்படுத்தப் போவதாக அறிவித்தார். அதன்படி அப்போதைய கல்விஅமைச்சர் கே.சி பந்த் 'புதிய கல்விக் கொள்கை' பற்றி ஆவணத்தை மக்களவையில் செப்டம்பர் மாதம் சமர்பித்தார். இந்த புதிய கல்விக்கொள்கை நான்கு முக்கிய அம்சங்களைக் கொண்டது. அவை,

a) கல்வி, சமுதாயம், வளர்ச்சி பற்றியவை.

b) இந்தியக்கல்வி வளர்ச்சி பற்றிய கண்ணோட்டம்.

c) இந்தியக்கல்வி முறை பற்றிய மதிப்பீடு.

d) கல்விச் சீரமைப்புக்கான அணுகுமுறை.

இவ்வாறு ராஜீவ்காந்தியின் புதியகல்விக்கொள்கை வளர்ச்சி, ஒருமைப்பாடு, தரம், முதன்மைநிலை ஆகிய முக்கிய அம்சங்களைக் கொண்டு விளங்கியது.

## புதியகல்விக்கொள்கையின் முக்கியநோக்கங்கள் பின்வருமாறு :

a) அனைவருக்கும் ஆரம்பக்கல்வியை கட்டாயமாக அளித்து 1995-ம் ஆண்டுக்குள் நூறுசதவீதம் எழுத்தறிவு நிலையை அடைதல்.

b) மேல்நிலைக் கல்வியில் தொழிற் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல்.

c) உயர்கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வியை நவீன மயமாக்குதல்.

d) இந்திராகாந்தியின் பெயரில் ஒரு திறந்த வெளிப் பல்கலைக் கழகம் அமைத்தல்.

e) ஒவ்வொரு மாவட்டத்திலும் அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட 'நவோதயா பள்ளிகளை' அமைத்தல்.

f) ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ளது போல பிற மாநிலங்களிலும் 'மாவட்ட கல்வி மையங்களை' அமைத்தல்.

g) உயர்கல்விக்கு அளிக்கப்படும் மானியத்தைப் படிப்படியாகக் குறைத்தல்.

h) ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துதல்.

i) தொழிற்கல்விக்கான வசதிகளை அதிகப்படுத்துதல்.

ராஜீவ்காந்தியின் இந்த புதிய கல்விக் கொள்கையின் பல்வேறு அம்சங்கள் குறித்து நாடு முழுவதும் விவாதம் நடத்தப்பட்டது. கல்வியாளர்கள் பங்குபெற்ற கருத்தரங்குடன், மாநாடுகள் நடத்தப் பட்டன. 1986-ல் பாராளுமன்றம் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டது. பின்னர் அதனை செயல்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக நாடு முழுவதிலும் செயல்குழுக்கள் (Task Force) அமைக்கப்பட்டன.

ஆரம்பக்கல்வியை சீரமைக்க 'கடும் பலகைத் திட்டம்' ஆரம்பிக்கப்பட்டது. பல மாவட்டங்களில் தரமான நவோதயா பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. மேல்நிலைக் கல்வியில் தொழிற் படிப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. பல கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் நவீன மயமாக்கப்பட்டன. கல்லூரி ஆசிரியர்களுக்கு புத்தொளி பயிற்சியளிக்க பல ஆசிரியர் பயிற்சிமையங்கள் துவங்கப்பட்டன. பல கல்லூரிகள் தன்னாட்சிக் கல்லூரிகளாக உயர்வு பெற்றன. இவ்வாறு ராஜீவ்காந்தியின் ஆட்சிக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்விக் கொள்கையின் பயனாக இந்தியாவில் ஒரு கல்விப் புரட்சியே நடைபெற்றது. இந்தியக் கல்வி வரலாற்றில் இந்த 'புதிய கல்விக் கொள்கை' முக்கிய மைல்கல்லாக விளங்குகிறது.

# I. ஆரம்பக்கல்வி : Elementary education

## அ) 93-வது அரசியலமைப்புத் திருத்தம் :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள அரசு வழிகாட்டி நெறிகள் பகுதியில் 45-வது பிரிவில் 'அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த பத்தாண்டுகளுக்குள் '14வயதுக்குட்பட்ட அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்க வேண்டும்' என்று பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால் இதற்கு முரணான கருத்துக்களைக் கொண்ட முடிவுகளை கர்நாடக அரசு, ஆந்திர அரசுகள் எடுத்தன. 1997-ம் வருட தமிழ்நாடு கட்டாயக் கல்விச் சட்டத்தில் 'இலவசம்' என்ற சொல் இல்லை. எனவே மத்திய அரசு புதிதாக ஒரு மசோதா தயாரித்தது. அது 93-வது அரசியலமைப்புத் திருத்தமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி '6 முதல் 14 வயது வரை எல்லோருக்கும் கட்டாய இலவசக்கல்வி அடிப்படை உரிமையாக்கப்பட்டுள்ளது. தனியார் பள்ளிகளுக்கு அளிக்கப்பட்ட விலக்கு நீக்கப்பட்டுள்ளது. ஆனால் 6 வயதுக்கு முற்பட்ட பருவத்திற்கு கல்வியளிப்பது ஒரு நெறிக்கொள்கையாகவே உள்ளது. இதனால் பெற்றோர்களின் பொறுப்பு தொடர்கிறது.

மத்திய மாநில அரசுகள் எடுத்த முயற்சிகளின் விளைவாக 94 சதவீத கிராமப்புற மக்களுக்கு ஒரு கி.மீ தொலைவிற்கு ஒரு ஆரம்பப்பள்ளி வீதமும், 84 சதவீதம் மக்களுக்கு மூன்று கி.மீ. தொலைவிற்கு உயர்தர ஆரம்பபள்ளியும் அமைக்கப்பட்டுள்ளது. ஆறுவயது முதல் 14 வயது வரை பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை 87 சதவீதமாக உயர்ந்துள்ளது. 1996-97ம் ஆண்டுகளில் உயர்தர ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கை இந்தியாவில் 2.23 லட்சமாக உயர்ந்துள்ளது. ஆரம்பப்பள்ளிகளில் இடையே படிப்பை நிறுத்திவிடும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆரம்பக்கல்வியை மக்களிடம் பிரபலப்படுத்த

திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மாநிலக்கல்வி அமைச்சர்களைக் கொண்ட தேசியக் கமிட்டி ஒன்று மத்திய மனிதவள வளர்ச்சிதுறை அமைச்சரின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் மத்திய திட்டத்தின் 48 சதவீதம் ஆரம்பக்கல்விக்கே செலவு செய்யப்பட்டது. வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாக ஆரம்பக்கல்வி குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதை மக்களிடம் எடுத்துச் சொல்லும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## b) முறைசாராக்கல்வி : Non Formal Education

இந்திய அரசாங்கத்தின் கல்வித்துறை 1979 - 80' ஆண்டிலிருந்து பல்வேறு காரணங்களால் பள்ளிகளில் சேர்ந்து படிக்க முடியாமல் போகும் 6 முதல் 14-வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கல்விஅளிக்க 'முறைசாரா கல்வி' என்ற திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. பள்ளிப்படிப்பை தொடர முடியாமல் போன குழந்தைகள், பள்ளிகளில் சேர முடியாத பெண் குழந்தைகள், வேலை செய்து கொண்டிருக்கும் சிறுவர்கள், பெற்றோர்களுக்கு உதவியாக வீட்டு வேலைகளை செய்து கொண்டிருக்கும் சிறுவர்கள் ஆகியோர் இந்த திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுகின்றனர். முறை சாராக் கல்வியளிப்பதற்காக நாடு முழுவதும் 2.97 லட்சம் தன்னார்வ மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 74.25 லட்சம் சிறுவர்கள் கல்வி கற்று வருகின்றனர். மாணவிகளுக்காக மட்டும் தனியாக 1.17 லட்சம் மையங்கள் உள்ளது. இந்த மையங்களுக்கான நிதி உதவியை மத்திய அரசே வழங்குகிறது.

சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினர் மத்தியில் உள்ள 5 முதல் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களிடம் காணப்படும் படைப்பார்வத்தையும், தன்னூக்கத்தையும் (Greativity) வளர்க்க 'தேசியபால் பவன்' (National Bal Bhavan) என்ற சுயாட்சி பெற்ற அமைப்பு செயல்பட்டு வருகிறது.

## c) மாவட்ட ஆரம்பக்கல்வித் திட்டம் :
## District Primary Education Programme - DPEP

ஆரம்பக்கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்தல் என்ற குறிக்கோளுடன் 1994-ல் மாவட்ட ஆரம்பக்கல்வித் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. மேலும் இத்திட்டம் 'எல்லா குழந்தைகளுக்கும் ஆரம்பக்கல்வி கிடைக்கும் வசதி செய்து கொடுத்தல், இடையிலேயே பள்ளிப்படிப்பை விட்டு விடும் அளவை பத்து சதவீதமாக குறைத்தல், கல்வி கற்றல் 25 சதவீதம் அதிகரித்தல், பாலின மற்றும் சமூக இடைவெளியை ஐந்து சதவீதமாகக் குறைத்தல் ஆகியவைகளை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த திட்டத்தினை செயல்படுத்தும் அலகு மாவட்டம் ஆகும்.

இது ஒரு மத்திய அரசுத்திட்டமாகும். இத்திட்டத்திற்கு ஆகும் செலவில் 85 சதுவீதத்தை மத்திய அரசும், 15 சதவீதத்தை மாநில அரசுகளும் ஏற்றுக் கொள்கின்றன. 1994-ல் இத்திட்டம் ஏழுமாநிலங்களில் உள்ள 42 மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் தற்போது 14 மாநிலங்களிலுள்ள மொத்தம் 163 மாவட்டங்களில் செயல்படுத்தப் பட்டுள்ளது.

### D) கரும்பலகைத்திட்டம் (Operation Black Board Scheme, 1987

ஆரம்பப்பள்ளிகளில் தேவைப்படும் ஆசிரியர்களையும், பிற வசதிகளையும் செய்து கொடுப்பதற்காக 1987-1988 ல் கருப்பலகைத் திட்டம் துவங்கப்பட்டது. இதன்படி ஒரு ஆசிரியர் உள்ள பள்ளிகளில் கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட்டார். 1993-ல் மூன்றாவது ஆசிரியர் நியமிக்கப்பட்டார். 1987-1988 முதல் 2000 - 2001 முடிய 5,22,902 கற்பிக்கும் உபகரணங்கள் வாங்க ஆரம்பப் பள்ளிகளுக்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு முழு உதவி அளித்தது. ஆனால் பள்ளிக்கட்டிடங்கள் கட்டும் பொறுப்பு அந்தந்த மாநில அரசுகளையே சாரும். அனைவருக்கும் கல்வி என்ற லட்சியத்தை அடைய ராஜஸ்தானில் 1997-98 ல் லோக்ஜம்பிஷ் (Lok Jumbish) என்ற திட்டம் தொடங்கப்பட்டு செயல் படுத்தப்பட்டது.

### e) ஆரம்பக்கல்விக்கு ஆதரவான தேசிய சத்துணவுத் திட்டம் : (National Programme of Nutritional Support to Primary Education)

ஆரம்பக்கல்விக்கு ஆதரவான தேசிய சத்துணவுத் திட்டம் 1995 ஆகஸ்ட் 15-ம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கம் ஆரம்பப் பள்ளியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது, தினசரி வருகையை மேம்படுத்துவது ஆகியவற்றுடன் மாணவர்களின் உடல் நலத்தை பேணுவதும் ஆகும். இதற்காக 2001-2002ல் 930 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

## II. இடைநிலைக் கல்வி : Secondary Education

### a) இடைநிலைக்கல்வியின் வளர்ச்சி விகிதம் :

1950ம் ஆண்டு முதல் 1999-ம் ஆண்டு வரையிலான இடைநிலைக் கல்வி வளர்ச்சி விகிதம் கீழே கொடுக்கப்படுகிறது. கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை உயர்வு 1716லிருந்து 1.10 லட்சம்; மாணவிகளின் எண்ணிக்கை உயர்வு 13.3 சதவீதத்திலிருந்து 37.1 சதவீதம்; மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கை உயர்வு 2 லட்சத்திலிருந்து 101 லட்சம்; பள்ளிப்படிப்பை இடையில் விட்டுவிடும் சதவீதம் 69; ஆசிரியர்களின் எண்ணிக்கை 15 லட்சத்திலிருந்து 272 லட்சமாக உயர்வு;

697 ஆசிரியப் பயிற்சி கல்லூரிகளில் 1.16 லட்சம் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பு: 1998-ம் ஆண்டு முடிய நாடு முழுவதும் 857 கேந்திரிய வித்யாசாலைகளும், 400 நவோதய வித்யாசாலைகளும் நாடு முழுவதும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இதற்காக ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் 759.18 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### b) தொழிற்கல்வி : Vocational Education

1986-ம் வருட தேசிய கல்வித் துறையில் தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந்த திட்டம் 1992-ல் திருத்தி அமைக்கப்பட்டது. அதன்படி +2 மாணவர்களில் பத்து சதவீதம் பேரை தொழிற்கல்வி பயில திருப்பிவிடப்படுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன்படி 1998- பிப்ரவரியில் இடை நிலைக்கல்வியில் தொழிற்கல்வியை அறிமுகப்படுத்தும் மத்திய அரசின் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன்படி மாநிலங்களில் +1, +2 படிப்புகளில் தொழிற்கல்வியை அறிமுகப்படுத்தவதற்குத் தேவையான நிதிஉதவி அளிக்கப்பட்டு வருகிறது. இதன்படி தொழிற்கல்விப் பிரிவில் 9.33 லட்சம் மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். விவசாயம், தொழில், வாணிபம், பொறியியல், தொழில் நுட்பம், மருந்தியல், கலையியல், மனையியல் ஆகிய துறைகளில் மொத்தம் 150 தொழிற்கல்வி பாடப்பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன.

### c) இயலாத சிறுவர்களுக்கான ஒருங்கிணைந்த கல்வி : (Integrated Education for Disabled Children)

நடைமுறையில் செயல்படும் பள்ளிகளில் சேர்ந்து படிக்க இயலாத சிறுவர்களுக்காக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த திட்டத்திற்கான முழு நிதி உதவியையும் மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்குகிறது. இதன்படி படிக்க முன்வரும் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வாங்குவதற்கும், ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கும் மையங்கள் (Resource Centres) அமைக்கப்பட்டுள்ளது 1995-ம் வருடம் இயற்றபட்ட 'இயலாமையிலுள்ளவர்களுக்கான சட்டம் (Presons with Disabilities Act) திற்குப் பிறகு இந்த கல்வித்திட்டம் முக்கியத்துவம் பெற்றுவருகிறது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்காக நூறு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் முதல் நான்கு ஆண்டுகளில் மட்டும் 46 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது.

### d) கலாச்சார, மதிப்பு மேம்பாட்டு கல்வி : (Promotion of Culture and Value in Education)

தேசியக் கல்விக் கொள்கையில் 'இந்தியாவின் பொதுவான கலாச்சார பாரம்பரியக் கல்வி'க்கு முக்கியத்துவம் கொடுக்க

பட்டுள்ளது. இதன்படி அரசு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு கல்வியின் கலாச்சார, Value அம்சத்தை வலுப்படுத்து வதற்காக ஒரு திட்டம் (Cheme) தொடங்கப்பட்டது. இந்த திட்டம் முறைக்கல்வியிலும், முறைசாராக் கல்வியிலும் 'கலாச்சார மற்றும் மதிப்பு (Value) கல்வியை வலுப்படுத்துவது கலை, கைவினை, இசை மற்றும் நாட்டிய ஆசிரியர்களுக்கு பயிற்சியளிப்பது ஆகிய இரண்டு கூறுகளைக் கொண்டுள்ளது. இதற்காக 1999-2000 ல் 123 லட்சரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### e) தேசிய மக்கள் தொகைக் கல்வித்திட்டம் :
**National Population Education Project**

இந்த திட்டம் 1950 ஏப்ரல் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் 'மக்கள் தொகைக் கல்வியை' பள்ளி கல்வித்திட்டத்தின் கீழ் ஒரு அங்கமாக சேர்த்துக் கொள்ளப்படுதல் ஆகும். இத்திட்டத்தை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் நடைமுறைப் படுத்திவருகிறது. 'ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதித்திட்டத்திலிருந்து தற்போது முப்பது மாநிலங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூன்று சுற்று செயல்பாடுகள் முடிந்து விட்டன. நான்காவது சுற்று 1998, ஜுன் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

### f) மாணவிகளுக்கான உணவு மற்றும் விடுதி வசதிகள் :

இந்த திட்டப்படி இடைநிலை மற்றும் மேல் நிலைப்பள்ளிகளில் கிராமப்புறப் பகுதிகளிலிருந்தும், நலிவடைந்த பிரிவிலிருந்தும் வந்து படிக்கும் மாணவிகளுக்கு தங்கிப்படிக்கும் விடுதி வசதிகளை மேம்படுத்த தன்னார்வ நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்யப்பட்டு வருகிறது. கல்வியில் பின் தங்கியுள்ள தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் அதிகமாக வாழும் மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. உணவு, விடுதிக்காப்பாளர் மற்றும் சமையல் செய்பவர்களுக்கு ஆகும் செலவு ஆகியவை உட்பட வருடத்திற்கு ரூ. 5000 வீதம் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் பயிலும் ஒரு மாணவிக்கு நிதிஉதவி அளிக்கப்படுகிறது. மேலும் மேஜை, நாற்காலி மற்றும் உபயோக பாத்திரங்கள், புத்தகங்கள் விளையாட்டு சாமான்கள் ஆகியவை வாங்க ஒரு மாணவிக்கு ரூ. 1500/- வழங்கப்படுகிறது.

### g) பள்ளிகளில் கம்ப்யூட்டர் கல்வி அறிவுத் திட்டம் :
**(Computer Literary and Studies in Schools - CLASS)**

பள்ளிகளில் கம்ப்யூட்டர் கல்வியை அறிமுகப்படுத்தும் முன்னோக்குத் திட்டம் 1984-85ல் மின்னணுத்துறையின் உதவியுடன் தொடங்கப்பட்டது. இது ஒரு மைய அரசின் திட்டமாக 1993-94ல்

மாறியது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாடு முழுவதும் 2371 பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1999, ஏப்ரல் 1 முதல் இத்திட்டம் செயல்படவில்லை.

### h) பள்ளிக் கல்வியில் சுற்றுச்சூழல் பயிற்சி திட்டம் :

1980-ம் வருட புதிய கல்வித் திட்டப்படி சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல் என்பது கல்வியின் ஒருங்கிணைந்த பகுதியாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இந்த உயர்ந்த நோக்கத்தை பள்ளி மாணவர்களிடம் செயல் முறைப்படுத்த வேண்டும் என்பதே இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். மைய அரசு பரிசீலனை செய்த இத்திட்டம் 1888-'89ல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்திட்டப்படி உள்ளூர் சுற்றுச்சூழலின்படி பள்ளிகளில் ஒருங்கிணைந்த கல்வித்திட்டத்தை மேம்படுத்த தன்னார்வ நிறுவனங்களுக்கு உதவியளிக்கப்படுகிறது.

### பள்ளிகளில் அறிவியல் கல்வி : Science Education in Schools.

1986-ம் வருட தேசியக் கல்விக் கொள்கையின்படி அறிவியல் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும், அறிவியல் உணர்வை வளர்க்கவும் 'பள்ளிகளில் அறிவியல் கல்வியின் மேம்பாட்டுத் திட்டம்' ஒன்று 1987-88ல் தொடங்கப்பட்டது. தன்னார்வ நிறுவனங்களுக்கு உதவி அளிப்பதுடன் ஆரம்பப் பள்ளிகளில் அறிவியல் உபகரணங்கள் வாங்க நிதி உதவி செய்யப்படுகிறது. மேல்நிலைப்பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

### தேசிய திறந்த வெளிப்பள்ளி : National Open School

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னாட்சி நிறுவனமான 'தேசிய திறந்த வெளிப்பள்ளி' 1989-ல் நிறுவப்பட்டது. இதன் மூலம் பள்ளிக் கல்வியை பள்ளிகளில் சேர்ந்து படிக்காமல் தொடர் கல்வியாகப் படித்து முடிக்கலாம். அடிப்படைநிலை, இடைநிலை, மேல்நிலை ஆகிய மூன்று நிலைகளில் கல்வி கற்கலாம். இதில் வாழ்க்கைக்கு தேவைப்படும் பல பாடப்பிரிவுகள் உள்ளன. தங்கள் விருப்பப்படி எதையும் எடுத்து படிக்கலாம். பள்ளிகளில் சேர்ந்து படிக்க முடியாத 6-14 வயதுள்ள சிறுவர்களுக்கு திறந்தவெளி அடிப்படைக் கல்வியளிக்கப்படுகிறது. பள்ளி படிப்பை தொடர முடியாமல் விட்டவர்கள், கிராமப்புற சிறுமிகள், பெண்கள், தாழ்த்தப்பட்ட பிரிவினர் ஊனமுற்றவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இந்தியாவிலும் வெளிநாட்டிலும் இதன் 1459 மையங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## நவோதயா வித்யாலயா : Navodaya Vidyalaya

1986-ம் வருட தேசியக் கல்விக் கொள்கை, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாதிரிப்பள்ளி நிறுவப்படுவதற்கு முக்கியத்துவம் அளித்தது. அதற்கான திட்டம் வரையறுக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் நவோதயா பள்ளிகள் நிறுவப்பட முடிவு செய்யப் பட்டது. இது இருபாலர் சேர்ந்து தங்கிப்படிக்கும் பள்ளியாகும். (Co-Educational and Residential). 1985-86ல் இரண்டு பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது அதன் எண்ணிக்கை 446-ஆக உயர்ந்துள்ளது. அதில் 1.27 லட்சம் மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

இதன் மூலம் கிராமப்புறங்களில் உள்ள நல்ல கல்வி வசதி கிடைக்காத அறிவில் சிறந்த மாணவர்களின் திறமையைக் கண்டுபிடித்து அதனை வளர்க்க முடிகிறது. இப்பள்ளிகளில் 33 சதவீதம் மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். 30 சதவீத மாணவர்கள் தங்களின் சொந்த பகுதிகளிலிருந்து வேறு மொழிப் பகுதியிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்பட்டு அதன் மூலம் அந்த மாணவர்களிடம் கலாச்சார ஒற்றுமை, தேசிய ஒற்றுமையுணர்வு வளர்க்கப்படுகிறது.

இவை தவிர தேசிய ராணுவத்துறையில் பணியாற்றுபவர்கள் ...ட்பட வேலை மாற்றம் செய்யப்படும் மத்திய அரசு ஊழியர்களுக் ...காகவே 'கேந்திரிய வித்யாலயா' (Kendriya Vidhyalaya) என்ற பள்ளிகள் ...டெங்கிலும் அமைக்கப் பட்டுள்ளன. இதன் முக்கிய அம்சம் ...னவென்றால் எல்லா கேந்திரிய வித்யாலயாக்களும் ஒரே மாதிரியான ...த்திட்டத்தைப் பின்பற்றுவதாகும். தற்போது 874 கேந்திரிய ...த்யாலயாக்கள் உள்ளன. அவற்றில் ஒன்று காத்மண்டுவிலும், ...ற்றொன்று மாஸ்கோவிலும் உள்ளது.

## ...வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசியக்கவுன்சில் : ...National Council of Educational Research and Training - NCERT)

இந்த அமைப்பு 1961-ல் அமைக்கப்பட்டது. இது ஒரு உச்ச ஆதார ...மாகும். இதன் தலைமையிடம் புதுடெல்லியில் உள்ளது. இந்த ...ப்பு மத்திய மாநில அரசுகளுக்கு பள்ளிக்கல்வி தொடர்பான ...சனைகளையும் உதவிகளையும் அளித்து வருகிறது. இந்த ...பிற்கான முழு பண உதவியும் மத்திய அரசே கொடுக்கிறது. இந்த ...RT, பள்ளிக்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக கல்வி ...யிலான, தொழில் நுட்ப ரீதியிலான ஆதரவை அளித்து வருகிறது. ...ம் இந்த கவுன்சில பள்ளிக்கல்வி ஆராய்ச்சிக்கும், ஆசிரியர் ...க்கும் முக்கியத்துவம் அளிக்கிறது.

பள்ளி ஆசிரியர்களுக்கு உள்பயிற்சி (In Service) அளித்தல், ...க்கப்பட்ட கல்வி நுட்பங்களை நடைமுறைப் படுத்துதல்,

புதுமையான கல்விபோதனையை புகுத்துதல், கல்வி தொடர்பான தகவல்களைச் சேகரித்து வைத்தல் போன்ற நடவடிக்கைகளில் இந்த கவுன்சில் ஈடுபட்டு வருகிறது. புதிய பாடத்திட்டத்தை வகுத்து அதற்கான பாடப்புத்தகங்களையும் வெளியிடுகிறது.

**ஆசிரியர்களுக்கான தேசிய விருது :**

ஒவ்வொரு ஆண்டும் செப்.5-ம் தேதி ஆசிரியர்தினமாக கொண்டாடப்படுகிறது. இது கல்வியாளரும், இந்திய குடியரசுத் தலைவருமாக இருந்த டாக்டர் ராதாகிருஷ்ணனின் பிறந்தநாள் ஆகும். ஆரம்பப்பள்ளி மற்றும் இடைநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. 15 ஆண்டுகள் தொடர்ச்சியான கல்வி சேவை செய்துள்ளவர்கள் இந்த விருதுகளுக்கு தகுதியுடையவர்கள் ஆவர். தலைமை ஆசிரியராக இருந்தால் 20 வருடம் கல்விபணியாற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலங்களிலும் தேர்வுக்குழு அமைக்கப்பட்டு மாவட்டவாரியாக ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பும். அந்த ஆசிரியர்களின் பட்டியலை மத்திய அரசு ஆராய்ந்து தகுதிஅடிப்படையில் விருது வழங்கும். இந்த விருது ஒரு நற்சான்றிதழும், வெள்ளிப்பதக்கம் மற்றும் ரொக்கமாக 25,000 ரூபாய் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும்.

## III. பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி :

### University and Higher Education

இந்தியாவில் உள்ள 259 பல்கலைக்கழகங்கள் மூலமாக உயர்கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இவைகளில் 16 மத்திய பல்கலைக் கழகங்கள் மாநில சட்டங்களின்படி செயல்பட்டு வருகின்றன. இவை தவிர 49 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் (Deemed Universities) 1956 ம் வருட பல்கலைக்கழக மானியக் குழு சட்டப்படி அமைக்கப்பட்டு செயல்படுகின்றன. இந்தியாவில் மொத்தம் உள்ள 11,089 கல்லூரிகளில் 74.18 லட்சம் மாணவர்கள் பயின்று வருகின்றனர். 3.42 லட்சம் ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

**a) பல்கலைக்கழக மானியக் குழு : University Grants Commission**

இது 1956-ல் பாராளுமன்றச் சட்டப்படி அமைக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் பல்கலைக்கழக கல்வியை மேம்படுத்தி ஒருங்கிணைத்தல், கற்பிக்கும் தரத்தை நிலை நிறுத்துதல், பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சி மற்றும் தேர்வுகளின் தரத்தை மேற்பார்வையிடுதல் ஆகியவையாகும். இந்த நோக்கங்களை நிறைவேற்ற UGC மானியக்குழு பல்கலைக் கழகங்களின் நிதித் தேவைகளைக் கண்டறிந்து

நிதி ஒதுக்கீடு செய்கிறது. பல்கலைக்கழகக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான கருத்துக்களை பரிந்துரை செய்கிறது. மேலும் புதிய பல்கலைக் கழகங்கள் அமைப்பது தொடர்பான ஆலோசனைகளையும் வழங்குகிறது.

## b) தன்னாட்சி பெற்ற ஆராய்ச்சி நிறுவனங்கள் :

வரலாற்று ஆராய்ச்சியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிபற்றி ஆய்வு செய்யவும், வரலாற்றை அறிவியல் அணுகுமுறையுடன் எழுதுவதை ஊக்கப்படுத்தவும் 'இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கவுன்சில்' (Indian Council of Historical Research - ICHR) *1972*-ல் அமைக்கப்பட்டது. இது ஆராய்ச்சி திட்டங்களைச் செயல்படுத்துதல், தனிப்பட்ட ஆராய்ச்சி மாணவர்களின் ஆராய்ச்சி திட்டங்களுக்கு நிதிஉதவி அளித்தல், புதிய வெளியீடுகளைச் செய்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது.

'இந்திய தத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில்' (Indian Council of Philosophical Research - ICPR) *1981*-ல் அமைக்கப்பட்டது. இதன் அலுவலகங்கள் புது டில்லியிலும், லக்னோவிலும் உள்ளது. இது தத்துவ ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதி உதவி செய்து ஊக்கப்படுத்தி வருகிறது. அடுத்து, *1965*-ல் 'இந்திய சிறப்பு ஆய்வு நிறுவனம்' (Indian Institute of Advanced Study - IIAS) ஒன்று சிம்லாவில் அமைக்கப்பட்டது. இது கலையியல், சமூக அறிவியல், இயற்கை அறிவியல் ஆகிய துறைகளில் சிறப்பு ஆராய்ச்சி திட்டங்களை ஊக்கப்படுத்தி வருகிறது. இதேபோல் 'இந்திய சமூக அறிவியல் ஆராய்சி கவுன்சில்' (Indian Council of Social Science Research - ICSSR) ஒன்று புது டில்லியில் அமைக்கப்பட்டுள்ளது. இது சமுதாய அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபடும் தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் நிதி உதவி அளித்து ஆராய்ச்சி திட்டங்களை ஊக்கப்படுத்தி வருகிறது.

அடுத்து, மகாத்மா காந்தியின் புரட்சிகரமான கல்விக் கருத்துக்களின் அடிப்படையில் கிராமப் புறங்களில் உயர் கல்வியை மேம்படுத்துவதற்காக 'கிராமப்புற நிறுவனங்களுக்கான தேசியக் கவுன்சில் (National Council of Rural Institutes) ஒன்று *1995* அக். *15*-ல் அமைக்கப்பட்டது. இது மத்திய அரசின் நிதி உதவி பெறும் ஒரு தன்னாட்சி நிறுவனமாகும்.

## இந்திராகாந்தி திறந்தவெளி பல்கலைக்கழகம் :
**(Indira Gandhi National Open University - IGNOU)**

இது *1985*- செப்டம்பர் மாதம் இயற்றப்பட்ட பாராளுமன்ற சட்டப்படி அமைக்கப்பட்டது. இந்த பல்கலைக் கழகத்தின் முக்கிய நோக்கம் உயர்கல்வியை அதிக அளவிலான மக்களுக்கு தொலை தூரக்

கல்வித்திட்டம் மூலமாக அளிப்பதேயாகும். பல்கலைக் கழக அளவிலான கல்வியை கற்பிப்பதில் புதிய முறைகள் பின்பற்றப் படுகின்றன. இப்பல்கலைக்கழகம் தயாரித்து வெளியிடும் பாடங்கள் உயர்ந்ததரமுடையவை. மேலும் ஒலி, ஒளி சாதனங்கள் மூலமும் இப்பல்கலைக்கழக பாடங்கள் நடத்தப்படுகின்றன. தொடர்ச்சியான மதிப்பீடு, வருட இறுதித் தேர்வுகள் ஆகியவை மூலம் மாணவர்களின் கல்வித்தகுதி மதிப்பிடப்படுகின்றன.

இந்தப் பல்கலைக்கழகம் இதுவரை 62 பாடப்பிரிவுகளை அறிமுகப் படுத்தி நடத்தி வருகிறது. 2001-ல் இப்பல்கலைக் கழகத்தில் 1.91 லட்சம் மாணவர்கள் சேர்ந்து பயின்று வருகின்றனர். நாடு முழுவதும் 44 பிராந்திய மையங்களும், 626 பயிற்சி மையங்களும் உள்ளன. 2000 ஜன-26,ல் இப்பல்கலைக்கழகம் தனக்கென்று தனியாக கியாந்தர்ஷன் (Gyandarshan) என்ற வானொலி அலைவரிசையை ஆரம்பித்துள்ளது.

இந்திராகாந்தி திறந்த வெளிப்பல்கலைக்கழகம் போல நமது நாட்டில் மேலும் ஒன்பது திறந்தவெளி பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன.

## தொழில் நுட்பக் கல்வி : Technical Education

மனிதவள மேம்பாட்டுக்கான மிக முக்கியமான கூறு தொழில் நுட்பக் கல்வியாகும். இந்த கல்வி உற்பத்தி மற்றும் பணிகளின் மதிப்பை அதிகரித்து தேசிய பொருளாதரத்திற்கு பெரும் பங்களிப்பு செய்கிறது ஐந்தாண்டுத்திட்டங்கள் தொழில் நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்துள்ளன. கடந்த ஐம்பது ஆண்டு காலத்தில் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. மத்திய மாநில அரசுகளின் தொழில்நுட்ப நிறுவனங்கள், அரசு உதவி பெறும் நிறுவனங்கள், சுயநிதி நிறுவனங்கள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இவைகள் எல்லாம் மத்திய அரசினால் அமைக்கப்பட்டுள்ள 'அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் கவுன்சிலால் (All India Council for Technical Education - AICTE) அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனங்கள் ஆகும். தற்போது உள்ள மொத்த தொழில் நுட்ப நிறுவனங்களில் 80 சதவீதம் சுயநிதி நிறுவனங்களாகும். பொறியியல் கல்லூரிகளில் மட்டும் 2001-2002ல் 2,71,719 மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள்.

சென்னை, மும்பை, டெல்லி, கான்பூர், கார்காபூர், கௌகாத்தி ஆகிய ஆறு இடங்களில் இந்திய தொழில் நுட்ப நிறுவனங்களும் (Indian Institute of Technology - IIT) அகமதாபாத், கோல்கத்தா, பெங்களூர் லக்னோ, இந்தூர், கள்ளிக்கோட்டை ஆகிய இடங்களில் இந்திய மேலாண்மைக்கல்வி நிறுவனங்களும் (Indian Institute of Management IIM) செயல்பட்டு வருகின்றன. இவைதவிர மத்திய மாநில அரசு

சேர்ந்து நடத்தும் 17 பிராந்திய பொறியியல் கல்வி நிறுவனங்களும் (Regional Engineering Collages) செயல்பட்டு வருகின்றன. பாலிடெக்னிக் கல்லூரிகள் மூலம் ஏராளமான பட்டய பாடப்பிரிவுகள் (Diploma Courses) போதிக்கப் படுகின்றன. இந்தியாவில் பத்தாம் வகுப்பு மற்றும் +2 க்குப் பிறகு படிக்கும் மூன்றாண்டு பட்டயப் படிப்புகளை வழங்கும் 1,215 பாலிடெக்னிக்குகள் உள்ளன. இவைகளில் பொறியியல், தொழில் நுட்பம், மருந்தியல், கட்டிடவியல் போன்ற பாடப்பிரிவுகள் உள்ளன. பாலிடெக்னிக்குகளில் பாதிக்குமேல் சுயநிதி நிறுவனங்களாகும்.

## தேசிய எழுத்தறிவு இயக்கம் : National Literacy Mission

1988-ம் ஆண்டு முழுமையான எழுத்தறிவை ஏற்படுத்த தேசிய எழுத்தறிவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. 15 முதல் 35 வயதுக்கிடைப்பட்ட எழுத்தறிவற்றவர்களுக்கு எழுத்தறிவு அளிப்பதை இந்த இயக்கம் முக்கிய நோக்கமாகக் கொண்டது. இதன்படி 1989-ல் கேரளாவில் எர்ணாகுளத்தில் இந்த இயக்கம் வெற்றியடைந்தது. அங்குள்ள அனைவரும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக அறிவிக்கப்பட்டனர். இது இந்த இயக்கத்துக்கு ஒரு உத்வேகத்தை அளித்தது. இதுவரை இந்தியாவில் 561 மாவட்டங்களில் எழுத்தறிவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு அதன்மூலம் 91.53 மில்லியன் மக்கள் எழுத்தறிவு பெற்றனர். 2001-மக்கள் தொகைக் கணக்குப்படி இந்தியாவில் 562-01 மில்லியன் மக்களில் 56.25 கோடிபேர் எழுத்தறிவு பெற்றவர்களாக உள்ளனர்.

## பெண்கல்வி : Women's Education

பெண்கல்வி இல்லாமல் ஒரு நாட்டு மக்களை கல்வியில் முன்னேற்றமடைந்துள்ளோர் என்று கருதமுடியாது. சுதந்திர இந்தியாவில் பெண் கல்வி முக்கியத்துவம் பெற்றுள்ளது. குடும்ப வாழ்க்கையை நல்ல முறையில் நடத்தவும், குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு நல்ல அடித்தளத்தை அமைக்கவும், எழுத்தறிவின்மையைப் போக்கவும், குடும்ப நலத்திட்டங்கள் போன்ற சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் வெற்றி பெறவும் பெண்கல்வி முக்கியமாகும்.

இந்தியக் குடியரசில் பெண்களுக்கும் ஆண்களைப் போன்ற கல்வி வாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. ராதாகிருஷ்ணன் கல்விக்குழுவின் பரிந்துரையில் உயர் கல்வியில் பெண்களுக்கு வாய்ப்பு அதிகமாக்குதலை வலியுறுத்தியது. ஏ.ஆர். முதலியார் குழு மனையியல் (Home Science) பாடம் அதிக அளவில் பெண்களுக்காக உயர்நிலைப் பள்ளிகளில் அளிக்கப்பட வேண்டுமென்றும், தேவையுள்ள இடங்களில் பெண்களுக்கான பள்ளிகளைத் திறக்க வேண்டுமென்றும் பரிந்துரை செய்தது.

**பெண்கல்வி குறித்து கோத்தாரிக்குழுவின் பரிந்துரைகள் வருமாறு :**

a) பெண்கல்வி முக்கியமானது ஆண் கல்விக்கும், பெண் கல்விக்கும் இடையே காணப்படும் ஏற்றத்தாழ்வு குறைக்கப்பட வேண்டும்.

b) மைய அரசிலும், மாநில அரசுகளிலும் பெண்கல்வியை மேற்பார்வையிட தனி நிர்வாகப் பிரிவு தேவை.

c) பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் பற்றியும் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். பெண்கல்வி ஒரு தேசிய பிரச்சனையாக உணரப்பட வேண்டும்.

1976-ம் ஆண்டு நவம்பர்மாதம் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினால் டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் தலைமையில் அமைக்கப்பட்ட குழு பெண்களுக்கான உயர்கல்வி பற்றிய பயன்மிக்க பல பரிந்துரைகளைச் செய்தது. அவைகள் வருமாறு : பட்ட மற்றும் பட்ட மேற்படிப்புகளுக்கான கல்வி ஏற்பாடு (Curriculum) பெண்களுக்கென தனியாக உருவாக்கப்படல் வேண்டும். மாணவ மாணவியர் விகிதமும் ஆசிரியர்களிடையே ஆண் பெண் விகிதமும் உயர்கல்வி நிறுவனங்களில் 50 : 50 என்று இருத்தல் வேண்டும். இவைதவிர இக்குழு பெண்கல்வி பற்றிய பல்வேறு பிரச்சனைகளையும் ஆராய்ந்து பரிந்துரைகளைச் செய்தது.

பெண்களுக்கான உயர்கல்வியின் தற்போதைய நிலை, பெண்களின் தேவைகளும் பிரச்சனைகளும், குடும்பம் சமுதாயம் நாடு ஆகியவற்றில் பெண்களின் சிறப்பிடம், பெண்களுக்கான உயர்கல்வியின் நோக்கங்கள், பெண்களுக்கான சமமான உயர்கல்வி வாய்ப்புகளை அளித்தல், பெண்களின் உயல்கல்வியும் வேலைவாய்ப்புகளும், பெண்களின் உயர்கல்வியினை கிராமங்களின் இணைந்த வளர்ச்சிக்கு உதவும் வகையில் அமைத்தல் போன்ற பல பரிந்துரைகளை ராஜம்மாள் தேவதாஸ் குழு பரிந்துரை செய்தது.

தற்போது இந்திய அரசு கல்வியின் மூலம் பெண்களின் அந்தஸ்து நிலையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கல்வியில் அவர்கள் அதிக பங்கெடுப்பதற்கு ஏதுவாக அவர்களை அதிகாரம் மிக்கவர்களாக ஆக்குவதில் நம்பிக்கை கொண்டுள்ளது. பெண்களை அதிகாரமுடையவர்களாக ஆக்குவதற்காக பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. இதற்காக 1989-ல் 'மகிழசமாகியா' (Mahila Samakhya) என்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பெண்கள் சமத்துவ நிலையை அடைவதற்காக கல்வி மூலம் அவர்களை அதிகா...

முடையவர்களாக ஆக்குவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். இதன்படி ஆந்திரா, அஸ்ஸாம், பீகார், குஜராத், கர்நாடகா, மத்திய பிரதேசம், உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள 53 மாவட்டங்களைச் சேர்ந்த 8000 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியக்குழு (UGC) பெண்ணியல் (Women's Study) பற்றி ஆராய்ச்சி செய்தவதற்காக நிதி உதவி அளித்து கல்வி நிறுவனங்களை ஊக்குவித்து வருகிறது. தற்போது 22 பல்கலைக் கழகங்களிலும், 11 கல்லூரிகளிலும் பெண்ணியல் மையங்கள் அமைக்கப்படுவதற்கு இந்த மானியக்குழு உதவி செய்து உள்ளது.

இவ்வாறு இந்தியாவில் அனைத்துப் பிரிவினரின் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.